Not for sale

நவம்பர் - டிசம்பர் 2010

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




## இவர்கள் எங்கு தவறினார்கள்?

இஸ்ரயேல் • பிலேயாம் • ஏலி

சவுல் • தாவீது • யோவாஸ் • உசியா

இவர்கள் எங்கு தவறினார்கள்?

# ஆதியிலே

"கடந்த காலத்தை நினைவில் கொள்ளாதவர்கள், மீண்டும் அதே காரியங்கள் நிகழும்படி அவர்களுக்கு தீர்ப்பளிக்கப்படுகிறது" என்று தத்துவ ஞானி ஜார்ஜ் சான்ட்டாயனா எழுதுகிறார். கடந்த காலத்தில் நடந்த தவறுகளை நாம் மீண்டும் மீண்டுமாக தொடராதபடிக்கு, அவைகளில் காணப்படும் மாதிரிகளை கண்டு நம்மை சீர்படுத்திக் கொள்ள சிறிதளவு ஞாபகசக்தி போதுமானதாக இருக்கிறது.

தவறான முடிவுகளை எடுத்த அநேகரைக் குறித்து வேதாகமம் விவரிக்கிறது. அவர்கள் அகப்பட்ட சூழ்நிலைகள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்கும் பட்சத்தில் அவர்கள் என்ன செய்திருக்கமுடியும்? புசிக்கவேண்டாம் என்று சொன்ன விருட்சத்தின் கனியை புசித்தபின் பயங்கரமான பின்விளைவுகள் இருக்கும் என்று உண்மையில் ஏவாள் நம்பியிருந்தாளா? மேலும், யோசுவாவையும், காலேபையும் கல்லெறிந்து விட்டு எகிப்திற்கு திரும்பி செல்லும் போது தேவன் ஒவ்வொரு காலையிலும் மன்னாவை தொடர்ந்து தருவாரா என்று இஸ்ரயேல் ஜாதி நினைத்தார்களா? இவை அனைத்தையும் தெளிவாக அறிந்திருந்தார்கள்.

தவறான முடிவுகளை எடுத்தவர்களைப் பற்றியும், அதற்குப்பின் சம்பவித்தவைகளைப் பற்றியும் இந்த ஹெரால்டு பிரதி நோக்குகிறது. மற்றவர்கள் இதிலிருந்த சில முக்கியமான பாடங்களை கற்றுக்கொள்ள ஏதுவாக இவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. (1கொரி 10:11) நாம் பெறும் அனுபவங்கள் மிகச் சிறந்த உபாத்தியாக இருப்பினும், கூர்ந்து கவனிப்பதன் மூலமாக நாம் மேலும் சில விலையுயர்ந்த பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

ஒரு குழுவாக சேர்ந்து எடுத்த முடிவின் நிமித்தம், தேவன் வாக்களித்த தேசத்தை சுதந்தரிக்க நாற்பது வருடங்கள் தாமதிக்கப்பட்டதை குறித்து *இஸ்ரயேல்* என்ற முதல் கட்டுரை ஆராயப்படுகிறது. அவர்களின் வனாந்தர பிரயாணத்தின் முடிவில், அதிகமான பேராசை நியாயமான தீர்ப்பை எவ்வாறாக குருடாக்கிவிடுகிறது என்று இஸ்ரயேல் அல்லாத பிலேயாம் தீர்க்கதரிசியினால் செய்முறையின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

இஸ்ரயேலின் தனிச்சிறப்பு வாய்ந்த நியாயாதிபதியாகிய சாமுயேல், துன்மார்க்கமான பிள்ளைகளைப் பெற்று, தன்னுடைய பொறுப்புகளை அசட்டை செய்த இஸ்ரயேலின் வலுவிழந்த பிரதான ஆசாரியனாகிய - ஏலியின் பராமரிப்பில் நிச்சயமாக வெற்றிகரமாக வளர்ந்ததற்கு எவ்விதமான வாய்ப்பும் இல்லை. சாமுயேல் இஸ்ரயேலை நியாயம் விசாரித்ததை தொடர்ந்து இராஜாக்களின் காலம் துவங்கியது. அதில் சவுல் முதல் இராஜாவாக இருந்தார். அவர் மிக அருமையாக துவங்கினார்; ஆனால், அவரின் முடிவோ மிக தீமையானதாக இருந்தது. தாவீது இரண்டாவது இராஜாவானார். மிகவும் வித்தியாசமானவர், ஆனாலும் இயல்பான மனுஷரைப் போல அவரும் தவறினார். நாம் அறிந்திருக்கிறபடி, தனி நபர்கள் செய்யும் கிரியைகளினால் வரும் பின்விளைவுகளிலிருந்து தனி நபர்களை தேவன் பாதுகாப்பதில்லை.

நீண்ட காலத்திற்குப் பின் யோவாஸ் இராஜாவானார். மரண தருவாயில் அவர் எலிசாவிடம் உதவி கேட்டு வரும்போது, அவருடைய விசுவாச குறைவினால் அடுத்து நடக்கக்கூடிய காரியங்கள் பாதிக்கப்பட்டது. உசியா யோவாசின் பேரன். அவர் மிக நன்றாக ஆட்சி புரிந்தார்; ஆனால், அவர் ஒரு நாள் ஆசாரியனாக பணிபுரிய முயற்சித்தபோது, குஷ்டரோகம் அவரைப் பிடித்தது.

நாம் நம்முடைய பரலோக பிதாவுக்கு உகந்தவர்களாக நடக்க முயற்சிக்கும்போது, நம்முடைய வாழ்க்கையில் மேம்பட்ட முடிவுகளை எடுப்பதற்கு, இந்த மாதிரிகள் நிச்சயமாக நமக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

**நவம்பர்-டிசம்பர் 2010**


**ஆதியிலே . . .** (அவர்கள் எங்கு தவறினார்கள்?) 37

**இஸ்ரயேல் . . .** 38

வெற்றி பெறுவதற்கு தேவன் பேரில் நம்பிக்கையும், அவரிடத்தில் கீழ்ப்படிதலும் மிக அவசியம். காலேப் இரண்டு குணங்களையும் உடையவராக இருந்தார்.ஆனால் இஸ்ரயேல் தேசத்தில் இந்த இரண்டு குணங்களும் காணப்படவில்லை.

**பிலேயாம் . . .** 43

அதிகபட்சமான பணம் - தான் செய்வது தவறு என்று அறிந்திருந்தபோதிலும், அவைகளை செய்ய வற்புறுத்தியது.

**ஏலி . . .** 47

தேசத்தின் சிறந்த நியாயாதிபதியாகிய சாமுயேலுக்கு நேர் விரோதமாக, இஸ்ரயேலின் கடைசி பிரதான ஆசாரியன் சோம்போறியும், அவிசுவாசியுமாக இருந்தார்.

**சவுல் . . .** 53

சவுலின் எளிமையான பின்னனி, தனக்குள் இருந்த தாழ்வு மனப்பான்மைக்கு காரணமாக இருந்திருக்க வேண்டும்.

**தாவீது . . .** 58

கிருபையிலிருந்து விழுந்து, அதை பின்தொடர்ந்த விடுதலைக்கு இஸ்ரயேலின் இரண்டாவது இராஜா ஒரு மிகவும் முக்கியமான மாதிரியாக இருக்கிறார்.

**யோவாஸ் . . .** 61

தேவனுடைய பலத்தை பார்ப்பதை விட்டுவிட்டு, எலிசாவின் அற்ப நிலையை கண்டதினால் இராஜாவாகிய யோவாஸ் தோல்வியடைந்தார்.

**உசியா . . .** 64

பெருமையானது, இந்த நல்ல இராஜாவை தன்னுடைய அதிகாரத்தை வரம்புமீறச் செய்தது. அதன் விளைவாக அவர் குஷ்டரோகத்தால் தாக்கப்பட்டார்.

விசுவாசத்தை காத்துக்கொள்ளுதல்

# இஸ்ரயேல்



*இன்று, அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். - சங்கீதம் 95:8*

Donald Holliday

நாம் சிறு குழந்தைகளாக தவழ்ந்து, அதற்கு பின் நின்று, கடைசியில் விழுகிறோம்.

இப்படியாக, நாம் கற்றுக்கொள்கிறோம்.

நாம் தொடும் சில பொருட்கள் நம்மை வேதனைப் படுத்துவதில்லை,

ஆனால் மற்ற பொருட்கள் நம்மை எரித்து விடுகிறது.

பால் ஆகாரத்திலிருந்து பலமான ஆகாரத்தை உண்ணத்தக்கதாக நாம் வளர்ச்சியடைந்து,

நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவாகப் பகுத்தறிந்து கொள்ளுகிறோம்.

ஞானத்தை கற்றுக்கொள்வதில், தனிப்பட்ட அனுபவங்கள் நிச்சயமாக ஒரு சிறந்த இடத்தைப் பெறும், ஆனால், நம்பகமான மூலகரத்திலிருந்து வரும் செய்திகளை கவனிப்பதன் வழியாகவும் நாம் இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியும். வேதாகமம் ஒரு பாடநூலைப் போல் தலைசிறந்த செய்திகளைக் கொண்ட புத்தகம். பாடங்கள், ஈர்க்கவைக்கும் மாதிரிகளைக் கொண்டு மனதில் ஆழமாக பதியவைக்கப்படுகிறது. மேலும், வீழ்ச்சியின் காரணங்களாக இருக்கும் வரலாற்றில் நடந்த மனித தவறுகள் அடிக்கடி சுட்டிகாட்டப்படுகிறது.

சில குறைபாடுகளின் பின்விளைவுகள் சாதாரணமாகவும் அல்லது அற்பமாகவும் இருக்கலாம். ஆனால், மிக முக்கியமான பின்விளைவுகளை ஏற்படுத்திய சிலதவறுகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் நம்முடைய ஆதி பெற்றோரின் வரலாறும் அடங்கும். மனிதனுக்கும் அவன் சிருஷ்டிகருக்கும் இடையிலிருந்த லேசான பூசல் எவ்வளவு சீக்கிரத்தில் சச்சரவாக மாறிவிட்டது. ஆபேலின் இரத்தத்தில் உள்ள பாடம் இந்நாள் வரைக்கும் கூக்குரலிடுகிறது. கவனிப்பார் இன்றி, கொழுந்துவிட்டு எரியும் பொறாமை சகோதரர்களையும், குடும்பங்களையும், ஜாதிகளையும் விழுங்கிக்கொண்டிருக்கிறது. அது தேவையற்ற உயிர்பலிகளையும், சேதங்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான், மனுஷகொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்." (1யோவா. 3:15) என்று யோவானுடைய நுணுக்கமான வார்த்தைகளை தேவனுடைய ஜனங்களும் அசட்டை செய்கிறார்கள் அல்லது காணாதவர்கள் போலிருக்கிறார்கள். இந்த வசனத்தை யோவான் சகோதரர்களுக்கென்றே எழுதியுள்ளார்.

தேவனுடைய வார்த்தைகளை தேடுவதினால் கிடைக்கும் வெளிச்சத்தை அதாவது விசுவாசம், தோல்விகள், உண்மையுள்ள வாழ்க்கை, சிறு தவறுகள் மற்றும் பல பாடங்களை வெளிப்படுத்துவதற்கு, முதலாவது முற்பிதாக்கள், அதற்கு பின் மாறுபாடான வழிகளில் நடப்பவர்களின் வீழ்ச்சிகளை மாதிரியாக காண்பிப்பதற்காக தேவனால் பயன்படுத்தப்பட்ட யாக்கோபின் பிள்ளைகளின் வாழ்க்கைகளிலிருந்து சில முக்கியமான பாடங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

## முகம் பார்க்கும் கண்ணாடியைப் போலிருக்கும் தேவனுடைய வார்த்தை

மற்றவர்களின் குற்றங்களை எளிதில் காணலாம். ஆனால் இஸ்ரயேலின் குற்றங்களை கண்டுபிடித்து அதை வெளிப்படுத்தும் வெளிச்சம் ஒவ்வொரு வாசகரிடமும் வீசப்படும் வரைக்கும் அவைகள் மறைந்தேயிருக்கின்றன. தேவனுடைய வார்த்தைகளை நம்முடைய முகங்களை நாமே பார்க்கக்கூடிய கண்ணாடிக்கு யாக்கோபு ஒப்பிட்டு பேசுகிறார். (யாக் 1:23,24) நாத்தானால் விவரிக்கப்பட்ட ஒரு மனுஷனுக்கு கடுமையான தீர்ப்பை தாவீது வழங்கினார். ஆனால் "நீரே அந்த மனுஷன்" (11சாமு 12:7) என்று நாத்தான் சொன்னபோது தாவீது திடுக்கிட்டு தன்னுடைய ஜீவியத்தை திரும்பிப் பார்த்தார்.

இஸ்ரயேல் நடத்தின யுத்தங்களில், ஆண்டவருடைய ஜனங்களுக்கு அநேக பாடங்கள் உள்ளது. ஒரு வேளை மோவாப் தேசத்திலிருந்தவர்கள், எமோரியர்களுடைய மலைகளைப் பார்த்து பயந்திருந்தால், அவர்கள் நிச்சயமாக மிகுந்த ஆர்வத்தோடும், கவனத்தோடும் ஆயத்தத்தோடும் மோசேயின் வார்த்தைகளை எச்சரிப்போடு எதிர்பார்த்திருக்கவேண்டும். ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட பழமையான வாக்குத்தத்தங்கள் நிறைவேற காலம் நெருங்கியது. பூமி கர்த்தருடையது. நீண்ட காலமாக, விழுந்துபோன மனுக்குலத்தினால், அது மிதித்து சீர்குலைக்கப்பட்டது. (எசே 36:5 இதோமியா - ஏதோம், பழைய ஆதாம்) தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் இந்த பூமியை சுதந்தரிப்பதற்கு காலம் சமீபமாயிற்று. (தானி 7:22) தேவனுடைய இராஜ்யம் கையில் இருந்தது. இந்த இராஜ்யத்தில் பங்கு

பெறுபவர்கள் கடந்த காலத்தை எவ்வளவு கவனமாகவும் அக்கறையுடனும் கவனித்து அதில் உள்ள பாடங்களை கற்றுக்கொண்டு அதை நடைமுறைபடுத்த வேண்டிய தாக இருக்கிறது.

### குறுகிய வட்டத்திற்குள் காணுதல்

முழுமையான நம்பிக்கை மற்றும் கீழப்படிதலை இழந்ததே. இஸ்ரயேலின் முதல் சந்ததிக்கு திருப்புமுனையாக அமைந்தது. இதனால் எதிராளியின் வல்லமையும் பராக்கிரமும் அவர்களை அதிகமாக பயமுறுத்தியது. (எண் 13:26 - 14:35) இவைகளை ஒரே வரியில் சொல்லப்போனால் - தேவனுடைய தனித்தன்மையை அதாவது அவருடைய சர்வ வல்லமையுள்ள தன்மையை அவர்கள் உணர்ந்துக்கொள்ள தவறினார்கள். ஆகவே, தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள அவர்களுடைய மனம் ஆயத்தப்படவில்லை. இது இயல்பாக இருப்பினும், அது மிகப் பெரிய தவறாகும் இந்த தவறு தொடர்ந்து நடைபெற்றது.

சகலத்தையும் சிருஷ்டித்தவர் சர்வவல்லமையுள்ளவர். இவரே சர்வத்திற்கும் வல்லமையான கடவுள், அவரால் கூடாதது ஒன்றும் இல்லை. அவர் செய்திருக்கும் எல்லாவற்றைக் காட்டிலும் அவர் மிகப் பெரியவர் வாக்குத்தத்தின் ஒவ்வொரு வார்த்தைகளை அபிரிவிதமாக நிறைவேற்ற வல்லமையுள்ளவர். "பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை, இதை நீ அறியாயோ ? இதை நீ கேட்டதில்லையோ ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது. சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்." (ஏசா 40:28,29) "என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்." (IIகொரி 12:9) மொழிபெயர்க்கப்பட்ட வசனத்தில்

"போதும்" என்ற விலையேறப்பெற்ற வார்த்தை குறைவாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இதற்கு எதிராக, ஒரு தாலந்து பெற்ற மனுஷன் சொன்ன சாக்குபோக்கை போலிராமல், (மத் 25:24, 25) நம்முடைய வல்லமைக்கு அப்பாற்பட்டவைகளை அவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதில்லை. இந்த ஒரு நம்பிக்கையை நாம் இழந்தால், சந்தேகம் என்ற எதிரிகள் முன் நாம் உதவியற்று நிற்போம். அதற்கு பின், மிகக் கொடூரமான ஏமாற்றம் என்னும் இராட்சதனுக்கு இறையாகிவிடுவோம். இயல்பான பார்வை எதிராளியின் வல்லமையை மட்டுமே காணும். ஆனால் விசுவாசத்தின் பார்வை மிகப் பெரிய மலையான தடைகளையும் அகற்ற உறுதியளிக்கும். (மத் 17:20) தண்ணீரின் மேல் நடப்பதற்கு முழுமையாக, மனித கண்களுக்கு புலப்படாத நம்பிக்கை தேவைப்படுகிறது என்று பேதுரு கண்டுபிடித்தார். ஆனால் இந்த விசுவாசம் குறைந்தபோது பேதுரு வேகமாக வீசக்கூடிய அலைகளை மட்டும் கண்டு தண்ணீரில் முழுகத்துவங்கினார். (மத் 14:29-31) முழுகக்கூடிய இந்த உணர்வுகளை நாமும் பெற்றிருக்கலாம். "ஆண்டவரே என்னை இரட்சியும்" என்ற வேண்டுகோளுக்கு - "ஏன் சந்தேகப்பட்டாய்?" என்று உடனடியாக ஒரு எச்சரிப்பையும் கொடுத்தார்.

### அரைகுறையான சீஷர்கள்

கடந்த கால வழிமரபினர்கள் ஒருகாலத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தங்களின் வாசற்படியில் நின்றார்கள். அவர்கள் அருகாமையில் இருந்தாலும் அவர்களின் அவநம்பிக்கையினால் அது வெகுதொலைவில் இருந்ததுபோல சூழ்நிலைகள் அமைந்தது அதாவது அவர்களின் அவிசுவாசத்தினால். அவர்களுக்கும் அவர்கள் எட்டிப்பிடிக்கவேண்டிய இலக்குக்கும் இடையில் உள்ள தூரம் அதிகரித்தது. இவர்கள் அரைகுறையான (அரை மனதோடு) சீஷர்களாக இருந்தார்கள். அவர்கள் எகிப்தை விட்டு வெளிவந்தாலும் கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. அவர்கள் மடிந்துபோகும் வரைக்கும் வனாந்திரத்தில் அலைந்து திரிந்தார்கள். அவிசுவாசத்தினால் எதிர்பார்க்கப்பட்ட தேவைகள் காரணமில்லாமல் இருந்ததா ? இப்படிப்பட்ட சிந்தையை மோசே எதிர்த்தார்." ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவது போல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும், நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே. உங்கள் தேவனாகிய கர்த்தர் நீங்கள் பாளயமிறங்கத்தக்க இடத்தைப் பார்க்கவும், நீங்கள் போகவேண்டிய வழியை உங்களுக்குக் காட்டவும், இரவில் அக்கினியிலும் பகலில் மேகத்திலும் உங்களுக்கு முன் சென்றாரே. இப்படியிருந்தும், இந்த காரியத்தில் நீங்கள் அவரை விசுவாசியாமற்போனீர்கள்." (உபா 1:31-33) "கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு, யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம். பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தரவெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார், அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனை தமது கண்மணியைப்போல் காத்தருளினார். கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின் மேல் சுமந்துகொண்டு போகிறதுபோல, கர்த்தர் ஒருவரே அவனை

வழிநடத்தினார். அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை." (உபா. 32:9-12)

### சத்தியத்தின் முக்கியத்துவம்

தீர்க்கதரிசியாகிய நாத்தான் சவால் விட்டபோது, சத்தியத்தின் முக்கியத்துவம் மறைக்கப்பட்ட அல்லது சத்தியத்திற்கு குருடாக்கப்பட்ட ஒரு அனுபவத்தை தாவீது பெற்றார். மீட்கப்பட்ட அடிமைகளின் அவிசுவாசமான கூட்டத்தை நாம் எளிதில் நியாந்தீர்க்கலாம். ஆனால் வெகு சிலரே தங்களுடைய விசுவாசத்தை நிரூபித்தார்கள். முழு சந்ததிக்கும் மத்தியில் யோசுவா, காலேப் மட்டுமே கானானுக்குள் பிரவேசித்தார்கள். "ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத். 7:14) இந்த யுகத்திற்குரிய அழைப்பை இயேசு கடற்கரையிலிருந்து, கொடுக்கத் துவங்கியதிலிருந்து, அநேகர் அரைகுறை சீஷர்களாக இருக்கிறார்கள். முதலில் அனைத்தையும் விட்டு விடுவதற்கு ஆயத்தப்பட்டார்கள். ஆனால் அதற்குபின் பரலோக தந்தையின் காரியங்களை விட்டுவிட்டு தங்களுடைய சொந்த வேலைகளுக்கு திரும்பினார்கள். (யோவா. 21:3) சில உலகபிரகாரமான உதவிகள் பெறுவதற்காக சத்தியத்தை விட்டு கொடுப்பதும், முகதாட்சண்யம் பார்ப்பதும் கிறிஸ்துவ குணலட்சணத்திற்கு ஏற்றது அல்ல. அவர்கள் தவறு செய்து விட்டு, அதற்கு சமாதானத்தை கூறுவது எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது. "...நம்முடைய இருதயத்தைக் கலங்கப்பண்ணினார்கள்..." (உபா1:28) என்று வாசிப்பதற்கு எவ்வளவு வேதனையாக இருக்கிறது. ஆதியில் கொண்ட அன்பை விட்டதிலிருந்து லவோதிக்கேயாவின் வெதுவெதுப்பான நாள் வரைக்கும் ஆண்டவரை முழுமையாக பின்பற்றுபவர்கள் வெகு சிலராக இருப்பார்கள். (எண். 32:12)

### வாக்குறுதிகளின் உரிமை கோருதல்

"விசுவாசம் மற்றும் கீழப்படிதலை தவிர வேறு வழி இல்லை" என்ற முழு நம்பிக்கையின் அடிப்படையில் தேவனுடைய வாக்குறுதிகளில் நாம் உரிமைகோர வேண்டும். வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் பிரவேசித்த யோசுவாவும், காலேபும் மறுபடியுமாக - "அந்நாளிலே மோசே - நீ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினபடியினால், உன் கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் என்றைக்கும் சுதந்தரமாயிருக்கக்கடவது என்று சொல்லி, ஆணையிட்டார்" (யோசு 14:9) என்று சொன்னது போல நாமும் இருக்கவேண்டும். காலேபின் வழி வருபவர்கள் இந்த உத்திரவாதத்தைப் பெறுவார்கள். இந்த சந்ததி எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் ?

இவ்வழியில் வந்த நம்முடைய விசுவாசத்தை காலேபின் விசுவாசத்தோடு எப்படியாக ஒப்பிடலாம் ? காலேபின் நம்பிக்கை மற்றும் கீழ்படிதல் என்னும் பாதரட்சை நம்முடைய பாதங்களுக்கு பொருந்துமா? வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் வேவுகாரர்களைப்போல தேவன் நமக்கு முன் இருந்தால் எந்த எதிரியும் முன்னேற முடியாது என்ற முழுமையான விசுவாசம் மற்றும் உறுதியோடு அந்த தேசத்திற்குள் ஒரு அடி எடுத்து வைத்திருக்கிறோமா ? "என் தந்தை என் வாழ்க்கையை திட்டமிட்டார், அதில் உள்ள நம்பிக்கை வரும் சோதனைகளை ஜெயிக்கும். என்னுடைய ஆண்டவர் என்னை ஒவ்வொரு நொடியிலும் வழிநடத்தி, அவருடைய புன்னகையால் என்னை தேற்றுகிறார்" என்று நம்மால் சொல்லமுடியுமா ?

"[redacted] (எண் 13:30) - என்ற காலேபின் [redacted]மான வார்த்தைகள் அவர் வழியாக வருபவர்களுக்கு எவ்வளவு ஊக்கம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஒரு நொடி கூட அவர் தேவனுடைய திறமையை சந்தேகிக்காமல், "நாம் முயற்சிப்போம்" என்று அவர் சொல்லாமல், பெறக்கூடிய வெற்றியின் நிச்சயத்தை அவர் உறுதியோடு கோரினார் "நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்" - என்று இவ்வளவு உறுதியோடு எப்படி சொல்லமுடிந்தது ? "நாம்" என்ற கம்பீரமான வார்த்தையில் அந்த பதில் இருக்கிறது.

கடந்த காலத்தில், தங்களுடைய சந்தேகங்களின் விளைவால் பயமுறுத்தப்பட்ட, அவிசுவாசமான ஜனங்கள் காலம் கடந்தபின் எதிராளிகளோடு சண்டையிட யுத்தக்களத்தில் இறங்கினார்கள். இதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இதன் விளைவாக அனைத்தும் அழிந்தது. மாம்சத்தின் கரங்கள் மீண்டும் மீண்டுமாக நமக்கு தோல்வியை வருவிக்கும் நம்பிக்கையும், கீழ்படிதலும் ஒன்றோடு ஒன்று இணைப்பிரியாத ஆத்தும நங்கூரமாக இருக்கிறது என்று யாக்கோபு மிகச் சரியாக சொன்னார். கீழ்ப்படிதலை செயலாற்றும்போது, ஜீவனுள்ள விசுவாசம் வெளிப்படும். கபடற்ற விசுவாசத்தோடு அந்த ஐக்கியம் முத்திரிக்கப்பட்டிருப்பது நம்முடைய ஆண்டவருக்கு முன் எவ்வளவு அருமையானதாக இருக்கிறது. சகல யுகங்களிலும் மேகம் போன்ற திரளான விசுவாசத்தின் சாட்சிகள், அவர்களுடைய மாதிரியை நாம் பின்பற்றுவதற்கு உற்சாகப்படுத்துகிறது.

### இக்காலத்து வெற்றிகள்

மோவாபின் சமபூமியில் கூடின ஜனங்கள், முன்னதாகவே ஆண்டவரின் கரங்களினால் பெற்றுக்கொண்ட வெற்றிகளால் ஊக்குவிக்கப்பட்டிருப்பார்கள். சீகோனின் இராஜா, எஸ்போன் மற்றும் பாசானின் இராஜா கோகும் தங்களுடைய சேனைகளை தேவனுடைய ஜனங்களுக்கு எதிராக திருப்பினார்கள்.

கிறிஸ்துவ மண்டலத்தின் சேனைகளின் ஆளுநர்களையும் அறுவடையின் செய்தி, வெளியே கொண்டுவந்தது. அவர்களின் மந்தையின் சிந்தையில் தொடர்ந்திருக்கும் பயங்களை அச்சுறுத்தினார்கள். கர்த்தர் பக்கத்தில் இருக்கிறவர்கள் தவிர, மற்றவர்கள் அனைவரும் "அக்கினியின் நரகத்தில்" தள்ளப்படுவார்கள் என்றும் மந்தையை நம்பவைத்தார்கள். ஆனால் சத்தியத்தின் செய்தி அனைத்தையும் மேற்கொண்டது.

அதே போல, புது சிருஷ்டிகளுக்கு தனிப்பட்ட வாழ்க்கையில் வரும் எதிர்ப்புகளும், பிரச்சனைகளும் ஜெயிக்க முடியாதவைகளைப்போல தோன்றும். ஆனால் தேவனுடைய வல்லமையினாலும், விசுவாசத்தின் உறுதியான போராட்டத்தினாலும் நிச்சயமாக அனைத்தையும் ஜெயித்துவிடலாம். "அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி இதோ, சீகோனையும் அவன் தேசத்தையும் உனக்கு ஒப்புக்கொடுக்கப்போகிறேன், இதுமுதல் அவன் தேசத்தை வசப்படுத்தி, சுதந்தரித்துக்கொள்..." (உபா 2:31) என்று மோவாபின் சமதளத்தில் உள்ள ஜனங்களுக்கு சொல்லப்பட்ட அதே வாக்குத்தத்தம் இன்று நமக்கும் வாக்களிப்படுகிறது.

இக்காலத்தில் வெற்றிகளை பெறும் தேவ பிள்ளைகள் கர்த்தருக்கு முன் எப்படிப்பட்ட பெரும் சோதனையை நிகழ்த்துகிறார்கள். மேலும் யோர்தானுக்கு அப்பால் காத்திருக்கும் மிகப்பெரிய பணிகளை செய்யவேண்டிய நமக்கு இவர்களின் வெற்றி எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது. ஆயினும் மனித சந்தோஷங்கள், பாவம், சுயநலம், பொறாமை, பேராசை மற்றும் பெருமை என்ற பெரிதான எதிராளிகள் எவ்வளவு பலசாலிகளாக இருந்தாலும் ஆண்டவரின் விசுவாசமுள்ள சேனைக்குமுன் பயந்து நடுங்கும். இராஜரீகமான ஆசாரியர்களின் வெற்றி பூரிகைகளின் சத்தத்தில் சாபமான பட்டணத்தின் பாதுகாப்பான கோட்டையையும், ஆட்சியையும் தகர்த்து இடித்துப்போடும். (உபா. 2:25, யோசு 6:20)

**மனுக்குலத்தின் தீர்ப்புக் கட்டம் - காலம்**

இந்த பூமிக்கு இதுவே மிகுந்த ஆபத்தான காலமாக இருக்கிறது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் காணக்கூடிய வகையில் கூட்டிச் சேர்க்கப்பட்டுக்கொண்டிருப்பது போல, காணக்கூடாத பரிசுத்தவான்களின் கூட்டம் பரலோகத்தில் சேர்க்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் இப்பிரபஞ்சத்தின் தேவனுக்கு வரக்கூடிய இராஜ்யத்திற்கான அறிகுறிகள் வரவேற்கக்கூடியதாக இல்லை. ஆகவே கண்ணுக்குத் தெரியாத சாத்தானின் ஒட்டுமொத்த வல்லமையையும் அணி வகுத்து தேவனுடைய நோக்கத்தை தகர்ப்பதற்கு வீணாக முயற்சிப்பார்கள். திரளானவர்கள் பள்ளத்தாக்கை நிரப்பிக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்ட மோவாபியர்களும் மீதியானியர்களும், பெரும் திகைப்படைந்து, வரும் ஆபத்தை உணராதவர்களாக அவர்கள் ஜனங்களின் மேல் சாபத்தை வரப்பண்ணின அவபக்தியுள்ள தீர்க்கதரிசியாகிய பிலேயாமின் பணிகளை வரிசைப்படுத்தியதுபோல, இப்போது இஸ்ரயேல் சபிக்கப்படவேண்டும் என்ற முயற்சி தகனபலிகளினால் ஊக்குவிக்கப்படுகிறது. (எண் 23) ஆயினும் அதன் முடிவு ஆசீர்வாதமே. அதுபோல, தெரிந்துகொள்ளப்பட்ட ஜாதியை முற்றிலுமாக அழிக்கவேண்டும் என்ற விடாமுயற்சி செய்த ஹிட்லரின் செயல்கள், நம்முடைய நாட்களில் "உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம், உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய், இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னால் உண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசா 54:17)வாக்குத்தத்தை நிறைவேற்றும்படியாக யூதர்கள் பாலஸ்தீனாவுக்கு மீண்டும் சென்றனர்.

ஆயினும், இந்த முயற்சிகளை கைவிடுவதில் சாத்தானுக்கு எந்த விருப்பமுமில்லை. தேவனுடைய ஜனங்களின் மேல் சாபத்தை வருவிப்பதற்கான முயற்சிகள் தோல்வி அடைந்தபோதிலும், இன்னும் சாதுரியமானவழிகளை பயன்படுத்திக்கொண்டிருக் கிறான்.

**உலகத்தில் அன்புகூராதிருங்கள்**

மோசேயின் கடைசி நாட்களில் - "இஸ்ரயேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத்தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள்; ஜனங்கள் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்துகொண்டார்கள். இப்படி இஸ்ரயேலர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டார்கள்; அதனால், இஸ்ரயேலர் மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது." (எண். 25:1-3) என்று வாசிக்கிறோம்.

தெய்வீகமான வாக்குத்தத்தம் நிறைவேறக்கூடிய நேரத்தில் தேவனுடைய நியாத்தீர்ப்பின் விளைவாக 24,000 பேர் தேவனை விட்டு சாய்ந்து போனது மிகவும் ஆச்சரியமாகவே இருக்கிறது. இன்றைக்கும் ஆயிரக்கணக்கான யூதர்கள் தேவனிடம் பெற்ற சிறப்புரிமைகளையும், விசேஷித்த நிலையையும் முழுமையாக கைவிட்டுவிட்டு, "புறஜாதிகளாக" மாறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில், ஆவிக்குரிய தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இந்த உலகத்தின் கவர்ச்சிகரமான காரியங்களிலும், அபாயங்களிலும் தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் அகப்படுகிறார்கள். கிதியோனின் நாட்களைப்போல, அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

மற்றும் விசுவாசமுள்ள கர்த்தரின் போர்வீரர்களுக்குள் இருக்கும் அபாத்திரமானவர்களை நீக்குவதற்கு இப்படிப்பட்ட சோதனைகள் தேவைப்படுகிறது. ஒருவேளை கூழுக்காக பிறப்புரிமை விற்கப்பட்டபோது, ஏசா எவ்வளவு அழுது புரண்டு வேதனைப்பட்டு மனம்வருந்தினாலும் அதற்கு ஈடாக அவர் எதையும் பெறாததுபோல, இவைகள் உணர்த்தப்படும்போது எவ்வளவு அழுகையும் வேதனையும் ஏற்பட்டாலும் எந்த பயனுமில்லை. எஸ்றா மற்றும் நெகேமியாவின் காலத்தில் பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள் என்ற அழைப்புக்கு செவிசாய்த்தவர்களை அதே உலகப்பிரகாரமான சோதனை சூழ்ந்தது. (நெகே 13:23-27) உலகமுடிவுக்கு நெருங்கியிருக்கக்கூடிய நமக்கும் இந்த எச்சரிப்பு எவ்வளவு நெருக்கமாக கொடுக்கப்படுகிறது.

### இராஜ்யத்தின் கோட்பாடுகள் பொறிக்கப்பட்டு வருகிறது.

இஸ்ரயேலில் மீதியாயிருந்த ஜீவனுள்ளவர்களிடம் அன்று மோசே பேசினார். கடந்த காலத்தில் நடந்த தவறுகளில் உள்ள முக்கியமான பாடங்களை அவர்கள் முதலில் கவனிக்கவேண்டும் என்று கூறினார். அதற்கு பின் தேவனுடைய வல்லமையை அற்புதமாகப் பெற்ற விதத்தை மறுபடியும் அவர்களுக்கு முன் எடுத்துரைத்தார். உபாகமத்தின் பெரும்பாலான பகுதிகளில், மோசே சொன்ன காரியங்கள் மீண்டும் மீண்டுமாக இடம்பெற்றுள்ளது. இவைகள் பூமியிலும் பரலோகத்திலும், தேவனுடைய இராஜ்யத்தின் அடிப்படை கோட்பாடுகளான தெய்வீக நீதி மற்றும் அன்பின் பொன்னான பிரமாணங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருடைய இருதயத்திலும் இந்த ஆவி பொறிக்கப்பட்டால், (செதுக்கப்பட்டால்) அநேக தடைக்கல்லான பாவங்களைக் கொண்ட மனநிலை நீக்கப்பட்டு, பாவத்தினால் முடவர்களானவர்கள் குதிக்கவும், புதிதாக பிறந்தவர்கள் மானைப்போல துள்ளவும், சந்தோஷமாக தங்களுடைய வாழ்க்கையை சுபிக்ஷமாக அமைத்துக்கொள்ள வழி வகுக்கும்.

பரிசுத்தமான தேவனோடு இசைந்து வாழ்வதற்கு, சீனாயில் கொடுக்கப்பட்ட பிரமாணங்கள் கற்றுக் கொடுத்தது. இராஜ்யத்தின் பிரஜைகள் அனைவருக்கும் அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்பட்ட ஒழுக்கவிதிகள் கற்பிக்கப்பட்டது. ஒரு புது உடன்படிக்கையின் ஒழுங்கின் கீழ் இஸ்ரயேல் மற்றும் மனுக்குலத்தின் இருதயங்களில் இந்த பிரமாணங்கள் எழுதப்படும்.

முந்தின கற்பலகை உடைக்கப்பட்டதை தொடர்ந்து (கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு ஒப்பான - மத் 23:38) மோசே மலை உச்சிக்கு திரும்பி சென்று புதிய கற்களில் அதே ராஜ்யத்தின் கேட்பாடுகளை பெற்றுகொண்டார். (யாத் 31:18, 34:1,27,28 ஒப்பிட்டு பார்க்கவும்) இந்த முறை தேவனுடைய பிரமாணங்கள் மோசேயின் கரங்களினால் எழுதப்பட்டது. இந்த புதிய அமைப்பின் காரியங்களின் ஆதாரத்தை பவுல் தன்னுடைய பாணியில் தந்திருக்கிறார். "ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது, அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும், கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது." (IIகொரி 3:3) இந்த சுவிசேஷயுகம் முழுவதும் பரிசுத்தவான்களின் இருதயத்தில் இந்த பிரமாணங்கள் எழுதப்பட்டு வருகிறது.

பிரமாணம் கொடுக்கப்பட்ட முதல் கற்பலகைகள் உடைக்கப்பட்டது; ஆனால் தேவனுடைய குணங்கள் எழுதப்பட்ட இந்த புது கற்கள் நீடித்தகாலமாக நிலைநிற்கிறது. அவருடைய கரங்களில் கிரியைகளாக இருக்கும் ஒவ்வொரு கல்லும் விலையுயர்ந்ததாக இருக்கிறது. ஏனெனில் தேவனுடைய பேழையில் ஒவ்வொரு கல்லுக்கும் இடம் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. (உபா 10 :2) "ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்." (கொலோ 3:3,4) எப்படிப்பட்ட விலையுயர்ந்த வாக்குத்தத்தம்!

மலை பிரசங்கத்தில் தேவனுடைய பிரமாணத்தின் உண்மையான ஆவி, அறிவிக்கப்பட்டிருந்தாலும் மனுக்குலத்தின் இருதயத்திலும் அது எழுதப்படும். காலை வெளிச்சத்தில் பனிபோல பளிச்சிடுவதற்கு, தேவன் இப்போது ஆயத்தப்படுத்திகொண்டிருக்கும் பொக்கிஷங்களை அடையாளம் கண்டு கொண்டு, அந்த கடைசி மணி நேரம் வரைக்கும் பிரகாசிக்கும் பரலோக அன்பு வரவேற்கிறது. "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்." (IIகொரி 4:6)

"அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்." (மத் 13:43)

வேதனையூட்டும் அனுபவத்தை தானே சுமந்து கொள்ளுதல்

# பிலேயாம்



*பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது, சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்... - 1தீமோ 6:10*

Michael Nekora

இஸ்ரயேலர்கள் தங்களுடைய விசுவாச குறைச்சலை செயலாற்றிய பின்னும், வாக்களிக்கப்பட்ட தேசத்தை பன்னிரெண்டு வேவுக்காரர்கள் சுற்றிப்பார்த்து அதன் செய்தியை அறிவித்தபோது, அந்த தேசம் வனாந்தரத்தில் நாற்பது வருடங்கள் அலைந்து திரிவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது. அந்நேரத்தில் ஆரோன் மற்றும் மிரியாம் கூடுதலான வல்லமையை பெறுவதற்கு முயற்சித்தபோது ஏற்பட்ட காரியங்களை நாம் அறிந்திருக்கிறோம். (எண் 12) மேலும் இதேபோல், கோராகும் அவனை சேர்ந்தவர்களும் பொறுப்புகளைக் கைப்பற்ற முயற்சித்ததைப் பற்றியும் நாம் வாசிக்கிறோம். (எண் 16) இரண்டு சம்பவங்களிலும் குறித்த நபர்கள் வல்லமை, புகழ் மற்றும் அதிகாரம் பெற்றிருந்தாலும் அவைகளை மேலும் அதிகரித்துக்கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தினால் சோதிக்கப்பட்டு, அதை வலுகட்டாயமாகவோ, அல்லது தந்திரமாகவோ பெற்றுக்கொள்ள முயற்சித்ததையும் அதனால் அவர்கள் அடைந்த பலன்களைப்பற்றி எடுத்துகாட்டுகிறது.

நீண்டதும் அதிகமாக பரபரப்பூட்டுகிற அனுபவங்கள் வனாந்தர பிரயாணத்தின் நாற்பதாவது வருடத்தில் பெறப்பட்டது. இதன் விபரங்களை எண்ணாகமம் 22 முதல் 24ம் அதிகாரங்களில் வாசிக்கலாம். தேவனால் தேர்வு செய்யப்பட்டவர்களின் அங்கத்தினராக இராதபோதிலும் இஸ்ரயேலின் தேவனோடு தொடர்புள்ள ஒரு தீர்க்கதரிசி முக்கிய பாத்திரமாக அப்போது செயல்பட்டார்.

தன்னுடைய எல்லை பகுதியில் திரளான ஜனக்கூட்டம் பாளையம் இறங்கினதை மோவாபின் இராஜா பார்ப்பதோடு இந்த காட்சி துவங்குகிறது. இவர்கள் எமோரியர்களை முன்னதாகவே தோற்கடித்துவிட்டார்கள். அவன் பேசாமல் இருந்தால் எமோரியர்களை முறியடித்தது போல இவனையும் முறியடித்து விடுவார்கள். என்ன செய்வது ? இஸ்ரயேலர்கள் இவனைவிட பலத்தவர்களும், அதிகமானவர்களுமாக இருந்தனர். எல்லாவற்றிற்கும் மேல் அவனுடைய தெய்வங்களைக் காட்டிலும் வல்லமையுள்ள கடவுளை தேவனாக கொண்டிருந்தார்கள். அவனுடைய பார்வையில் எதுவும் நன்மையாகத் தோன்றவில்லை.

இதற்கு மாயவித்தையே சரியான பதிலாக இராஜாவுக்கு தோன்றியது. சிறந்த மாயவித்தைக்காரனை பணத்தினால் சம்பாதிக்க முயற்சித்தான். துரதிஷ்டவசமாக நீண்ட தொலைவில் ஐபிராத்தின் பள்ளத்தாக்கில் வாழ்ந்த பிலேயாம் இதில் அகப்பட்டான். "அவர்கள் என்னிலும் பலவான்கள், ஆகிலும், நீ ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் ... ஆதலால் நீர் வந்து, எனக்காக அந்த ஜனத்தைச் சபிக்கவேண்டும்......" (எண் 22:6) என்று இராஜா சொல்லி அனுப்பினான்.

பாலாக்கின் பிரபுக்கள் தன்னுடைய வீட்டிற்கு வந்தபோது பிலேயாம் அடைந்த ஆச்சரியமான சந்தோஷத்தை நாம் எளிதாக கற்பனை செய்து பார்க்கமுடிகிறது. இவர்களின் கதையை கேட்ட பிலேயாம், அவர்களை மறுநாள் காலை வரைக்கும் அங்கு தங்கும்படி சொன்னார். தேவனிடத்திலிருந்து உத்தரவு வந்த பின் அவர்களுக்கு அறிவிப்பதாகவும் சொன்னான். (எண் 22 :8) அந்த இராத்திரியில் தேவன் அவனுடன் பேசி இரண்டு காரியங்களைச் சொன்னார். 1, இந்த குழுவினரோடு மோவாப் தேசத்திற்குப் போகவேண்டாம் என்று கட்டளையிட்டார். 2, இஸ்ரயேலர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருந்தபடியால் அவர்களை சபிக்கக்கூடாது என்று சொன்னார்.

மறுநாளில், -"பிலேயாம் காலமே எழுந்து, பாலாகின் பிரபுக்களை நோக்கி - நீங்கள் உங்கள் தேசத்துக்குப் போய்விடுங்கள், நான் உங்களோடேகூட வருகிறதற்கு கர்த்தர் எனக்கு உத்தரவு கொடுக்கமாட்டோம் என்கிறார்" (எண் 22:13) என்று சொல்லி அவர்களை திருப்பி அனுப்பினான். ஆனால் மோவாப் ராஜாவினிடத்தில் சென்ற பிரபுக்கள் -"அப்படியே மோவாபியருடைய பிரபுக்கள் எழுந்து, பாலாகினிடத்தில்போய் - பிலேயாம் எங்களோடே வரமாட்டேன் என்று சொன்னான்..." (வசனம் - 14) என்றார்கள்.

அந்த தீர்க்கதரிசியின் ஊழியத்திற்கு, தாராளமாக அளிக்க, மனப்பூர்வமாக சம்மதித்ததைப்பற்றி, பிரபுக்கள் தெளிவாக கூறவில்லை என்று அந்த இராஜா நினைத்தான் ஆகவே "உம்மை மிகவும் கனம்பண்ணுவேன், நீர் சொல்வதையெல்லாம் செய்வேன், நீர் வந்து எனக்காக அந்த ஜனங்களைச் சபிக்கவேண்டும்..." (எண் 22 :17) என்று தெளிவாக சொல்லி அனுப்பினான்.

இராஜா எவ்வளவு பணத்தை செலுத்துவான் என்பதைக் குறித்து பிலேயாம் கவலைப்படவில்லை. "பாலாக் எனக்குத் தன் வீடுநிறைய வெள்ளியும் பொன்னும்" என்று அவன் சொன்ன பதிலில் இருந்து தெரிகிறது ஆயினும், இஸ்ரயேல் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருந்ததினால் அவர்களை சபிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னார். ஆகவே பிலேயாம் அவர்களை சபிக்கவில்லை. இப்போது இரண்டாம் முறையாக வந்த பிரபுக்களிடம் எல்லா காரியத்தையும் மறைக்காமல் அவன் சொல்லியிருந்தால், அவர்கள் உடனடியாக வீடு திரும்பியிருப்பார்கள். பிலேயாம்

இந்த இடத்தில் தவறு செய்தான் என்பது நிரூபணமாகிறது. ஆகவே இரண்டாவதாக வந்த பிரதானிகளிடமும், "ஆகிலும், கர்த்தர் இனிமேல் எனக்கு என்ன சொல்லுவார் என்பதை நான் அறியும்படிக்கு, நீங்களும் இந்த இராத்திரி இங்கே தங்கியிருங்கள்." (எண் 22:19) என்றான்.

கடந்த முறை நடந்ததற்கு மாறாக இந்த முறை வேறு காரியம் நடக்கும் என்று பிலேயாம் உண்மையில் விசுவாசித்தானா? நிச்சயமாக இல்லை. ஆனால் மீண்டும், மீண்டுமாக முயற்சிப்பதில்

எதையும் இழக்கபோவதில்லை என்று அவன் நினைத்திருக்கவேண்டும். "இரவிலே தேவன் பிலேயாமிடத்தில் வந்து - அந்த மனிதர் உன்னைக் கூப்பிட வந்திருந்தால் நீ எழுந்து அவர்களோடே கூடப்போ, ஆனாலும் நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம் நீ செய்யவேண்டும் என்றார்." (வசனம் 20)

## பயணம் துவங்கியது

மறுநாள் அதிகாலையில் பிலேயாம் தன்னுடைய கழுதையின் மேல் சேணம் வைத்து தன்னுடைய இரண்டு வேலைக்காரரோடு மோவாபுக்கு பயணித்தான். அவன் சென்று கொண்டிருக்கையில் ஒரு தூதன் மூன்று இடங்களில் அவனை வழி மறித்தார். இதை பிலேயாம் கவனிக்கவில்லை, ஆனால் அவனுடைய கழுதை அந்த தூதனைப் பார்த்தது. முதல் இரண்டு முறை அந்த கழுதை தூதனை சுற்றி நடந்தது, ஆனால் மூன்றாம் முறை அந்த தூதனை சுற்றி போக இடமில்லாததால் அந்த இடத்தில் நின்றது. கோபமடைந்த பிலேயாம் அதை அடித்தான். வேறு வழியில்லாமல் கழுதை அமர்ந்தது. விரக்தி அடைந்த பிலேயாம் கொடூரமாக அடிக்கத் துவங்கினான். அப்போது ஆச்சரியமான ஒரு காரியம் நடந்தது. உடனே கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார்.கழுதை பிலேயாமிடம் பேசியது. அது பிலேயாமைப் பார்த்து, நீர் என்னை இப்போது மூன்றுதரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன் என்றது. அப்பொழுது பிலேயாம் கழுதையைப் பார்த்து - நீ என்னை பரியாசம் பண்ணிக்கொண்டு வருகிறாய், என் கையில் ஒரு பட்டயம் மாத்திரம் இருந்தால், இப்பொழுதே உன்னைக் கொன்றுபோடுவேன் என்றான். கழுதை பிலேயாமை நோக்கி - நீர் என்னைக் கைக்கொண்ட காலம் முதல் இந்நாள்வரைக்கும் நீர் ஏறின கழுதை நான் அல்லவா? இப்படி உமக்கு எப்போதாகிலும் நான் செய்தது உண்டா என்றது. அதற்கு அவன் இல்லை என்றான்." (எண் 22:28-30)

பிலேயாம் சோதிக்கப்படுவதற்காகவே தேவன் மோவாப் தேசம் செல்லுவதற்கு அனுமதி கொடுத்தார். ஆனால் அந்த சோதனையில் பிலேயாம் வெற்றிபெறவில்லை. அவன் வீட்டைவிட்டு சென்றாலும், நீதியில்லாத எந்த காரியத்தையும் செய்துவிடக்கூடாது என்று கட்டளைப் பெற்றிருந்தான். அவன் வீட்டில் இருந்திருந்தால் ஒரே சோதனையோடு எல்லாம் முடிந்திருக்கும். ஆனால் அவன் மோவாப் தேசத்திற்கு சென்று, மேலும் பெரிதான சோதனைகளுக்கு உட்பட்டான். சந்தேகத்திற்கு இடமின்றி இதுவரைக்கும் அவன் பெறாததும், காணாததுமான பரிசுகளை இராஜா தரப்போகிறார் என்பதற்காக அவன் எடுத்த அபார முயற்சி அவனை குருடாக்கியது. அதாவது இராஜா கொடுப்பேன் என்று வாக்களித்த பொக்கிஷங்கள், தேவனுடைய வார்த்தைகளை மீறி செயல்படுவதற்கு பிலேயாமைத் தூண்டியது. பல வருடங்களாக அவனுக்கு ஊழியம் செய்த அவனுடைய விசுவாசமுள்ள கழுதையை - " என் கையில் ஒரு பட்டயம் மாத்திரம் இருந்தால், இப்பொழுதே உன்னைக் கொன்றுபோடுவேன்" என்று சொல்லும் அளவுக்கு பிலேயாமுக்கு கோபமுண்டது. அதற்குபின் அவன் கண்கள் திறக்கப்பட்டு, அவன் செய்யக்கூடிய காரியத்திற்கு, அவனைக் கொலை செய்வதற்கு ஆயத்தமாக பட்டயத்தோடு நின்ற ஒரு தூதனைக் கண்டான்.

பிலேயாமும் அந்த தூதனும் பேசிகொண்டார்கள். "நான் பாவம் செய்துவிட்டேன், உடனடியாக நான் வீடு திரும்புவேன்" என்று அவன் சொல்லாமல் "நான் பாவஞ்செய்தேன், வழியிலே நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன், இப்பொழுதும் உமது பார்வைக்கு இது தகாததாயிருக்குமானால் நான் திரும்பிப்போய்விடுகிறேன் .." ( வசனம் - 34) என்று பதில் அளித்தான். முதலில் பிலேயாமை போகவேண்டாம் என்று சொல்லிவிட்டு, அதற்குபின் போ என்று செல்லக்கூடிய இருமனம் உள்ள தேவனை சுட்டிக்காட்ட பிலேயாம் முயற்சித்தான். ஆனால் இந்த அனுபவமானது அவனுக்கு தேவன் மேல் உள்ள விசுவாசத்தை சோதித்தது. தொடர்ந்து தவறாக செயல்பட்டதினாலும், அந்த தூதன் தன்னை தடுக்கமாட்டார் என்பதை அறிந்ததினாலும் அவன் தோல்வி அடைந்தான்.

## மோவாபை சேருதல்

பிலேயாம் மோவாபிற்கு வந்து சேர்ந்தபின், இராஜாவை சந்தித்தான். "தேவன் என் வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன்" (வசனம்-38) என்பதை தெளிவாகக்கூறினான்.. அதை குறித்து இராஜா கவலைப்படவில்லை. அவன் விரும்பக்கூடிய காரியங்களை அறிவிக்கக்கூடிய தன்னுடைய தீர்க்கதரிசிகளைப்பற்றி இராஜா நன்கு அறிந்திருந்தான். "தேவன்" என்ற வார்த்தையை பிலேயாம் சொன்னபோது, சந்தேகத்திற்கு இடமின்றி யெகோவா தேவனைப்பற்றி சிந்தியாமல் வேறு புறஜாதியாரின் தெய்வத்தைப்பற்றி இராஜா சிந்தித்தான். அவன் பிரச்சனைகளை சந்திக்கவேண்டியதாக இருக்கும் என்று நம்புவதற்கு எந்த காரணமும் அவனுக்கு இருக்கவில்லை.

மறுநாளில் இஸ்ரயேலை சபிக்க இராஜாவும் பிலேயாமும் ஆயத்தமானார்கள். கடந்த காலத்தில் தேவன் பிலேயாமோடு எந்த விதமான விசேஷித்த வழிமுறைகளையும் பயன்படுத்தாமல் நேரடியாகவே பேசினார். ஆனால் பாதுகாப்பாக இருப்பதற்கு ஏழு பலிபீடங்களைக்கட்டி அதில் ஏழு காளையையும், ஏழு ஆட்டுக்கடாவையும் பலிசெலுத்தும்படி பிலேயாம் இராஜாவிடத்தில் சொன்னான். ஏழு பலிபீடங்களின் மேல் பலிசெலுத்தினாலும் சரி, ஒரு பலிபீடத்தின் மேல்

பலிசெலுத்தினாலும் சரி அல்லது இவர்கள் எந்த தெய்வத்திற்கு பலிசெலுத்தினாலும் சரி பாலாக் பலி செலுத்தினதைப்பற்றி தேவனுக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று இஸ்ரயேலர்களிடம் சொல்லியிருந்தார். நிச்சயமாக அந்த இராஜா தன்னுடைய தெய்வங்களை மனதில் வைத்து பலிசெலுத்தியிருக்கவேண்டும். பலிகளை செலுத்தின பின் சாபமிடாமல் வேறு காரியங்களைச் சொல்லி இராஜாவை திருப்தி படுத்தும்படி பிலேயாம் தீவிரமாக எழும்பினான். ஆனால் அதில் எந்தவிதமான பயனும் இல்லை. "தேவன் பிலேயாமைச் சந்தித்தார், அப்பொழுது அவன் அவரை நோக்கி - நான் ஏழு பலிபீடங்களை ஆயத்தம்பண்ணி, ஒவ்வொரு பலிபீடத்தில் ஒவ்வொரு காளையையும், ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டேன்" (எண் 23:4) என்று பிலேயாம் பேச துவங்கியபோது தேவன் பேசினார். ஆயினும் பிலேயாம் எந்த பலிகளையும் செலுத்தவில்லை. அந்த புறஜாதி இராஜா அனைத்தையும் செய்தான். ஆனால் தன்னுடைய பிரயாசத்தினாலும், முயற்சினாலும் தேவன் விரும்பிய மிருகங்களின் பலியை தேவன் பெற்றுக்கொண்டார் என்று நிரூபிக்க முயற்சித்து, அதற்கு பதிலாக தேவன் பிலேயாமுக்கு ஏதோ சிறிய நன்மையை செய்யவேண்டும் என்று எதிர்ப்பார்த்தான்.

தேவன் ஆடுமாடுகளின் இரத்தத்தில் பிரியப்படுவதில்லை என்பதை பிலேயாம் உணராதிருந்தான். (எபி 10:6) முதலாவது தெய்வ வழக்கு என்று அழைக்கப்படும் இறை வழக்கை அளிக்க தேவன் மீண்டுமாக பிலேயாமை இராஜாவினிடத்திற்கு அனுப்பினார். இஸ்ரயேலை சபிக்க முடியாது என்ற ஒரே வார்த்தையோடு முடிந்தது. பிலேயாம் இஸ்ரயேலை ஆசீர்வதித்ததின் நிமித்தம் இராஜா கோபமடைந்தான். ஆனாலும், வந்திருக்கும் ஆபத்தை போக்க தன்னிடம் இராணுவ உதவிகள் அதிகமில்லாத காரணத்தினால், இராஜாவுக்கு பிலேயாமை விட்டால் வேறு ஆள் இல்லை என்பதற்காகவும், "அநேக ஜனங்களை பிலேயாம் தனக்கு எதிராக கண்டதினால் அவன் திகில் அடைந்தான்" என்று இராஜா தனக்கு தானே ஆறுதல் சொல்லிக்கொண்டான்.

இஸ்ரயேல் சபிக்கப்படும் என்ற நம்பிக்கை இழந்த நிலையில், எந்த தடையும் இன்றி துணிச்சலாக இஸ்ரயேலை சபிக்க, தேசத்தின் ஒரு பகுதியை மட்டும் காணக்கூடிய பிஸ்காவின் கொடுமுடிக்கு ஏற முடிவுசெய்தார்கள். (எண் 23:14) அங்கும் பலிபீடங்களைக் கட்டி பலிசெலுத்தினார்கள். மீண்டுமாக பிலேயாம் நழுவினான். இந்தமுறை தேவனே சகலத்தையும் பேசினார். பிலேயாம் திரும்பி வந்தபோது காரியங்கள் இன்னும் மோசமானது. எல்லாவற்றிற்கும் மேலே - "யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரயேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை. .." (வசனம் - 23) என்று பிலேயாம் கூறினான். இது உண்மையில் ஒரு கெட்ட செய்தியாக தோன்றியது. இராஜா நம்பியிருந்த ஒரு மந்திரசொல்லாகிய கருவியும் இப்போது பயனற்றுபோனது. காரியங்கள் மிக மோசமான நிலையை அடைந்தது.

அதற்குப் பின் மூன்றாவது இடத்திற்கு அந்த குழுவினர் சென்று பலிபீடங்களைக்கட்டி பலிசெலுத்தினார்கள். இந்த முறை பிலேயாம் பின்வாங்கவில்லை. தேவனுடைய ஆவி அவர்மேல் இறங்கியது, மிகுதியான ஆசீர்வாதங்களை இஸ்ரயேலின் மேல் பொழிந்தார். (எண் 24:3-9) இதோடு எந்த வித ஆரவாரங்கள் இன்றி, எந்தவிதமான பலிகளையும் செலுத்தாமல் இராஜா பிலேயாமை வெளியேற்றினான். இறுதியாக பிலேயாம் தெய்வ வழக்கை உரைத்தான். (எண் 24:15-24) இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதற்கு வகுக்கப்பட்ட தெளிவான தேவனுடைய திட்டத்தைக் கூறினான். அதில் கெடுங்குறி காட்டும் முக்கியமான வார்த்தைகளும் அடங்கியிருந்தது. "...ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரயேலிலிருந்து எழும்பும், அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி..." ( வசனம் 17)

## தேவனுடைய சாபத்தை இஸ்ரயேல் வருவித்தார்கள்

நாம் பொதுவாக, பிலேயாம் வீடு திரும்பினான் என்றும் (எண் 24:25) பிலேயாம் இராஜாவை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து போனான் என்றும் நினைக்கக்கூடும். ஆனால் அவன் உண்மையில் திரும்புவதற்காக புறப்பட்டப் போதிலும், அவன் வீட்டிற்குப்போய் சேரவில்லை. இவ்வளவு தூரம் பிலேயாம் செய்து வந்த காரியம் பயனில்லாமல் போனதே என்று நினைத்து ஏமாந்திருக்கவேண்டும். மேலும், தன்னுடைய இவ்வளவு பிரயாசங்கள் பயனற்றுப் போனதே என்றும் தன்னுடைய பிரயாசங்கள் எப்படியாகிலும் கூலியை பெறவேண்டும் என்றும் யோசித்துக் கொண்டே அலைந்திருக்கவேண்டும். அதற்கு பின் தேவன் இஸ்ரயேலை சபிப்பதற்கு, திட்டமிட்டிருக்க வேண்டும். நேரடியாக எதுவும் செய்யமுடியாது என்று அவன் நன்கு அறிந்திருந்தான். ஆனால் மறைமுகமாக தேவன் தாமே அவர்களை சபிக்கும்படி இஸ்ரயேலர்களை பாவம் செய்ய தூண்டுவதற்கேற்ற வழி ஒன்றை திட்டமிட்டான். இப்படிப்பட்ட காரியம் முன்னதாகவே நடந்தது. மோவாபின் எல்லைக்குள் பிரவேசிக்குமுன், ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக கலகம் பண்ணினதால் "...கர்த்தர் கொள்ளிவாய் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார், அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரயேலருக்குள்ளே அநேக ஜனங்கள் (எண்21-6) செத்தார்கள்." ஒருவேளை அவர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுவது எதுவோ அதையே அவர்கள் விரும்பும் மனோபாவமுள்ளவர்களாக இருந்திருக்கவேண்டும்.

எண். 25ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறபடி, மோவாபிய ஸ்திரீகளினாலும், மீதியானிய ஸ்திரீகளினாலும் இஸ்ரயேலர்கள் விபசாரத்தில் ஈடுபட்டார்கள். இவ்விதமாக அவர்கள் தேவனுக்கு கோபமூட்டினார்கள். தேவன் அனுமதித்த வாதையினால் இருபத்துநாலாயிரம் பேர் மாண்டுபோனார்கள். இந்த தந்திரமான யோசனை பிலேயாமின் திட்டமாக இருந்தது. "அவர்களை நோக்கி - ஸ்திரீகள் எல்லாரையும் உயிரோடே விட்டுவிட்டீர்களா ? பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால்

இஸ்ரயேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள்தாமே, அதினால் கர்த்தரின் சபையிலே வாதையும் நேரிட்டது. " (எண். 31:15,16) இந்த சம்பவம் புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டிருக்கிறது. "ஆகிலும், சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு, விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரயேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு." (வெளி 2:14) தேவன் இஸ்ரயேலரை சபிப்பதற்கு, ஒரு நல்ல ஆலோசனையை பிலேயாம் இராஜாவுக்கு கற்றுக்கொடுத்தார். இந்த தந்திரமான யோசனை வெற்றிகரமாக தோன்றினாலும், அது பிலேயாமின் உயிரையே விலையாக பெற்று கொண்டது. மோவாப் தேசத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருந்த யுத்தம் நடந்தது. "கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் மீதியானியருடன் யுத்தம்பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்று போட்டார்கள். அவர்களைக் கொன்று போட்டதும் அன்றி, மீதியானியரின் ஐந்து ராஜாக்களாகிய ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா என்பவர்களையும் கொன்றுபோட்டார்கள். பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்றுபோட்டார்கள்." (எண் 31:7,8) பிலேயாம் நேராக வீடு சென்றிருந்தால் அவர் இந்த யுத்தத்தில் மரிப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்காது.

தங்களுடைய வாழ்க்கையில் பணத்தை பிரதானமாக முன் வைப்போருக்கு பிலேயாம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஏனெனில் -"செம்மையான வழியைவிட்டுத் தப்பிநடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள், அவன் அநீதத்தின் கூலியை விரும்பி,.." "இவர்களுக்கு ஐயோ, இவர்கள் காயீனுடைய வழியில் நடந்த, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்." (IIபேது 2:15 , யூதா 11)

மோவாப் செய்த காரியத்தின் நிமித்தமாக, தேவன் அவர்களுக்கு விரோதமாக ஒரு விசேஷித்த தடை ஆணை ஒன்றை அறிவித்தார். "அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது, பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அவர்கள் அப்பத்தோடும் தண்ணீரோடும் உங்களுக்கு எதிர்கொண்டு வராததினிமித்தமும், உன்னைச் சபிக்கும் படியாய் மெசொப்பொத்தாமியாவின் ஊராகிய பேத்தோரிலிருந்த பேயோரின் குமாரன் பிலேயாமுக்குக் கூலிபேசி அவனை அழைப்பித்ததினிமித்தமும் இப்படிச் செய்யவேண்டும்." (உபா 23:3,4)

ஆனால் இது ஸ்திரீகளுக்கு பொருந்தவில்லை. மோவாப் தேசத்து பெண்மணியான ரூத் போவாசின் மனைவியும், இயேசு கிறிஸ்துவின் முற்பிதாவாகிய தாவீதின் மூதாட்டியானாள். (மத். 1:5, 6)

ஒருவர் எதை செய்யாவிட்டால் பாவமாகும் என்பதை யாக்கோபு விவரிக்கிறார். "ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்கு பாவமாயிருக்கும்." (யாக் 4:17) நன்மை என்னவென்று பிலேயாமுக்கு தெரிந்திருந்தாலும், அதை செய்ய அவன் மறுத்துவிட்டான். இப்படியாக, நம்முடைய கிரியைகளுக்கு தக்க பலனை நாம் தொடந்து பெற்று கொண்டிருந்தாலும் நாம் குற்றம் புரிவதை தேவன் ஒருபோதும் தடுக்கமாட்டார். நாம் ஒருபோதும் தேவனையும் உலகத்தையும்( கிரேக்கில் -"மாமூனையும்" என்பதற்கு பணம் என்று பொருள்) சேவிக்கமுடியாது. (மத். 6:24) உலகம், மாம்சம், பிசாசு அனைத்தும் நம்மை அநீதிக்குள் செல்ல வழி நடத்துகிறது. நம்முடைய பக்தியுள்ள விசுவாசம் தேவன் பேரில் இல்லாவிட்டால், நாம் மரித்துவிடுவோம். "நாங்கள் அனைவரும் உங்களுடைய தேவனையே சேவிப்போம்" என்று சொல்லி, எப்படியோ, அந்த புறஜாதி பெண்கள் யூதர்களை நம்பவைத்து, தாங்கள் செய்த பாவத்திற்கு சரியான நியாயத்தைக் கற்பித்தார்கள். ஆனால் எல்லாம் பொய்யானது.

சோதனைக்கு இடம் கொடுத்துவிட்டு ஒருவர் அந்த சோதனையை எதிர்க்கமுடியாது. ஆனால் நீதியின் பக்கம் உறுதியாக நின்று சோதனையை எதிர்க்கலாம். முதன் முறை பாலாக் தன்னுடைய பிரபுக்களை அனுப்பியபோது - "இஸ்ரயேலர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், அவர்களை ஒருவராலும் சபிக்க முடியாது" என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு, தன் வீட்டிலிருந்து அவர் புறப்படாமல் இருந்திருந்தால் அவர் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களுக்கு புறம்பானவராக இருந்தாலும் அக்காலத்தில் மிகப்பெரிய தீர்க்கதரிசியாக அவர் இருந்திருப்பார். அதற்கு பதிலாக தேவனுடைய இரக்கத்தையும், இராஜா கொடுக்கக்கூடிய உலக ஐசுவரியத்தையும், பொக்கிஷங்களாகிய இரண்டையும் பெறுவதற்கு திட்டமிட்டார்.

தேவனுக்குக் கீழ்படிவதற்கு ஈடாக எதுவும் இல்லை. இருதயத்தில் இருக்கும் முழுமையான கீழ்ப்படிதலினால் மட்டுமே நாம் பரலோகத்தின் தேவனை பிரியப்படுத்தமுடியும். இப்படிப்பட்ட கீழ்ப்படிதல் காலப்போக்கில் நம்மை உயர்த்தும். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி - கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்." (மத் 7:21,23) என்று எழுதியிருக்கிறபடி பார்வைக்கு தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவதுபோல பாவனை செய்து, தங்களுடைய சொந்த ஆலோசனையின்படி நடப்பவர்கள் கடுமையான ஏமாற்றத்தை அடைவார்கள்.

தோல்வியடைந்த ஒரு ஆசாரியன்

# ஏலி

*அரணான பட்டணத்தை வசப்படுத்துவதைப் பார்க்கிலும் கோபங்கொண்ட சகோதரனை வசப்படுத்துவது அரிது, அவர்களுடைய விரோதங்கள் கோட்டைத் தாழ்ப்பாள்கள் போலிருக்கும்.. - நீதி 18:9*

A.O. Hudson

பலவீனமும், சுறுசுறுப்புமின்றி, பார்வையற்ற, தளர்வுற்ற, வயது முதிர்ந்த நிலையில், மொத்தத்தில் இஸ்ரயேலின் பிரதான ஆசாரியனுடைய முக்கிய பொறுப்புகளைச் செயலாற்ற தகுதியற்ற நிலையில், நியாயாதிபதியின் காலத்தில், இஸ்ரயேலின் கடும் பிரச்சனைகள் மத்தியில், பரிசுத்தமான பொறுப்பில் ஏலி இருந்தார். தொடர்ந்து இரண்டு நூற்றாண்டுகளாக தேவனற்ற நிலையிலிருந்த இஸ்ரயேல் ஜாதியை மீட்டு உண்மையான தேவனிடத்திற்கு வழிநடத்தி, ஒழுங்குபடுத்தி, பாராட்டப்பட்ட மாபெரும் மூப்பர் சாமுயேலின் வாழ்க்கையின் எழுச்சிமிக்க வீரக் காவியத்திற்கு முக்கிய அஸ்திபாரமாக இருந்த ஏலியைப் பற்றிய பழைய ஏற்பாட்டு மாணவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அதன் விளைவாக இராஜாக்களின் காலம் துவங்கி விபரீதமான காரியம் நடந்தாலும் சாமுயேல் தேவனுடைய காரியங்களை செவ்வையாக நடத்தினார்.

ஏறக்குறைய எழுபத்தெட்டு வயதுள்ள ஏலியின் பராமரிப்பில் சிறு பிள்ளையாக இருந்த சாமுயேல் ஒப்படைக்கப்பட்டார். அவருடைய 98-ம் வயதில் அவருடைய சோம்பேறிதனத்தினாலும், அஜாக்கிரதையினாலும் இஸ்ரயேலின் வரலாற்றில் மாபெரும் வேதனையும், பேரிழப்புகளையும் வருவித்தது. உடன்படிக்கைப் பெட்டி பெலிஸ்தியர்களால் பிடிக்கப்பட்டது. ஒரு மந்திர தாயத்துப்போல, யுத்தத்தை ஜெயிக்க உடன்படிக்கைப் பெட்டி எடுத்துச் செல்லப்பட்டது. அந்த புனிதமான அடையாளம் விருத்தசேதனம் இல்லாத பெலிஸ்த்தியர்களின் கையில் தேவன் அனுமதித்ததைக் கண்ட இஸ்ரயேலர்கள் திகைத்துப் போனார்கள். ஆசரிப்புக் கூடாரம் மற்றும் அதன் சடங்குகளுக்கு அதுவே உண்மையான முடிவாக இருந்தது. ஏனெனில் பல வருடங்களுக்குப் பின், அதாவது சாலொமோனின் நாட்கள் வரைக்கும் வருஷந்தோரும் செலுத்தப்படும் சமாதான பலிகள் செலுத்தப்படாமலும் மோசேயின் நியாயப்பிரமானத்தின் நிபந்தனைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

மோசேயின் நாட்களில் பிரதான ஆசாரியத்துவம் ஸ்தாபிக்கப்பட்டபோது, லேவி கோத்திரத்தைச் சேர்ந்த மோசேயின் சகோதரன் ஆரோன் முதல், பிரதான ஆசாரியனானார். அதற்கு பின் அவர்களுக்குப் பிறக்கும் மூத்த குமாரன் இந்த பணியை செய்ய வேண்டும் என தீர்மாணிக்கப்பட்டது. அதன் படி ஆரோனுக்குப் பின் அவனுடைய மூத்தகுமாரன், எலேயாசார் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் பிரதான ஆசாரியரானார். அவருக்கு பின் அவருடைய குமாரனாகிய பினெகாஸ் அந்த பணியை தொடர்ந்தார். ஆனால் ஏலி, எலேயாசாரின் வழி வந்தவர் அல்ல, ஆரோனின் இளையகுமாரன் இத்தாமார் வழி வந்தவர். எப்போது, எந்த இடத்தில் மூத்த குமாரனுடைய வழியிலிருந்து இளைய குமாரனுக்கு இந்த பணி மாற்றப்பட்டது ? பினெகாசுக்கும் ஏலிக்கும் இடையில் உள்ள இரண்டு நூற்றாண்டுகளில் இந்த முறைமை மாறியிருக்கவேண்டும். இதை குறித்து வேதம் மௌனமாக இருக்கிறது. ஆனால் மூத்த தலைமுறையின் வாரிசுகள் இறந்து போகவும் இல்லை, ஏனெனில், தாவீது மற்றும் சாலொமோனின் காலத்தில் பிரதான ஆசாரியனாக இருந்த சாதோக் வரைக்கும் பினெகாசின் எந்த வாரிசும் பிரதான ஆசாரியனாக பணிபுரியவில்லை என்றாலும், அவருடைய வாரிசுகளையும் நன்கு அறிந்திருக்கிறோம். மீண்டும் சாத்தோக்கிலிருந்து எலேயாசாரின் வழியில் பிரதான ஆசாரியனின் பணி தொடர்ந்தது.

பினெகாசைப் பற்றி கடைசியாக, நியாயாதிபதிகள் 20:28 ம் வசனத்தில் காணலாம். அப்போது அவர்கள் கானானுக்குள் பிரவேசித்து, குறைந்தபட்சம் ஐம்பது வருடங்களுக்குள் இருக்கவேண்டும். இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் நாம் காணக்கூடிய பிரதான ஆசாரியன் இத்தாமார் வகுப்பிலிருந்து வந்த ஏலி, இஸ்ரயேலில் பிரதான ஆசாரியனுடைய பொறுப்புகளை எந்த அளவுக்கு செயலாற்றினார் என்றும் வருஷந்தோறும் செலுத்தப்படும் பாவநிவாரண பலிகளின் போது அனுசரிக்க வேண்டிய சடங்காச்சாரங்கள் மற்றும் கோட்பாடுகள் எப்படி நடந்தது என்றும் நமக்கு தெரியவில்லை. ஏலியின் மூதாதையர்களின் நாமங்கள் ஏதும் கொடுக்கப்படவும் இல்லை. அவர் இத்தாமார் வழிவந்தவர் என்பதை மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம். சாமுயேல் வருவதற்கு முன் அவர் இருபது வருடங்கள் பொறுப்பில் இருந்திருக்கிறார். ஆனால் அவர் எப்படியாக நிர்வாகம் செய்தார் என்ற விபரங்கள் ஏதும் கொடுக்கப்படவில்லை.

நியாயாதிபதிகளின் காலத்தில் உள்ள காலக்கணக்குகளைப் புரிந்துகொள்ளவது சற்று கடினமாகவே இருக்கிறது. ஆனால் ஏலி சரியாக முப்பது வயதில் பிரதான ஆசாரியனாக பதவி ஏற்றிருப்பார் என்ற முடிவுக்கு, ஆராய்ச்சிகளின் முடிவுகள் ஒத்துப் போகவில்லை. முந்நூறு பேர்கொண்ட படையின் உதவியோடு ஆயிரம் மீதியானியர்களை முறியடித்த நாயகன் - கிதியோனின் காலத்திற்கு வெகு சமீபத்தில் ஏலி பதவி ஏற்றுக் கொண்டிருக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டில் புதிராக இருக்கும் சரித்திரங்களில் கிதியோனின் கதையும் ஒன்று. விக்கிரக ஆராதனைக்காரர்களின் மத்தியில், தேவனுக்கு பயந்து, விசுவாசத்தில் உள்ள ஒரு மனுஷன், தேவனுடைய பலத்தோடு வெளியே சென்று இஸ்ரயேலரின் எதிரிகளை

மேற்கொண்டு, தேசத்தில் தேவனுடைய நாமத்தை நிரூபித்தார். அவருடைய பிரபலமான வெற்றிக்குப் பின் யுத்தத்தில் கிடைத்த பொருட்களை வைத்து சீலோவில், சட்டப்பூர்வமாக ஆசரிப்புக் கூடாரத்தில் பிரதான ஆசாரியர் பொறுப்பெடுத்து நடத்திக்கொண்டிருப்பதற்கு ஒப்பாக தன்னுடைய சொந்த நாடாகிய ஒப்ராவில் கர்த்தருக்கென்று ஒரு பரிசுத்த ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினார். அதற்குபின் கிதியோனும் அவர் குமாரர்களும் ஆட்சி செய்யவேண்டும் என்ற ஜனங்களின் வேண்டுகோளை மறுத்த கிதியோனைப் பற்றி நினைக்கையில் இந்த புதிரைப் புரிந்துகொள்ள இன்னும் கடினமாகிறது. "அதற்குக் கிதியோன் - நான் உங்களை ஆளமாட்டேன், என் குமாரனும் உங்களை ஆளமாட்டான் கர்த்தரே உங்களை ஆளுவாராக என்றான்." (நியா 8:23) தேவனால் முன் அறிவிக்கப்பட்ட வெற்றியைப் பெற்று, தேவனைப்பற்றி இப்படியாக விசுவாசமுள்ள வசனங்களைக் கூறினபிறகு கிதியோன் விக்கிரகாராதனைக்கு திரும்பியது முரண்பாடாக தோன்றுகிறது.

ஒப்புராவில் கிதியோன் செய்த செயல்களுக்கும், பிரதான ஆசாரியர்களின் கிரமமற்ற வழிமுறையில் தகாதவிதமாக அமர்த்தப்பட்ட காரியத்திற்கும் ஏதாகிலும் தொடர்பு இருந்திருக்கக்கூடுமா ? கிதியோனின் காலத்திலேயே அந்த முறையற்ற காரியங்கள் சீலோவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்குமா ? இஸ்ரயேலின் கோத்திரங்களில் மிக வல்லமையானதும் அடங்காத கோத்திரமுமான எப்பிராயீம் எல்லை பகுதிகளில் சீலோ அமைக்கப்பட்டிருந்தது. கிதியோன் மனாசே கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். இந்த இரண்டு கோத்திரங்கள் மத்தியில் எப்போதும் பிரச்சனைகள் நடந்து கொண்டிருந்தது. தெய்வீக பிறப்புரிமையை மூத்த குமாரனாகிய மனாசேக்குக் கொடாமல் இளையகுமாரனாகிய எப்பிராயீமுக்கு யாக்கோபு கொடுத்ததிலிருந்து இந்த பிரச்சனை துவங்கியது. ஆனால் நியாயாதிபதியின் காலத்தில் எப்பிராயீம் கோத்திரம் முரட்டுதனமாகவும், விக்கரக ஆராதனைக்காரர்களுமாக இருந்தார்கள். புறஜாதிகளோடு எப்படி அடிக்கடி சண்டையிட்டார்களோ அப்படியே இந்த இரு சகோதரர்களுக்குள்ளும் தொடர்ந்து சண்டைகள் நடந்ததை அந்த புத்தகத்தில் காணலாம். அதே நேரத்தில் ஆரோனின் குடும்பத்தாரின் மத்தியிலும் "பதவிக்காகவும், வல்லமைக்காகவும்" போராட்டங்கள் நடந்து கொண்டிருந்திருக்கலாம். அப்போது எலேயாசார் சீலோவில் சட்டப்பூர்வமாக பிரதான ஆசாரியனுடைய பணியை செய்துக்கொண்டிருந்தவரை எப்பிராயீமின் கோத்திரத்தார் விரட்டி அடித்திருக்க வேண்டும். அதற்கு பதிலாக சட்டத்திற்கு விரோதமாக இத்தாமார் வழிவந்த ஏலியை அவர்கள் ஸ்தாபித்திருக்கவேண்டும். பொதுவாக எப்பிராயீம் கோத்திரம், அதின் குடிமக்கள் வாழ்ந்த பட்டணங்களாகிய சீகேம், பெத்தேல், சீலோ இன்னும் பல பட்டணங்களில் எந்த விதமான மோசடிகளும், அயோக்கியமான காரியங்களும், எந்த நிலையிலும் எப்போது வேண்டுமானாலும் ஏற்படுவதற்கு ஆயத்தமாக இருந்தது. இப்படிப்பட்ட இவர்களின் கீர்த்தி பரவியது.

சீலோவில் சுமார் நானூறு வருடங்கள் ஆசரிப்புக் கூடாரம் இருந்தபோதிலும், ஜனங்களின் துன்மார்க்கமான செயலின் நிமித்தம் அவர்களை கர்த்தர் கடுமையாக கண்டித்து, சாமுயேலின் நாட்களில் நடந்தது போல அவருடைய நியாயத்தீர்ப்புகள் அவர்கள் மேல் வரும் என்று கூறினார். "நான் முந்தி என் நாமம் விளங்கப்பண்ணின சீலோவிலுள்ள என் ஸ்தலத்துக்கு நீங்கள் போய், இஸ்ரயேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அதற்கு செய்ததைப் பாருங்கள்." (எரே 7:12) எப்பிராயீம் ஜனங்கள் மற்றும் அங்குள்ள ஆசாரியத்துவத்தின் துன்மார்க்கமான காரியங்களாலே, யாக்கோபின் காலத்தில் யோசேப்புக்கும், அவருடைய குமாரனாகிய எப்பிராயீமுக்குக் கொடுத்த பிறப்புரிமையை யூதாவுக்கு தேவன் கொடுத்தார். இப்படியாக யூதா இராஜரீகமான கோத்திரமானது. "தாம் மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டு விலகி,.... அவர் யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்தார், எப்பிராயீம் கோத்திரத்தை அவர் தெரிந்துகொள்ளாமல் யூதா கோத்திரத்தையும் தமக்குப் பிரியமான சீயோன் பர்வதத்தையும் தெரிந்துகொண்டார்.......... ... தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு......" (சங். 78:60-70)

தேவனுடைய இருதயமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தில் எப்படிப்பட்ட குற்றம் நடந்ததோ, உன்னதமானவரிடமிருந்து இப்படிப்பட்ட தண்டனைதீர்ப்பு வரும் அளவுக்கு எப்பிராயீம் கோத்திரத்தின் ஆசாரியர்களால் மற்றும் ஜனங்களால் எவ்வளவு ஆழமான அக்கிரமங்களும், துன்மார்க்கமான செயல்களும் நடப்பித்தார்களோ ? மேலும், சாமுயேல் சிறுபிள்ளையாக இருந்தபோது ஏலியின் குமாரர்களின் அக்கிரமமான நடத்தை (1சாமு 2:22), அபிமலேக்கு மற்றும் சீகேமின் மனுஷரின் செயல்கள் (நியா 9) மீகா மற்றும் அவன் வார்ப்பித்த உருவங்கள் (நியா 17) தேவனால் நியமிக்கப்பட்ட மனிதர்கள் தீமையான வழிகளில் எவ்வளவாக சென்றார்கள் என்பதை இந்த மூன்று காரியங்களும் நமக்கு காட்டுகிறது.

இப்படியாக கலகக்காரருடைய கைகளில் சீலோ சிக்கியிருக்கவேண்டும். அவர்களால் நியாயமான உரிமையோடு எலெயாசார் வழியாக வந்த பிரதான ஆசாரியர்களை எதிர்த்து ஏலி அல்லது அவருடைய தந்தை பிரதான ஆசாரியனாக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். உண்மையான எலெயாசாரின் சட்டப்பூர்வமான வழியில் வந்த பிரதான ஆசாரியனாகிய புக்கி, உசி அல்லது செராகியாவைப் பற்றி 1நாளாகமம் 6ம் அதிகாரத்தில் பதிவுகள் காணப்பட்டாலும், இவர்கள் அனைவரும் பிரதான ஆசாரியர்களாகப் பணிபுரியவில்லை. அவர்கள் வலுக்கட்டாயமாக நாடுகடத்தப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. (ஜோசபஸ் என்ற வரலாற்று ஆசிரியர்) இந்த சூழ்நிலையில் இவர்கள் எல்லை பகுதியை கடந்த மனாசே ஆசாரியர்கள் தேசத்திற்குள் நுழைந்திருக்கவேண்டும். நியாயமாக பிரதான ஆசாரியர்களாக இருக்கவேண்டிய எலெயாசார்

குடும்பத்தினர் மனாசேயின் தேசத்திற்கு வந்தபோது எப்பிராயீம் மற்றும் மனாசேயுக்கு மத்தியிலிருந்த முன்விரோதங்களும் தொடர்ந்து வந்த பகைகளின் காரணமாக எலியேசர் குடும்பத்தினருக்கு இவர்கள் நிச்சயமாக பாதுகாப்பு கொடுத்து, அவர்களை பிரதான ஆசாரியனாக அங்கீகரித்திருக்கவேண்டும். வெற்றி அடைந்த சந்தோஷத்திலும் ஆர்வத்திலும் கிதியோன் பாகால் வழிப்பாட்டை தகர்த்து, எப்பிராயீமில் உள்ள சீலோவில் அல்ல, மனாசேயில் உள்ள ஒப்ராவில் எலெயாசார் வழிவந்த பிரதான ஆசாரியனை திரும்ப ஸ்தாபிப்பதற்கு கனவு கண்டார். அதற்காகவே ஒப்ராவில் ஒரு ஏபோத்தை செய்து பரிசுத்த ஸ்தலத்தை அமைத்தாரோ ?

"அதினால் கிதியோன் ஒரு ஏபோத்தை உண்டாக்கி, அதைத் தன் ஊரான ஒப்ராவில் வைத்தான், இஸ்ரயேலர் எல்லாரும் அதை பின்பற்றி சோரம்போனார்கள், அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிருந்தது." (நியா 8:27) சட்டத்திற்கு விரோதமான ஆராதனையும், சடங்காச்சாரங்களும் ஒப்ராவில் நடந்தது என்பதை இது பொருள்படுத்துகிறது. மேலும் அங்கு நித்தியமானவரை வழிபட்டுவந்தனர். அங்கு நடத்தப்பட்ட எந்த சடங்குகளைப் பற்றியும், அதை நடத்தின ஆசாரியர்களைப் பற்றியும் எந்தவித குறிப்புகளும் வேதத்தில் கொடுக்கப்படவில்லை. எலெயாசாரின் சரியான வழி மரபினர் காலப்போக்கில் திரும்ப அந்த பணிக்கு நியமிக்கப்பட்டார்கள். சாலோமோனின் காலத்தில், ஆலயம் கட்டப்படுகையில் சாதோக் பிரதான ஆசாரியனாக இருந்தார்.

வசனத்தில் ஏலியைப் பற்றி குறிப்பிடப்படுவதற்கு முன், சாமுயேலின் பிறப்புக்கு சுமார் முப்பது அல்லது நாற்பது வருடங்கள் அவர் பிரதான ஆசாரியனாக பணிபுரிந்து, இருபது வருடங்கள் இஸ்ரயேல் தேசத்தை அவர் நியாயம் விசாரித்திருக்கவேண்டும் என்று நாம் ஊகிக்கலாம். அவருடைய துவக்க வருடங்கள் சிம்சோனின் காலத்தோடு ஒத்திருந்திருக்கவேண்டும். இருவரும் இஸ்ரயேலுக்கு எவ்விதமான சமாதானத்தையும் கொண்டுவரவில்லை. இவர்கள் இருவரின் வாழ்நாட்களிலும் பெலிஸ்தியர்களின் பயமுறுத்தல் நிழலிட்டுக் கொண்டே இருந்தது.

ஏலி, சிம்சோனின் மரணத்திற்குப்பின், நியாயாதிபதி என்ற நிலையை பெற்றிருக்கவேண்டும் என்ற உண்மையே பொருத்தமாக இருக்கிறது. ஆனால் வசனங்களில் குறிப்பிடுகிறபடி அல்ல, ஒரு வல்லமையான வீரமுள்ள மனுஷனாக ஏலி இருந்திருக்க வேண்டும். வசனங்கள் குறிப்பிடுகையில் வலுவற்ற, வயது முதிர்ந்த நிலையில் உள்ள ஏலியைப் பற்றி கூறுகிறது. அவருடைய இளமை பிராயத்தில் இஸ்ரயேலர்கள் எதிர்பார்த்த ஒரு நியாயாதிபதியை போல அவ்வப்பொழுது இஸ்ரயேலர்களின் எதிரிகளை எதிர்த்து நின்று ஜனங்களை வழிநடத்தியிருந்திருப்பார். இப்படியாக வல்லமையான போராட்டங்கள் நடந்துக்கொண்டிருந்ததால், இதற்கு மத்தியில் ஏலி வல்லமையுள்ளவராக செயல்பட்டிருக்க வேண்டும். மதம் சார்ந்த அல்லது அரசியல் சம்மந்தமான எல்லா எதிரிகளையும் இரக்கமற்ற முறையில் வெட்டி வீழ்த்தி தேவனுக்கு பயந்தவரும், விக்கிரக ஆராதனையில் உள்ள இஸ்ரயேலர்களும் அவரைப் பின்பற்ற ஆயத்தமாயிருந்த இராணுவ திறமையோடு, மத வைராக்கியம் கலந்திருந்த ஒரு மனுஷனைப்பற்றி நாம் இங்கு சிந்திக்கவேண்டும். ஆனால் சாமுயேலின் புத்தகத்தில் அவரைப்பற்றி நாம் வாசிக்கும்போது, வயதுசென்ற, வலுவற்ற நிலையில் அன்பையும், வைராக்கியத்தையும் பறி கொடுத்த நிலையில், தன்னுடைய சொந்த குமாரர்களையும் கண்டிக்க இயலாத நிலையில், தனிமையில் தனக்குள்ளே சிந்தித்து கொண்டும், ஆசரிப்புக் கூடாரத்திற்கு வந்த அந்த ஸ்திரீ பாகாலை வழிபடுபவளா அல்லது யேகோவாவை வழிபடுபவளா என்பதையும் அறியாமல் வாசலில் ஏலி அமர்ந்திருந்தார்.

## அன்னாள், எல்க்கானா மற்றும் சாமுயேல்

வேதாகமத்தை பொறுத்தவரைக்கும் உண்மையில், இந்த ஒரு கட்டத்தில் ஏலியின் கதை துவங்குகிறது. தெய்வ பக்தியுள்ள லேவியனாகிய எல்கானா, பொறுமையும் சாந்த குணமுடைய மனைவி அன்னாளோடு, வருஷந்தோரும் அனுசரிக்கும் பண்டிகைக்கு சீலோவுக்கு வந்திருந்தனர். அது பெந்தெகொஸ்தே பண்டிகையாக இருந்திருக்கக்கூடும். லேவியர்களின் சடங்குகள் அந்நாள் மட்டும் அனுசரிக்கப்பட்டு வந்ததற்கு இதுவே ஆதாரம். ஆனால் 1சாமு 2:12 -17 வசனங்களில் ஏலியின் குமாரர்கள் செய்த அராஜகத்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இவைகளைக் குறித்து மிகவும் வருத்தப்பட்ட அநேகரில் லேவியனாகிய எல்க்கானா ஒருவராக இருந்திருக்கவேண்டும். ஆனால் இவைகளை சீர்ப்படுத்த தேவன் ஒருவரை அனுப்புவார் என்பதை உண்மையாக நம்பிக்கொண்டிருந்தார்கள். அவருடைய சொந்த குமாரனே இஸ்ரயேலை விடுவித்து, இறைவழிபாட்டை நிலைநிறுத்துவதற்காக நியமிக்கப்படப்போகிறார் என்பதை கொஞ்சம்கூட அவர் எண்ணிபார்க்கவில்லை. அந்த நேரத்தில் அன்னாள் ஜெபிக்கையில் தன்னுடைய இருதயத்தை ஊற்றினாள். ஒரு குமாரனுக்காக வேண்டுதல் செய்துக்கொண்டிருந்தார். அப்போது ஏலி அவளை உற்றுப்பார்த்து, அவள் மது அருந்தியிருந்தாள் என்று எண்ணி அவளை கண்டித்தார்.

ஒரு பிரதான ஆசாரியனாக அழைக்கப்பட்டவர், ஜனங்களின் வேதனைகளையும், உபத்திரவங்களையும் நன்கு உணர்ந்தவராக இருக்கவேண்டும். மேலோட்டமாக ஒருவரை கண்டு தவறாக எண்ணியிருக்கக்கூடாது. அவளுடைய உள்நோக்கங்களை உணராமல் வெறித்திருக்கிறாள் என்ற முடிவு மிக தவறாக இருக்கிறது. நியமிக்கப்பட்டிருக்கும் முக்கியமான பணிக்கு ஒரு உணர்வற்ற செய்கையை வசனத்தின் துவக்கத்திலேயே ஏலி வெளிப்படுத்தினார் "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான

ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபி 4:15) என்று நாம் வாசிக்கிறோம். ஆனால் ஏலி இப்படிப்பட்ட ஒரு பிரதான ஆசாரியனாக இருக்கவில்லை. அவளுடைய குற்றத்தை எந்த விதத்திலும் உணராமல், அவள் வேண்டிக்கொண்ட காரியம் இன்னதென்றும் கேட்காமல் "....சமாதானத்துடன் போ, நீ இஸ்ரயேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக." (1சாமு 1:17)என்று ஏலி பதில் அளித்தார்.

காலம் நிறைவேறினபின், மீண்டுமாக அன்னாள் ஏலியினிடத்தில் வந்தாள். இந்த முறை ஜெபத்தின் பலனாகிய தன்னுடைய மூத்த குமாரனோடு வந்தாள். எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆகவே அவள் முந்தி ஏலியை சந்தித்தபோது நடந்த சம்பாஷணைகளைக் கூறவேண்டியதாக இருந்தது. அவளுடைய குமாரனை ஆசரிப்புக் கூடாரத்தின் பணிக்காக ஒப்புகொடுக்க அவள் நேர்ந்துக்கொண்டிருந்த பொருத்தனையை செலுத்துவதற்காக வந்திருந்தார். ஒரு லேவியின் புத்திரனாக ஏலியின் பராமரிப்பில் வளர்ந்தார். ஏலி எந்த வித எதிர்ப்பும் இல்லாமல் இவரை ஏற்றுக்கொண்டார். இப்போது ஏலியின் சொல்பேச்சைக் கேட்டு நடப்பதற்கு ஒரு சிறுவன் அவருக்கு உதவியாக இருந்தபடியினால், சாமுயேல் ஏலியோடு தங்கினார்.

தேவன் மேல் விசுவாசமாயிருந்தபோதும், இஸ்ரயேலின் மையப்பகுதியிலிருந்த சீலோவில், தேவன் மேல் இருந்த விசுவாசம் குறைந்து, கானானியர்களின் விக்கிரக தெய்வங்கள் மேல் நம்பிக்கை அதிகரித்துக்கொண்டிருந்தது. அன்னாள் எந்த விதமான அவநம்பிக்கையும் கொள்ளவில்லை என்பதை அவள் பாடின பாட்டின் மூலம் அறிந்துக்கொள்ளலாம். (1சாமு 2:11-10) தேவன் தன்னுடைய ஜனத்திற்காக நன்மையான காரியங்களை செய்வார் என்றும் தேவனுடைய கரம் இதில் இருந்ததை அவள் முழுமையாக உணர்ந்தாள். "தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார், துன்மார்க்கர் இருளில் மௌனமாவர்கள்.." என்று பாடினாள். அவள் இதை பாடியபோது, தன்னுடைய குமாரனாகிய சாமுயேலை மனதில் நிச்சயமாக நினைத்திருப்பாள். அவள் குமாரனாகிய சாமுயேல் தெய்வீக பாதுகாப்பில் எந்தவிதமான தீங்கும் அணுகாமல் இருப்பான் என்ற முழு நம்பிக்கையோடு அன்னாள் தன்னுடைய குமாரனை ஏலியினிடம் விட்டுச் சென்றாள்.

ஏலி தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்திருந்தார். "சீலோவிலே அவர்கள் புசித்துக் குடித்தபின்பு, அன்னாள் எழுந்திருந்தாள், ஆசாரியனாகிய ஏலி கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நிலையண்டையிலே ஒரு ஆசனத்தின் மேல் உட்கார்ந்திருந்தான்." (1சாமு 1:9) ஒரு நாள் கர்த்தருடைய தீர்க்கதரிசி ஏலியை சந்திக்க வந்தார். ஆலயத்தின் ஒரு தூண் அருகே அவர் ஆசனம் இருந்தது. அன்னாள் அவரை முதன்முறை சந்தித்த அதே இடம். அங்கிருந்து பக்கமாக வந்த வெளிச்சத்தில் ஆசரிப்புக் கூடாரத்தை மூடிகொண்டிருக்கும் அசுத்தத்தை காணமுடிந்தது. ஆசரிப்புக் கூடாரத்தின் அந்த தூண் பரிசுத்த ஸ்தலத்திற்கு நுழைவதற்கான வழியாக இருந்தது. எனவே அந்த ஆசனம் பிரகாரத்தில் இருந்திருக்கவேண்டும். ஆனால் நியாயப்பிரமாணத்தின்படி லேவியர்களும் ஆசாரியர்களும் மட்டுமே அதற்குள் பிரவேசிக்கவேண்டும். ஏலியின் நாட்களில் எல்லாரும் உள்ளே பிரவேசித்தார்கள். தேவன் ஆரோனுக்கும் அவருடைய குமாரர்களுக்கும் எப்படிப்பட்ட விசுவாசத்தின் கீழ் இந்த பொறுப்புகளை வாக்களித்தார் என்பதை இப்போது ஏலிக்கு முன் நின்ற தேவனுடைய தீர்க்கதரிசி பயபக்தியோடு உரைத்துக் கொண்டிருந்தார். மேலும் இப்போது ஏலி அந்த கற்பனைகளை மீறி, தன்னுடைய பரிசுத்தமான பொறுப்புகளை வெறுத்து, ஆசரியர்களாக இருந்த தன்னுடைய குமாரர்களின் சட்டவிரோதமான செயல்களில் பங்கெடுத்து, தேவனை கனப்படுத்துவதைக் காட்டிலும் அவர்களை நேசித்ததன் காரணம் என்ன என்பதையும் அவரிடம் விசாரிக்கும்படி தேவன் அந்த தீர்க்கதிரிசியை அனுப்பினார்.

ஆகவே தேவனுடைய தீர்க்கதரிசி தெய்வீக வாக்கை அறிவித்தார் - அவருடைய வம்சம் அற்றுப்போய், இத்தாமார் வழிவந்த ஆசாரியத்துவம் துண்டிக்கப்பட்டு முடிவடைய போவதென்றும், அதற்கு பதிலாக, தெய்வீக சித்தத்தின்படி விசுவாசமுள்ள ஆசாரியர்கள் நியமிக்கப்படப் போகிறார்கள் என்றும் அவருக்கு அறிவிக்கப்பட்டது. இந்த பணியிலிருந்து பகிரங்கமாக தள்ளப்படுவதற்கு ஒரு அறிவிப்பாகும். ஒருவேளை ஏலி இதை மிக முக்கியமான எச்சரிப்பாக எடுத்துக்கொண்டு, மனம் வருந்தி, தன்னுடைய வழிகளை திருத்தி அமைத்திருந்தால், முடிவுகளும் மாற்றப்பட்டிந்திருக்கலாம். ஏனெனில், மனந்திரும்புவதற்கான கால அவகாசம் அதிகமாகவே இருந்தது. உண்மையான மனந்திரும்புதல் இருக்கும் பட்சத்தில் நம்முடைய தேவன் பதினோராம் மணி வேளையின் ஐம்பத்தொன்பதாவது நிமிடத்திலும் நியாயத்தீர்ப்புகளை மாற்றுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார். ஆனால் சுமார் ஆறு வருடங்களுக்குப் பின்னும் சூழ்நிலைகள் எந்த விதத்திலும் மாறவில்லை. அப்பொழுது சாமுயேல் என்னும் பிள்ளையாண்டான் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார். ஏலியின் பிள்ளைகள் இன்னும் அந்த கொடூரமான தீய செயல்களை தொடர்ந்து செய்துக்கொண்டிருந்தார்கள். அவரும் எந்த விதமான மாறுதல்களுக்கும் தன்னை உட்படுத்திக்கொள்ளாததினால் அவருக்கு கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு உறுதியானது.

சிறுவனாகிய சாமுயேல் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, இறுதியான தேவனுடைய தீர்ப்பை ஏலியினிடம் அறிவித்தார். அந்த தருணம் ஏலி மற்றும் சாமுயேலின் வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவமாக இருந்திருக்கும். அந்த சம்பவத்தின்போது சாமுயேலுக்கு பன்னிரெண்டு வயதும் ஏலிக்கு எண்பத்தைந்து வயதும் இருந்திருக்கவேண்டும். இரவு நேரத்தில், இருவரும் உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் -"தேவனுடைய பெட்டி இருக்கிற கர்த்தருடைய ஆலயத்தில் தேவனுடைய விளக்கு அணைந்து போகுமுன்னே சாமுயேலும் படுத்துக் கொண்டிருந்தான்." (1சாமு 3:3)) அவருடைய குரு மற்றும் வழிகாட்டியாக

இருப்பவர் தன்னுடைய பொறுப்பிலிருந்து தவறியதால் அந்நிலையிலிருந்து புறக்கணிக்கப்பட்டார் என்ற செய்தியை கர்த்தர் சாமுயேலிடம் கூறினார். அவரை சுற்றி நடந்துக்கொண்டிருந்த அக்கிரமத்தையும், இந்த துன்மார்க்கமான காரியங்களை முழுமையாக புரிந்துக்கொள்வதற்கு அவருடைய வயது மிகவும் குறைவாக இருந்தது. ஏலியை அவர் மரியாதையோடும் பக்தியோடும் கனப்படுத்தியிருக்கவேண்டும். ஏலியின் வீடு பாழாகிறதையும், ஆசாரிய பொறுப்பிலிருந்து அவர் தள்ளப்படக்கூடிய செய்தியையும் சாமுயேல் அவருக்கு சொல்ல வேண்டியதாக இருந்தது.

அனைத்தையும் சொல்லும்படிக்கு ஏலி சாமுயேலை கேட்டுக்கொண்டார். கடைசி நிமிடத்திலும் அவருடைய தவறுகளுக்காக மனம்வருந்தினதாக எதுவும் சொல்லப்படவில்லை. சாமுயேலின் வார்த்தைகளுக்கு அவர் எந்த எதிர்பேச்சும் பேசவில்லை அல்லது தன்னை தப்புவிக்க அவர் எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை. மாறாக.."அப்பொழுது சாமுயேல் ஒன்றையும் அவனுக்கு மறைக்காமல், அந்தக் காரியங்களையெல்லாம் அவனுக்கு அறிவித்தான். அதற்கு அவன், அவர் கர்த்தர் அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக..." (1சாமு 3:18) என்று கூறினார். இந்த கடைசி மணி நேரத்திலும் தன்னை திருத்திக்கொள்ள அவர் எந்த விதமான முயற்சிகளையும் எடுக்க சுறுசுறுப்பாய் எழும்பவில்லை. எந்த எதிர்ப்பும் இன்றி அந்த சூழ்நிலையை சாதகமாக ஏற்றுக்கொண்டார்.

இந்நேரத்திலிருந்து பொது ஜனங்களின் கண்களுக்கு சாமுயேல் அதிகமாக தென்பட்டார். அவர் இருபது வயதை எட்டியபோது "சாமுயேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண் முதல் பெயர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரயேலருக்கும் விளங்கினது. கர்த்தர் பின்னும் சீலோவிலே தரிசனம் தந்தருளினார், கர்த்தர் சீலோவிலே தம்முடைய வார்த்தையினாலே சாமுயேலுக்குத் தம்மை வெளிப்படுத்தினார்." (1சாமு 3:20,21) ஒத்னியேல் மற்றும் பினேகாசின் நாட்களிலிருந்து சுமார் முந்நூறு வருடங்களாக, தேவனுக்காகவும் அவருடைய பிரமாணத்திற்காகவும் இறுதிவரையில் நிலைநின்ற ஒரு நியாயாதிபதியைக்கூட காணமுடியவில்லை. இதுவரைக்கும் கற்பிக்கப்படாத நீதியான வழிகளும், நியாயமான பாதைகளும் இப்போது இஸ்ரயேலர்களுக்கு கற்பிக்கப்பட்டது. நீதியை படிப்பிக்கும் ஆர்வமூட்டும் புதிய வழிகள், ஊக்குவிக்கப்பட்டபோது, பழங்காலத்து விக்கிரகங்களும், தேவனற்ற சூழ்நிலைகளுக்கு நாளுக்கு நாள் பின்னேற்றமடைந்தது.

## ஏலியின் பணி நிறைவடைந்தது

ஆனால் இஸ்ரயேல் இன்னும் மனம் மாறவில்லை. சில வருடங்கள் சென்றபோது, மீண்டும் இஸ்ரயேல் பெலிஸ்தியரிடம் சிக்கியது. சீலோவிலிருந்து முப்பது மைல்களுக்கு அப்பாற்பட்ட ஆபேக்கில் யுத்தம் நடந்தது. முதலில் இஸ்ரயேலர்களுக்கு பேரழிவு ஏற்பட்டது. நாலாயிரம் மனுஷர் கொல்லப்பட்டார்கள். இது ஒரு கெடுங்குறியாக இருந்தது. யுத்தத்தில் வெற்றி அடைவதற்கு இஸ்ரயேலின் மூப்பர்கள் கூடிசேர்ந்து திடீரென்று ஒரு முடிவெடுத்தார்கள். யுத்தத்தில் தங்களுக்குமுன் எடுத்துச்செல்வதற்கு, ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள உடன்படிக்கைப் பெட்டியை எடுத்து வர - சீலோவுக்கு ஆள் அனுப்பினார்கள். இந்த பரிசுத்தமான அடையாளம் எதிராளிகளின் கைகளில் தேவன் விடமாட்டார் என்றும் அதனுடைய பாதுகாப்பின் கீழ் அதாவது மாந்திரீக வல்லமையினால் பெலிஸ்த்தியர்களை வீழ்த்திவிடலாம் என்றும் எண்ணினார்கள்.

இப்படிப்பட்ட பாவ செயல் இஸ்ரயேலில் இதுவரைக்கும் காணப்படவில்லை. தொடர்ந்து இஸ்ரயேலை வழிடத்தும் தேவ பிரசன்னத்தை, உடன்படிக்கைப் பெட்டி, அடையாளப்படுத்தியது. இதை காண ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை. பிரதான ஆசாரியனை தவிர ஒருவரும் இதை தொடவும் முடியாது. நாற்பது வருட வனாந்தர பிரயாணத்தில் மற்றவர்கள் காணாதபடிக்கு அதை இளநீலநிற மூடல்களினால் மூடிவிடுவார்கள். எந்த பிரதான ஆசாரியரும் இப்படிப்பட்ட காரியத்தை அனுமதித்தால் அவருடைய பொறுப்பிலிருந்து உடனே தள்ளப்படுவார். ஆயினும் ஏலி, துரோகிகளாகிய தன்னுடைய இரண்டு குமாரர்கள் கையில் உடன்படிக்கைப் பெட்டியை போர்களத்திற்கு அனுப்ப சம்மதித்தார்.

நடந்ததை கண்டு "ஐயோ, அந்த மகத்துவமான தேவர்களின் கைக்கு நம்மை தப்புவிப்பவர் யார் ? எகிப்தியரைச் சகலவித வாதைகளினாலும் வனாந்தரத்திலே அடித்த தேவர்கள் இவர்கள் தானே. பெலிஸ்தரே, திடன்கொண்டு புருஷரைப்போல நடந்துகொள்ளுங்கள், எபிரெயர் உங்களுக்கு அடிமைகளாயிருந்ததுபோல, நீங்களும் அவர்களுக்கு அடிமைகளாகாதபடிக்கு, புருஷராயிருந்து, யுத்தம்பண்ணுங்கள்" என்று பெலிஸ்தியர்கள் கதறினார்கள். (1சாமு 4:8,9) நான்கு நூற்றாண்டுகளுக்கு முன், எகிப்தில் நடந்த வாதைகளைப் பற்றியும், அவைகளினால் ஏற்பட்ட பயங்கரங்களையும் பெலிஸ்தியர்கள் இந்நாள் வரைக்கும் நினைவில் வைத்திருந்தார்கள். உடன்படிக்கைப் பெட்டி இருந்ததினால் புதுப்பிக்கப்பட்ட துணிச்சலோடு யுத்தம் செய்தார்கள். அதன் பலனாக ஏலியின் குமாரர்கள் உட்பட முப்பதாயிரம் இஸ்ரயேலர்கள் வெட்டப்பட்டார்கள். உடன்படிக்கைப் பெட்டியும் கைப்பற்றப்பட்டது.

அன்றையதினமே ஒருவன் படையிலிருந்து ஓடி, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் தலையின்மேல் புழுதியை வாரிப்போட்டுக்கொண்டு, சீலோவுக்கு வந்து, பேரிழப்பை பற்றிய செய்திகளை அறிவித்தான். தெய்வீக இருப்பிடத்திற்கு விரோதமான செயலை செய்துவிட்டோம் என்பதை ஏலி முன்னதாகவே அறிந்திருந்தார். உடன்படிக்கைப் பெட்டி பத்திரமாக திரும்பி வந்துவிடும் என்ற உறுதியோடு, வழிமேல் விழிவைத்து தன்னுடைய தலையை சற்று உயர்த்திக்கொண்டு ஏலி தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்து ஆவலோடு காத்துகொண்டிருந்தார். உடன்படிக்கைப் பெட்டி பத்திரமாக வந்து

அதனிடத்தில் சேர்ந்தால் நிம்மதியாக ஆசனத்தில் சாயலாம் என்று ஏலி காத்திருந்தார். "செய்தி கொண்டுவந்தவன் பிரதியுத்தரமாக - இஸ்ரயேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடிப்போனார்கள், ஜனங்களுக்குள்ளே பெரிய சங்காரம் உண்டாயிற்று, உம்முடைய குமாரராகிய ஓப்னி, பினெகாஸ் என்னும் இருவரும் இறந்துபோனார்கள், தேவனுடைய பெட்டியும் பிடிபட்டுப்போயிற்று என்றான். அவன் தேவனுடைய பெட்டியைக் குறித்துச் சொன்னவுடனே, ஏலி ஆசனத்திலிருந்து வாசலின் பக்கமாய் மல்லாக்க விழுந்தான். அவன் கிழவனும் ஸ்தூலித்தவனுமாயிருந்தபடியால் அவன் பிடரி முறிந்து செத்துப்போனான். அவன் இஸ்ரயேலை நாற்பது வருஷம் நியாயம்விசாரித்தான்." (1சாமு 4:17,18) இறுதியில், தேவனுக்கு துரோகம் செய்துவிட்டோம் என்று முழுமையாக உணர்ந்தபோது, ஏற்பட்ட அதிர்ச்சி அவரைக் கொன்றது.

பெலிஸ்தியர்கள் இஸ்ரயேலர்களை விரட்டி அடித்து, சீலோவை முழுமையாக அழித்திருப்பார்கள். அதற்குபின் அது எழும்பவே இல்லை. நானூறு வருடங்களாக தேவனை சந்திக்கும் இடமாகவும், தேசிய அளவில் தேவனை ஆராதிக்கக்கூடிய ஸ்தலமாக சீலோ இருந்தது. இறுதியாக பிரதான ஆசரியனுடைய அவிசுவாசத்தினாலும், சோம்பலினாலும், தங்களுடைய இருதயத்தால் தேவனை விட்டு வெகு துாரத்திலும் தங்களுடைய உதடுகளினால் மிக நெருக்கமாக தேவனை கொண்டிருந்த இஸ்ரயேல் ஜனங்களினாலும், அனைத்தும் முடிவுக்கு வந்தது. (ஏசா 29:13)

**நமக்குள்ள பாடம்**

பயனற்றவகையில் தீமைக்கு ஆதரவளித்து, அதை கவனியாமல் விட்டுவிட்டு, அப்படிப்பட்ட தீமைகள் நடக்காததுபோல பாவனை செய்வதே ஏலியின் வாழ்க்கையில் கிறிஸ்தவர்களுக்குண்டான பாடமாக இருக்கிறது. தீமை தானாக போய்விடாது, அதனுடைய வல்லமையை அதிகரிக்க, இருக்கும் இடத்திலே அமர்ந்து அந்த தீமை செல்வதற்காக சாலைகளை பெரிதாக்கி கொண்டிருக்கும். தீமையை துரிதமாக எதிர்க்கவேண்டும். "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்." (எபே 6:11,14,17)

உண்மையில் யுத்தகளத்தில் அனைவரும் கூடிவந்தபோது பெலிஸ்தியர்கள் இஸ்ரயேலர்களை எதிர்க்கமுடியாத பலசாலிகள் என்று பயந்திருந்திருந்தார்கள். ஆனால் எந்த முடிவுகளையும் உடனே எடுக்க தயங்கிய ஏலி மற்றும் அக்காலத்தில் உள்ள விசுவாசமற்ற ஜனங்கள் பற்றிய காரசாரமான விமர்சனமும் அத்தருணத்தில் எதிராளிகளாகிய பெலிஸ்தியருக்கு சாதகமாக இருந்தது. ஆகவே "பெலிஸ்தரே, திடன் கொண்டு புருஷரைப்போல நடந்து கொள்ளுங்கள், எபிரேயர் உங்களுக்கு அடிமைகளாயிருந்ததுபோல, நீங்களும் அவர்களுக்கு அடிமைகளாகாதபடிக்கு, புருஷராயிருந்து, யுத்தம்பண்ணுங்கள் ...." (1சாமு 4:9) என்று சொல்லிக் கொண்டார்கள். "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்." (1கொரி 16:13) அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் பிரபலமான கட்டளை கொடுப்பதற்கு இதுவே அப்போஸ்தலனாகிய பவுலை ஊக்குவித்திருக்கும். இத்தனை வருடங்களாக, இவ்வளவு அனுபவங்களையும் அதிகாரத்தையும் பெற்றிருந்த அந்த முதியவர், இஸ்ரயேலின் மதம் மற்றும் அரசியல் ரீதியாக அவருக்கு இவ்வளவு செல்வாக்கு இருந்தும் விக்கிரகாரதனையும், மதமற்ற சுற்று சூழ்நிலையையும் மேற்கொள்ள அனுமதித்தார். விசுவாசத்தையும், பக்திவைராக்கியத்தையும் தவிர தன்னிடம் ஒன்றும் இல்லாத அந்த சிறிய பிள்ளையாண்டான் இதே தீய சக்திகளை சவாலாக ஏற்றுக்கொண்டு அவைகளை வென்றார். யோசுவாவின் வழி நடத்துதலின் கீழ் அமைதியாக கானானுக்குள் பிரவேசித்து அந்த ஜனங்களை அல்ல, சகல அராஜகத்தையும் செய்துக்கொண்டிருந்து, ஒழுங்கீனமாக ஜீவித்து, விக்கிரகாரதனை செய்துக்கொண்டிருந்த இஸ்ரயேல் ஜனங்களையே சாமுயேல் கண்டார். யோசுவாவின் கீழ் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்த ஒழுக்கமுள்ள தேசமாகவும், நியாயப்பிரமாணத்திற்கு இசைவாக வாழ்ந்து, உண்மையாக தேவனை தொழுதுக்கொண்டிருந்தனர். காலங்கள் சென்றபோது இஸ்ரயேலர், சாமுயேலை மோசேக்கு சமமாக பேசினார்கள். ஆனால் ஏலியைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை.

இன்று மோவாபின் சமதளத்தில் நாம் நிற்கிறோம். யோர்தானின் வெள்ளம் மட்டுமே நம்மை இம்மானுயேலின் தேசத்திலிருந்து பிரிக்கமுடியும். இந்த யுகம் முழுவதிலும் உள்ள பரிசுத்தவான்களின் உண்மையான நம்பிக்கையும், எதிர்பார்ப்புகளும் பரலோகத்தை குறித்தே உள்ளது. ஆயினும் பிரிக்க முடியாதபடிக்கு இணைக்கப்பட்டுள்ள இந்த பூமி மற்றும் அதில் வசிப்பவர்களின் எதிர்காலத்தைப் பற்றி யோசனைகளும் உண்டு. அந்த நேரம் வந்துவிட்டது தேசம் நமக்கு முன் பரந்து விரிந்திருக்கிறது. எதிரில் இருக்கக்கூடிய மிகப்பெரிய பணியைச்செய்ய தேவனுடைய ஜனங்கள் அமைதியுடன் காத்திருக்கிறார்கள். கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் கிடைக்கப் பெற்ற வெற்றிகள், வருங்கால வேலைகளுக்கு தேவனுடைய கரங்களில் ஆயத்தமாக இருக்கும் கருவிகளாக இருப்பதை நாம் விரைவில் உணர்ந்துக்கொள்ளலாம். அதாவது இந்த பூமியைப் பொறுத்தவரையில், சிருஷ்டிகரின் மிகப் பெரிய உச்சக்கட்ட நோக்கத்தை உணர்ந்துக்கொள்ளுவோம்.

மனிதனுடைய இதயத்திற்கு ஏற்ற மனிதன்

# சவுல்

*அப்பொழுது சாமுயேல் - நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்தபோது அல்லவோ இஸ்ரயேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர், கர்த்தர் உம்மை இஸ்ரயேலின்மேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே. 1சாமு 15:17*

Daniel Kaleta

"எஜமானன் போலவே ஊழியக்காரனும்" என்ற வழக்கச்சொல் ஒன்று உண்டு. சில சூழ்நிலைகளில் "உழியக்காரனை போல எஜமான்" என்ற காரியமும் உண்மையாக காணப்படுகிறது. ஜனநாயக நாடுகள் தங்களுடைய எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யக்கூடிய தலைவர்களை தங்களிலிருந்து தேர்வு செய்யப்படுவதில் இந்த காரியத்தை நாம் பார்க்கலாம். பலமுள்ள சமுதாயம் பலமான ஒரு தலைவரை தேர்வு செய்யும். தரம் தாழ்ந்தவர்கள் தரம் தாழ்வில் உள்ள நபரை தேர்வு செய்வார்கள்.

ஆனால் பழைய இஸ்ரயேல் இராஜாக்கள் "தேவனுடைய கிருபையினால்" ஆட்சிபுரியும்போது சூழ்நிலைகள் வித்தியாசமாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அவர்கள் மக்களின் நன்மதிப்பை பெறவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆயினும், பொது ஜனங்களின் வெறுப்பை சம்பாதிக்கும் இராஜாக்கள் தங்களுடைய வல்லமையை வெற்றிகரமாக செயலாற்ற முடியாமல், அவரைக் காட்டிலும் சிறந்த ஒருவருக்கு எளிதில் இராஜ்யத்தை விட்டுக்கொடுக்க சூழ்நிலைகள் ஏற்படலாம். வல்லமையுள்ள ஒரு கொடுங்கோல் அரசனுக்குக்கூட அந்த சமுதாயத்தைக் கட்டிகாக்க குறைந்த பட்சம் ஆதரவு தேவைப்படுகிறது.

மற்ற நாடுகளைப்போல தங்களை ஆட்சி செய்வதற்கு இராஜா வேண்டும் என்று இஸ்ரயேலர்கள் கேட்டதினால், தேவன் சவுலை அக்காலத்தில் இராஜாவாக ஏற்படுத்தினார். (1ராமு 8:5) கடுமையான இராஜரீக உரிமைகளை சாமுயேல் வரிசைப்படுத்தியபோதும் அவர்கள் பின்வாங்கவில்லை. (1சாமு 8:11-18) இவர்களின் விருப்பம் நியாப்பிரமாணத்திற்கு எதிரானதாக இருக்கவும் இல்லை. ஏனெனில், இக்காரியங்கள் நடக்கும் என்பதை முன்னதாகவே தேவன் அறிந்திருந்தார் (உபா 17:14) இஸ்ரயேல் ஜனங்கள் தன்னை புறக்கணித்தார்கள் என்பதற்கு ஒரு அடையாளமாக தேவன் இதை புரிந்துகொண்டார். புறக்கணிப்பது என்றால் அன்புக்கு எதிரான அத்துமீறின செயலாகும். தேவனுடைய ஆட்சியை நிராகரித்த ஒரு சமுதாயம், தேவனை கனப்படுத்தாத தன்னுடைய சொந்த கிரியைகளை வெளிப்படுத்தின ஒரு இராஜாவினுடைய ஆட்சியை ஏற்றுக்கொண்டது.

சவுல் தேவனால் தேர்வு செய்யப்பட்டு. நியமிக்கப்பட்டான். தேவனுடைய முடிவுகள், நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்ட ஞானத்தினால் நிறைந்திருக்கிறது. (ரோ 11:33) சில நேரங்களில் நாம் இதை புரிந்துக்கொள்ளாமல் இருப்பதே நன்மையாக இருக்கும். தேவன் தன்னுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு தாசனை ஏன் தேர்வு செய்யவில்லை என்ற கேள்வி எழும்பலாம். (ஆதி 49:10)ஒருவேளை குறித்தக்காலம் இன்னும் வரவில்லையோ, அல்லது பாரேசிலிருந்து பத்தாம் தலைமுறை இன்னும் பூர்த்தியாக வில்லையோ (உபா 23:2) ஒருவேளை தேவன் தாயின் வயிற்றிலேயே முன்குறிக்கப்பட்ட (சங் 139:16) தாவீதுக்காக காத்திருந்தாரோ அல்லது தீமையான மனித இருதயம் கொண்ட ஒரு இராஜா எப்படியாக ஆட்சிசெய்வான் என்று இஸ்ரயேலுக்கும் அவர்களின் சந்ததிகளுக்கும் காட்டவேண்டும் என்ற காரியத்திற்காக சவுலை தேர்வு செய்தாரோ இல்லையோ என்று தெரியவில்லை. இந்த கேள்விக்கான பதில் நமக்கு வெளிப்படவில்லை.

சவுல் ஒரு சிறந்த குடும்பத்திலிருந்து வரவில்லை. அவன் ஒரு சராசரி குடியானவனாக இருந்தான். அவன் சிம்மாசனத்தில் அமர்ந்தப் பின்னும் வயலில் வேலை செய்தான். (1சாமு 11:5) தொலைந்துப்போன தன்னுடைய தகப்பனுடைய கழுதைகளை தேடும்போது சாமுயேலை சந்தித்தான். இனி இஸ்ரயேலில் சிறந்தவைகள் யாவும் இவருக்கே சொந்தம் என்று அறிந்தபோது -

"நான் இஸ்ரயேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா ? பென்யமீன் கோத்திரத்துக் குடும்பங்களிலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா ? நீ இப்படிப்பட்ட வார்த்தையை என்னிடத்தில் சொல்வானேன்" (1சாமு 9:21) என்றான். மிகப்பெரிய கோத்திரத்திலிருந்தும் வல்லமையான குடும்பத்திலிருந்தும் வருபவர்கள் மட்டுமே தேவனுடைய ஜனங்களை வழிநடத்த முடியும் என்று சவுல் நினைத்திருக்கவேண்டும். ஆனால் இஸ்ரயேலர்களில் அநேக நியாயாதிபதிகள் இப்படியாக இருக்கவில்லை. எடுத்துக்காட்டாக - கிதியோன், மிகச் சிறந்த படைவீரர்களைக் கொண்டு வெற்றிக் காணவில்லை.

தான் இராஜாவாக இருக்கப் போகிறோம் என்று முன்னதாக சவுல் அறிந்திருந்தும், அவன் முடிசூட்டப்படும் நாள் வந்தபோது, யாரும் காணாத ஒரு இடத்தில்

ஒளிந்துகொண்டான். தங்களுடைய வருங்கால இராஜாவைத் தேட உதவிசெய்யும்படி இஸ்ரயேல் ஜனங்கள் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினார்கள். (1சாமு 10:22) சவுலின் உயரத்தைக் கண்ட ஜனங்கள், சாமுயேலின் வார்த்தைகளைக் கேட்டவுடன் "ராஜா வாழ்க" என்று ஆர்பரித்தார்கள். சில "பேலியாளின் மக்கள்" அவனுடைய தாழ்மையான பின்னனியை கண்டு அவனை வெறுத்தார்கள். இப்படிப்பட்ட மோசமான காரியங்கள் சவுலின் பயத்தை மேலும் உறுதிப்படுத்தியது. இதன் காரணமாகவே அவன் தன்னுடைய அராசாங்கத்தையும், நீதிமன்றங்களையும், காலாட்படைகளையும் ஸ்தாபிக்காமல், தன்னுடைய விவசாயத்திற்கு திரும்பியிருக்கவேண்டும்.

சவுல் ஒரு நல்ல குடிமகனாக செயலாற்றிய ஒரு சம்பவம் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இஸ்ரயேலின் எதிரியை முதன்முறையாக அவன் தோற்கடித்தப்போது, சவுலின் சார்பில் இருந்த சிலர், துவக்கத்தில் சவுலை இராஜாவாக ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களைத் தகுந்தபடி தண்டிக்கப்படவேண்டும் என்று 'சாமுயேலிடம் முறையிட்டார்கள். ஆனால் அந்த சூழ்நிலைக்கு ஏற்றபடி சவுல் நிதானமாக நடந்துகொண்டான். "அதற்கு சவுல் - இன்றையதினம் ஒருவரும் கொல்லப்படலாகாது. இன்று கர்த்தர் இஸ்ரயேலுக்கு இரட்சிப்பை அருளினார் என்றான்." (1சாமு 11:13) இப்படியாக இஸ்ரயேலர்கள் மற்றும் சாமுயேலின் இருதயத்திலும் சவுல் இடம் பிடித்தான். இந்த முறை கில்காலில் அவனை இராஜாவாக ஏற்படுத்தினார்கள். (1சாமு 11:15) இதற்குப்பின் எதிரியாகிய பெலிஸ்தியர்களின் கொடூரமான தாக்குதல்களை தடுக்க தேவையான காலாட்படைகளை அவன் சேர்த்திருக்கவேண்டும்.

பிற்காலத்தில், சவுலின் தனிப்பட்ட ஒழுக்கம் தோல்வி அடைந்த போது, ஆரம்பத்தில் கொண்டிருந்த தாழ்வு மனப்பான்மையை சாமுயேல் சுட்டிக் காட்டினார். "நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்த போது அல்லவோ இஸ்ரயேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர், கர்த்தர் உம்மை இஸ்ரயேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தார்." (1சாமு 15:17) அற்பமான நிலையில் சராசரி மனிதனாக இருந்த சவுல், முழுமையான பேராசையோடு, இரக்கமற்ற கொடுங்கோல் இராஜாவாக, தன்னுடைய அரசியல் இலக்கை அடைவதற்கு ஒரு பட்டணத்தில் உள்ள அனைத்து ஆசாரியர்களையும் கொன்று குவித்தான். (1சாமு 22:18,19) உறவினர்களை உபத்திரவப்படுத்தி, (1சாமு. 20:30) தன்னுடைய சொந்த குமாரனையும் கொல்வதற்கு துணிந்து(1சாமு 14:44, 20:33).... இப்படிப்பட்ட காரியங்கள் சாதாரணமானவைகள் அல்ல. சவுலின் முடிவு இப்படிதான் முடிவடையும் என்பதாலோ அல்ல, அவன் சில ஞானமான ஆலோசனைகள் செய்திருந்தால், சோகமான வீழ்ச்சிக்கு வழிநடத்திய இந்த பாதையிலிருந்து தப்பித்திருக்கலாமே என்று ஒருவரால் பேசத்தான் முடியும்.

சவுலின் கதையை வாசிக்கக் கூடியவர்களுக்கு இந்த கேள்விக்கான பதில் மிக அவசியமாகத் தோன்றுகிறது. தன்னம்பிக்கையற்ற நிலையில், தாழ்வு மனப்பான்மையில் உள்ள அநேகர் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை மன அழுத்தத்திற்கும், மனக்கோளாறுக்கும், உடல்நலக்குறைவுகளுக்கும் வழிவகுக்கும். சவுலைப்போல தற்கொலை செய்துக் கொள்ளவும் வழிநடத்தும் (1சாமு 31:4) தாழ்வுமனப்பான்மை அனைவரிடத்திலும் காணப்படும் உணர்வாக இருக்கிறது என்று சில தேறின வல்லுநர்கள் கூறுகிறார்கள். மற்றப்படி இது ஒரு குறைபாடு அல்ல. ஆனால், தனக்குள் இருக்கும் தாழ்வு மனபான்மையைப் பெரிதாக எண்ணி அவைகளைச் சரிக்கட்ட, இயற்கையாகவே தேவையற்ற விருப்பங்களின் வழியாகத் தங்களைத்தாங்களே எல்லோருக்கும் மேல் உயர்த்திக் கொள்ளுகிறார்கள். போலியான எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அல்லது பெற்றுக்கொள்ள இயலாதபோது, மனம் அழுத்தமும் மற்ற உடல் ரீதியான சுகவீனங்களும் நேரிடலாம். ஒருவருடைய அவயவங்கள் அவருடைய கட்டுப்பாட்டில் இல்லாததே, மன அழுத்தத்தின் அறிகுறியாகும். ஆனால் மிகச்சாதுரியமாக சிகிச்சை அளித்தாலும், சுகம் பெறக்கூடிய பெரும்பாலான பகுதி அவர்களின் ஆவிக்குரிய ஜீவியத்தைச் சார்ந்தே இருக்கும். சவுல் தீய ஆவியினால் அலைக்களிக்கப்படாதபடிக்கு மேலும் அவர் என்ன செய்திருக்க வேண்டும் என்பதை முதலில் அறிந்திருக்க வேண்டும். (1சாமு 16 :15) இப்படிப்பட்ட அதிக பட்சமான தாழ்வு மனப்பான்மையினால் அவதிப்படுபவர்களுக்கு இது மிகவும் அவசியம்.

## பணி செய்வதற்கு தயாரான நிலை அல்லது ஆயத்தப்படுதல்

தேவனுக்கு ஊழியம் செய்த அநேகர் எளிய ஜனங்களாக இருந்தார்கள். தன்னைப்பற்றி ஆமோஸ் கூறுகையில் - "மந்தையின் பின்னாலே போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரயேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்று கர்த்தர் உரைத்தார்." (ஆமோஸ் 7:15) என்றார். எலிசா எலியாவோடு போவதற்கு அழைப்பு பெற்றபோது (1இரா 19:19,20) எலிசா நிலத்தை உழுதுகொண்டிருந்தார். எரேமியா சிறுவனாக இருந்தபோதே அவர் அழைப்பு பெற்றார். (எரே 1:7) தன்னுடைய உதடுகள் அசுத்தமாக இருந்ததாக ஏசாயா எண்ணினார் (ஏசா 6:5) இவர்கள் அனைவரும் தங்களுடைய தகுதியற்ற நிலையை உணர்ந்திருந்தும், தேவன் அவர்களை அழைத்தப்போது, எவ்விதமான முறுமுறுப்பும், தயக்கமுமின்றி உடனடியாக ஆயத்தமானார்கள். எலிசா தன்னுடைய ஏரைப் பிளந்து,

காளைகளை வெட்டி பலி செலுத்திவிட்டு எலியாவைப் பின்தொடர்ந்தார். தன்னுடைய கடினமான அனுபவத்தைக் குறித்து அநேகமுறை தேவனிடம் முறையிட்டபோதிலும் - "அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது, " (எரே 20:9) என்று கூறினார். ஒரு தூதன்

தன்னுடைய உதடுகள் அடையாளமாக சுத்திகரிப்பதை ஏசாயா தாமதமின்றி சந்தோஷத்துடன் அனுமதித்து அவருடைய பணியைத் துவக்கினார்.

இப்படிப்பட்ட எந்த ஒரு காரியத்தையும் சவுல் செய்யவில்லை. தான் ஒரு இராஜாவாக பணி புரியப்போவதை முன்னமே அறிந்திருந்தான். இதை உறுதிப்படுத்த மூன்று அடையாளங்களை அவன் பெற்றிருந்தான். (1சாமு 10:2-7) முடிசூட வேண்டிய நாள் வந்தபோது, அவன் ஒளிந்து கொண்டான். அனைவரும் அவனை ஏற்றுக் கொள்ளுவதற்கு மனதில்லாததினால், அவனுடைய அன்றாட வேலைக்குச் சென்றுவிட்டான். தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு தயங்கியதுப்போல் தோன்றுகிறது. ஆனால் தேவனோடு நல்லுறவுக் கொண்ட விசுவாசமுள்ள இஸ்ரயேலன் தேவனுடைய வல்லமையான அழைப்பை, அசட்டை செய்வதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. இந்த வாய்ப்பை சவுல் மறுத்திருக்கலாம், ஆனால் பலவீனமானவர்கள் மூலமாகவும் தேவன் அற்புதங்களை நடத்துவார் என்பதால் அவர்மேல் சந்தேகப்பட்டிருக்கக்கூடாது.

இன்றைய காலகட்டத்தில் உள்ள விசுவாசிகளின் சூழ்நிலை இன்னும் கடினமாக இருக்கிறது. சவுலுக்கு, சாமுயேல் கொடுத்த அடையாளங்களைப் போலிராமல்,நாம் இன்று பெறும் அடையாளங்கள் தெளிவற்றிருக்கிறது. நம்மை பயன்படுத்தி அவருடைய இலக்கை அடையவேண்டும் என்று தேவனுக்கு எந்தவிதமான அவசியமும் இல்லை. மிகப்பெரிய ஊழியம், போதனை சாட்சி அல்லது பொது நலத்தொண்டு போன்ற காரியங்களாக இருக்க வேண்டும் என்ற அவசியமுமில்லை. சில நேரங்களில், இது இம்மைக்குரிய காரியங்களாகவும், சகோதரர்களுக்கும், அயலகத்தாருக்கும் நன்மையை தரக்கூடியதாகவும் இருக்கும். இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு ஆயத்தமாக இருந்தால், நமக்குள் இருக்கும் தாழ்வு மனப்பான்மையை மேற்கொள்ளலாம். தேவன் எதிர்பார்க்கும் காரியங்களை தாமதமின்றி நாம் செய்தால், உடனடியாக நாம் அவருடைய வல்லமையை நமக்குள் உணரலாம். "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்கு பெலனுண்டு." (பிலி 4:13) என்ற பவுலின் வார்த்தைகளை நாமும் சொல்லலாம். ஆயினும், தேவனுடைய அழைப்பைப் புறக்கணித்து, தேவனுடைய உதவும் கரங்களிலிருந்து நாம் பின்வாங்கினால், நமக்குள் இருக்கும் தாழ்வு மனப்பான்மையை அதிகமாக உணருவோம். சவுல் தாவீதை தன் முழு இருதயத்தோடு நேசித்திருந்தாலும், சவுல் தாவீதைக் கொல்ல முயற்சித்தான். அதற்கு பின் அவனுக்குள் இருந்த பகை அதிகரித்து அத்துமீறி செயல்படத் துவங்கியது. நாமும், நம்மை சுற்றியுள்ளவர்கள் முன்னேறும்போது அவர்களை பகைத்து, பொறாமைப்பட நேரிடும். அதற்கு பின் நாம் அவர்களைப் பழித்து, குறைசொல்லி, அவர்களோடு சண்டைகளையும், வம்புகளையும், பிரச்சனைகளையும் உருவாக்குவோம். (1சாமு16:21)

### தேவனுக்குள் இருக்கும் தன்னம்பிக்கை

ஒருவர் தன்னுடைய பலத்திலும், தன்னிலும் முழுமையாக நம்பிக்கை கொண்டிருந்தால் மற்றவர்களின் அறிவுரைகளை அசட்டை செய்து தேவனுடைய அடையாளங்களைக் கவனியாமல் போவார். பெருமை கொள்வதினால் தன்னம்பிக்கை என்ற விரும்பத்தகாத ஒரு குணம் உருவாகிறது. தேவனுடைய கோட்பாடுகளில் பரீட்சயமாக இருந்து, வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவனுடைய வழிநடத்துதலை எதிர்பார்த்து, இருப்பவர்கள் நன்மை செய்வதை தாமதிக்கமாட்டார்கள். தன்னுடைய நம்பிக்கை தனக்குள் வைக்காமல், தான் ஆராதித்து வழிபடும் தேவன் மேல் வைத்திருப்பார்கள்.

இந்த விஜயத்தில் தாவீது சவுலுக்கு நேர் எதிராக இருந்தார். அவர் மிகப்பெரிய தவறுகள் செய்திருந்தபோதிலும், தனிப்பட்ட முறையில் அவைகளை மிகப்பெரிய வெற்றிகளாக மாற்ற திராணியுள்ளவராக இருந்தார். தாவீது தன்னுடைய நம்பிக்கை தனக்குள் வைத்திராமல் தேவனுக்குள் வைத்ததினால் எந்த விஜயத்திலும் நன்மை செய்ய தாவீது தாமதிக்கவில்லை. அவர் பாவம் செய்தபோது, உபவாசத்தோடு பாவமன்னிப்பைப் பெறும்படி மன்றாடினார். அவர் தண்டிக்கப்பட்டபோது, மனத்தாழ்மையோடு ஏற்றுக்கொண்டார். (11சாமு 12:22,23)

அதே நேரத்தில் சவுல் தொடர்ந்து நிச்சயமில்லாதவனாகக் காலம் கடத்தினான். தவறான நோக்கங்களினால் அவன் அதிகமாக தவறு செய்யவில்லை, ஆனால் இனி எவ்வாறாக முன்செல்வது என்ற நிச்சயம் தனக்குள் இராததினால், அவன் மிகப்பெரிய தவறுகளைப் புரிந்தான். அவனை சுற்றியிருந்தவர்கள் மத்தியில், தான் ஒரு பராக்கிரமசாலி என்பதை நிரூபிக்கவிரும்பினான். சாமுயேல் வருவதற்குமுன் சவுல் பலிசெலுத்த முடிவு செய்தான். இதை குறித்த தன்னுடைய நீதியை மிகப்பொருத்தமாக எடுத்துரைத்தார் - "... ஜனங்கள் என்னை விட்டு சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறதையும் நான் கண்டபடியினாலே,

கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமூகத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணவில்லை என்றும் எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன் என்றான். " (1சாமு 13:11,12)உடனடியான அரசியல் நன்மைகளைப்பெற, பலிசெலுத்துவதன் கோட்பாடு முக்கியமற்றதாகப் போனது. ஜனங்கள் சோர்ந்துபோவதால், சிதறி விடுவார்கள் என்று சவுல் மிகவும் பயந்தான் யுத்தத்திற்குச் செல்லும் படைவீரர்கள் குறைந்துவிடுவார்கள் என்று பொருள்பட்டது.

தன்னுடைய சொந்த குமாரனாகிய யோனத்தானை மரணத்திற்கு தீர்ப்பளித்தப்போது, மேலே சொல்லப்பட்ட அதே குணநலத்தைக் காட்டுகிறது. ஆயினும், ஜனங்கள் அந்த ஆபத்திலிருந்து யோனத்தானை தப்புவித்தார்கள். (1சாமு 14:45) சவுல் மற்றும் யோனத்தானின் இருதயத்தில் இந்த ஒரு சம்பவம் நீங்கா நினைவுகளாக பதிந்திருக்கவேண்டும்.

அமலேக்கியர்களையும் அவர்களின் ஆடுமாடுகளையும் கொல்லவேண்டும் என்ற தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படியாமல் போனதே சவுலின் மரணத்திற்குரிய குற்றமானது. அவன் அமலேக்கிய இராஜாவை உயிரோடு வைத்து, கால் நடைகளில் உள்ள புஷ்டியானவைகளைக் கொண்டுவந்தான்.

மீண்டுமாக, இவன் செய்ததற்குரிய நீதியான காரணத்தை ஜனங்களை மேற்கோள்காட்டி கூறினான். "ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள், மற்றவைகளை முற்றிலும் அழித்துப்போட்டோம் என்றான்." (1சாமு 15:15) ஒருவேளை புஷ்டியுள்ள ஆடு, மாடுகளை தேவனுக்கு பலி செலுத்தவும், அந்த பண்டிகைகளில் புசிப்பதற்காக தேசத்து ஜனங்கள் கூட சொல்லியிருக்கலாம். இதனிமித்தமாக ஜனங்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுவிடக்கூடாது என்று சவுல் பயந்திருக்கவேண்டும். சவுல் என்ன செய்யவேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்தான் ஆனால் தன்னுடைய பிரஜைகளின் மத்தியில் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக நடக்க பயந்தான். அவன் என்ன செய்யவேண்டும் என்று நன்கு அறிந்திருந்தான். ஆனால் தன்னுடைய ஜனத்திற்கு விரோதமாக தேவன் சொல்லிய காரியங்களைச் செய்யும் அளவுக்கு தேவனுடைய வல்லமையின் மேல், முழுமையான விசுவாசத்தை அவன் வைக்கவில்லை.நியாயமான காரியங்களையும், தன்னுடைய பிரஜைகளின் விருப்பமில்லாமல் செய்ய மறுத்தான்.

பலநேரங்களில், எந்த கருத்து சரியானது ? அல்லது நாம் என்ன செய்யவேண்டும் ? என்பதை நம்மால் சரியாக முடிவெடுக்க முடியாது. ஆயினும், அநேகரால் நன்மை என்று ஏற்றுக் கொள்ளக்கூடிய விஷயங்கள் பெரும்பாலும் நன்மையாக முடிவடைகிறதில்லை. அதேபோல, அநேகரால் தவறு என்று கணிக்கப்படக்கூடிய காரியங்கள் உண்மையில் தவறாக இருப்பதுமில்லை. தேவனுடைய சித்தம் இரண்டு எல்லைகளுக்கு இடையில் ஏதோ ஒரு இடத்தில் இருக்கவாய்ப்பில்லை. தேவனுடைய சித்தம் நிலையானது. அநேகருடைய கருத்துக்களின் அடிப்படையில் தன்னுடைய முடிவை எடுக்கக்கூடிய நபர், மற்றவர்களை திருப்தி செய்வதற்கு தன்னுடைய சொந்த கோட்பாடுகளுக்கு எதிராகவே அடிக்கடி செயல்படுவான். "மக்களின் குரல் ஈசனின் குரல்" என்ற ஒரு பழைய வழக்கச் சொல் உண்டு. (Vox populi vox dei) இங்கு " vox dei " என்பது ரோமர்கள் தெய்வமாக இருக்கவேண்டும். நிச்சயமாக இது சர்வல்லமையுள்ள தேவனுடைய குரல் அல்ல. ஏனெனில், அவருடைய வார்த்தைகளை எளிய நபர்களாலும், மதிப்பற்ற சிறிய வகுப்பினராலும் காலங்காலமாக வெளிப்பட்டுக் கொண்டு வருகிறது.

ஒரு விசுவாசி தேவனுடைய சித்தத்தின்படி ஒரே குறிக்கோளைக் கொண்டிருக்கவேண்டும். அதற்கு பின் அவரால் முடிந்த வரைக்கும் அந்த குறிக்கோள்களுக்கு ஏற்றவாறு வாழவேண்டும். இல்லாவிட்டால், தன்னுடைய இருதயம் சரி என்று சொல்லுவதற்கும், மற்றவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்களுக்கும் இடையில் உள்ள போராட்டமான சூழ்நிலையில் அந்த நபர் சிக்கிவிடுவார். இப்படியாக முக்கியமான முடிவுகளை எடுக்கும் பட்சத்தில் கடுமையான பிரச்சனைகள் எழும்ப வாய்ப்புண்டு. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் விரக்தியான நிலைக்கும் மன அழுத்தத்திற்கும் கொண்டு செல்லும். அநேகருடைய அபிப்பிராயத்தைக் கேட்டு, முடிவெடுக்கக்கூடிய நபர்கள் எப்போதும் அந்த முடிவுகளில் திருப்தி அடையவேண்டியதாக இருக்கிறது. ஒருவேளை எல்லா நேரங்களிலும் மிகச் சிறந்த காரியத்தையே செய்யமுடியாது. ஆனால் சில நேரங்களில் மனப்போராட்டங்களைத் தவிர்க்க உதவியாக இருக்கும். எப்படியிருந்தாலும் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு அதற்கு இசைவாக செயல்படுவதே உகந்ததாகும்.

ஆகவே, நாம் தேவனுடைய வார்த்தைகளைப்படித்து, அதன்மூலம் வரும் ஞானமான ஆலோசனைகளுக்குச் செவிகொடுத்து தேவன் அனுப்பும் அடையாளங்களைக் கவனிப்போம். அதற்கு பின் தேவனுயை சித்தம் என்னவென்பதை அறிந்து வாழ்க்கையை தொடரவேண்டும். நமக்காக தேவன் யாவையும் செய்து முடிப்பார்.(சங் 138 :8) தாவீதைப்போல நாம் தவறுகள் செய்தாலும் அவருடைய இருதயத்திற்குள்ளவர்களாகவே இருப்போம்.

**பேரிழப்பு**

இஸ்ரயேலின் முதல் இராஜாவாகிய சவுல் மோசமான இஸ்ரயேலர்களின் வம்சத்தில் அல்லது வரிசையில் சிறந்தவராக இருந்திருக்கவேண்டும். தாவீது பிறவாததற்குமுன்னும், இஸ்ரயேலர்களுக்கு ஒரு இராஜா தேவைப்பட்டது. உடனே வேண்டும் என்று முறையிட்டார்கள். இஸ்ரயேல் தன்னை நிராகரித்துவிட்டார்கள் என்று சாமுயேல் எண்ணினார். ஆனால் "அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் தள்ளினார்கள்." (1சாமு 8:7) என்று தேவன் சொன்னார்.

தற்காலிகமாக பொறுப்பை ஏற்றுக்கொள்பவர், எல்லா சூழ்நிலைகளிலும், வெற்றி அடைகிறார். அரசியலிலாவது, விளையாட்டிலாவது இறுதி கட்டத்தை வந்தடைவதே மிகப்பெரிய காரியம் என்று கருதப்படுகிறது. மனிதனின் கற்பனைக்கு எட்டாத பேராசையின் இலக்குகள், மாம்சத்திற்கேற்ற ஞானம் நிறைந்த இந்த உலகத்தில் எப்போதும் நம்மை விட மேன்மையானவர்கள் ஒருவர் இருப்பார் என்ற உண்மையை ஏற்றுகொள்வதற்கு நம்மை அழைக்கிறது. திறமையில்லாத "ராஜாவாக" இருப்பதற்கு பதிலாக சிறந்த ஆற்றல் உள்ள தலைவருக்கு உதவியாளராக இருப்பது ஏற்றது.

நாம் நடக்கவேண்டிய சரியான பாதையை அறிந்துகொள்ள தேவனிடத்திலிருந்து வரும் ஞானம் மிக அவசியம். மேலும் நம்முடைய வாழ்க்கையை கட்டுப்படுத்தும் வல்லமையாக நாம் பெற்ற தேவனுடைய ஞானத்தைப் பயன்படுத்தவேண்டும். ஒவ்வொரு பணியும் விசேஷமானது என்று நாம் கற்பிக்கப்படுகிறோம். நம்மைக் காட்டிலும்" தேவனுடைய இருதயத்திற்கு பிரியமான" ஒருவரைக் கண்டால் நாம் பொறாமை கொள்ளவோ அல்லது அவமானப் படவேண்டிய அவசியமோ இல்லை. முதிர்ச்சியடைந்தவர்கள் "இரண்டாவதாக வருவதை" எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள். மூன்றாம் நான்காம் இடத்தை பெற்றுக் கொள்வதும் ஒரு நபரின் தனிப்பட்ட வெற்றியாகக் காணப்படுகிறது.

தன்னுடைய விருப்பங்களுக்கு மாறாக தேவனுடைய சித்தம் இருந்தபோது, அதை எப்படி ஏற்றுக்கொள்வது என்று சவுலுக்குத் தெரியவில்லை. தன்னைவிட வல்லமையானவரும், பிரபலமானவரும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவருமான தாவீதை சவுல் கண்டபோது, தன்னிச்சையாகவே தாவீதைக் கொல்ல ஈட்டியை எய்தார். மீண்டுமாக ஒருமுறை தேவனுக்குப் பிரியமான தாவீதை நாம் பாராட்டுகிறோம். தேவன் குறித்த நாள் மட்டும் தாவீது மனத்தாழ்மையோடும் பொறுமையோடும் உபத்திரவங்களைச் சகிக்க தன்னை மனப்பூர்வமாக ஒப்புகொடுத்திருந்தார். தனக்கு மிகுந்த இழப்பு வந்தபோதிலும் தேவன்மேல் விசுவாசம் கொண்டவராக அவருடைய சித்தத்தை ஏற்றுக் கொள்ள மனப்பூர்வமாக சம்மதித்தார். எவ்வளவு எளிதாக இருந்தாலும் தனக்கு வரும் போராட்டங்களைத் தவிர்ப்பதற்கு அவர் எந்த வாய்ப்பையும் தேடவில்லை. (1சாமு 24:7,26:11) உண்மையில், தாவீது, சவுலை ஒரு போட்டியாளராய் நினைக்கவில்லை. தேவன் அபிஷேகித்தவர் என்ற நினைவு மட்டுமே அவருக்குள் இருந்தது. சவுல் தன்னை மரணத்திற்கு ஏதுவாக உபத்திரவப்படுத்தினாலும், அவர் சவுலின் ஆட்சியை ஏற்றுக் கொண்டார். தேவனுடைய சித்தம் மற்றும் நியாயத்தீர்ப்புகளும் மிகக் கடுமையாக இருந்தப் போதிலும் அதை ஏற்றுக் கொள்வதற்கு அவர் நன்கு கற்றறிந்திருந்தார்.

தேவனுடைய பணியைச் செய்வதற்கு சவுல் மனப்பூர்வமாக சம்மதிக்கவில்லை. அல்லது பலவீன உணர்வுகளை மேற்கொள்வதற்காகக் கொடுக்கப்படும் தேவனுடைய வல்லமையின்மேல் அவனுக்கு விசுவாசம் இல்லை. தன்னுடைய சுய விமர்சனத்தால் சகலமும் கிடைத்ததா என்று உணர்ந்துக் கொள்ள அவன் விருப்பப்படவும் இல்லை. ஆயினும் அவன் இஸ்ரயேலை ஆளக்கூடிய இராஜாவாக இருந்தார். ஓயாமல் சண்டைபோட்டுக் கொண்டிருக்கும் பெலிஸ்தியர்களை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு தேவன் சவுலை அனுமதித்தார். சந்தேகத்திற்கு இடமின்றி தாவீது சாதனைப் புரிவதற்கு, சவுலின் செயல்கள் உதவியாக இருந்தது. சவுலினிடத்தில் அநேகக் குறைப்பாடுகளை நாம் கண்டிருந்தாலும், தேவன் அவரைக்கொண்டு (அபிஷேகிக்கப்பட்டவர்) வெளிப்படுத்தின வல்லமையான செயல்களை நாம் எந்த அளவும் குறையாக எண்ணுவதில்லை. அவனுடைய வாழ்க்கையை நாம் கவனிப்போம். அவன் செய்த தவறுகளை நம்முடைய வாழ்க்கையிலிருந்து தவிர்ப்போம். தாழ்வுமனப்பான்மை, மனநிலை குறைபாடுகள் போன்ற காரியங்களில் நாம் விழாதபடிக்கு ஜாக்கிரதையாக இருப்போம். எவ்வளவு நஷ்டம் வந்தாலும் தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கும், மனத்தாழ்மையாக இருப்பதற்கும் சவுலின் வாழ்க்கை ஒரு பாடமாகவும், இந்த கடைசிகாலத்தில் நமக்கு நல்ல எச்சரிப்பாகவும் இருக்கிறது.

தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற தாசன்

# தாவீது

*.. ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியும் கொடுத்தார். - அப்போஸ்தலர் 13:22*

Robert Brand

நம்முடைய இருதயமாகிய கற்பலகையை நாம் துடைத்து சுத்தம் செய்தால், அதாவது தாவீதைப்பற்றி நமக்கு எதுவும் தெரியாது என்று பாவனை செய்துவிட்டு, அதற்கு பின் நாம் அவருடைய ஆதிகால திகைப்படையும் வாழ்கையை வாசிக்கத் துவங்கும்போது, நம்முடைய கற்பனைக்கு எட்டாத அளவுக்கு தன்னுடைய ஒழுக்கமுள்ள வாழ்கையை மிக துணிகரமாக இழந்திருக்கிறார் என்பது தெரிகிறது. இவருடைய வாழ்க்கையைப்பற்றி அநேக வேதமாணவர்கள் அறிந்திருக்கிறார்கள். மேலும், இப்படிப்பட்ட மோசமான சிலரைப்பற்றி வேதவசனங்கள் பதிவுசெய்துள்ளது. தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்ததற்கும் அதற்கு பின் மீட்கப்படுவதற்கும் தாவீதின் வாழ்க்கை மிகச் சிறந்த ஒரு பாடமாகவும் நமக்கு தேவையான ஒரு எடுத்துக்காட்டாகவும் உள்ளது.

பயங்கரமான குற்றத்தைச் செய்தபின் மன்னிப்பைப் பெற்றிருந்தாலும், தாவீது ஒரு நல்ல மனிதர் என்று பொதுவாக சொல்வது அநீதியாகும். தாவீது துணிகரமாக, தொடர்ச்சியான பாவங்களை வரிசையாக செய்தார். தேவனுடைய மன்னிப்பை அவர் பெற்றப்போதிலும், இந்த தவறுகளுக்கான தண்டனையை அவருடைய வாழ்க்கை முழுவதும் அனுபவிக்க வேண்டியதாக இருந்தது. அவருடைய கதை ஒரு மிகப்பெரிய வீழ்ச்சியைப் பற்றியதும், அதற்கு பின்வந்த பிரமாண்டமான மீட்பைப் பற்றியதாகவும் இருக்கிறது.

தாவீதைக் குறித்து வேதாகமம் அதிகமாகக் கூறுகிறது. உண்மையில் அவருடைய பெயர் சுமார் ஆயிரம் முறைகளுக்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ளது. பெத்லகேமில் வளர்ந்த அவர் ஈசாயின் கடைசி பிள்ளையாக இருந்தார். ஒரு புதிய இராஜாவை அபிஷேகிக்க பிதாவாகிய தேவன் சாமுயேலை ஈசாயின் வீட்டிற்கு அனுப்பினார். தேவன் ஈசாயின் மூத்த குமாரனை தேர்வு செய்திருப்பார் என்று சாமுயேல் எண்ணினார். ஆயினும் எல்லா குமாரர்களும் கடந்து சென்றார்கள். தேவன் ஒருவரையும் தேர்வுசெய்யவில்லை. ஈசாயின் கடைசி குமாரனாகிய தாவீதை அபிஷேகிக்கும்படி தேவன் சொன்னார். "ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தான், அவன் சிவந்தமேனியும், அழகிய கண்களும் நல்ல ரூபமுள்ளவனுமாயிருந்தான். அப்பொழுது கர்த்தர் இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு என்றார். அப்பொழுது சாமுயேல், தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான். அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார். " (1சாமு 16:12,13)

விசேஷித்த கலைகளும், வித்தியாசமான திறமைகளும், இசை, கவிதை மற்றும் பல காரியங்களில், தேர்ச்சிப் பெற்ற இளைஞனாக தாவீது வளர்ந்தார். அநேக சங்கீதங்களை தாவீது எழுதினார். அவர் பெற்றிருந்த இசை திறமையினால், அரமனையில் இசை மீட்டுபவராகப் பதவி பெற்றிருந்தார். " அப்படியே தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினாலே வாசிப்பான், அதினாலே பொல்லாதஆவி அவனைவிட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து சொஸ்தமாவான்." (1சாமு 16:23)

தாவீதின் வாழ்க்கையில் ஏற்பட்ட தொடர் சம்பவங்கள் வித்தியாசமாகவும், திடீரென்றும் ஏற்படக்கூடியவைகளாக இருந்தது. கோலியாத்தை வெட்டினது முதல் யுத்தகளத்தில் அனைவராலும் புகழப்பட்டு சவுலின் பொறாமையினால் ஏற்பட்ட விபரீதங்களிலிருந்து ஓடும்வரைக்கும் நீடித்தது.

சவுல் தாவீதை உபத்திரவப்படுத்தி, விரட்டி அடித்து கொல்ல முயற்சித்தப்போதிலும், சவுல் மரித்த செய்தியை கேட்ட தாவீது -தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர் மரித்து போனாரே என்று துக்கப்பட்ட காரியம், அவருடைய மேன்மையான குணத்தை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. சவுலைப்பற்றி மிக உருக்கமாக ஒரு புகழுரையை தாவீது மிக அழகாக எழுதினார். "இஸ்ரயேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று, பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள்...... பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்களே. யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே என்று பாடினான். (11சாமு 1:19-27காண்க)

**தாவீது இராஜாவானார்**

எபிரோனின் இராஜாவாக அவர் நிலைநிறுத்தப்பட்டார். அதை தொடர்ந்து அவர் எருசலேமுக்கு சென்று தேவன் சொல்லியபடி தன்னுடைய தேசத்தை விரிவாக்கினார். "அப்படியே தாவீதின் கீர்த்தி சகல தேசங்களிலும் பிரசித்தமாகி, அவனுக்குப் பயப்படுகிற பயத்தைக் கர்த்தர் சகல ஜாதிகளின்மேலும் வரப்பண்ணினார்." (1நாளா 14:17)

இந்நிலை வரையிலும் தாவீதின் செயல்பாடுகள் நேர்மையாகவும், பராக்கிரமமாகவும் இருந்தது. ஆனால் உரியாவின் மனைவி பத்சேபாளை அவர் கண்டபோது அனைத்தும் மாறிப்போனது. தற்செயலாக இதை குறித்து வாசிப்பவர்கள், அழகான அந்த ஸ்திரீயைக் கண்டு, தவறான சிந்தையோடு, குற்றம் செய்தார், அதற்கு பின் அந்த பாவத்திற்கு மனம் வருந்தினார் என்று

நினைத்துகொள்ளுகிறார்கள். ஆனால் வேதாகமத்தில் இதைவிட அதிகமான காரியங்கள் விவரிக்கப்பட்டுள்ளது.

கொடூரமான பாவத்தைப்புரிவது எளிதானக் காரியம் அல்ல. நெறிதவறிய மன நிலை (தவறான சிந்தை) இந்த பாவத்திற்கு வழி நடத்தியிருக்கும். அதற்கு பின் அத்துமீறி போனபிறகு, அந்த பாவத்தின் விளைவுகளால் நேரடியான அல்லது மறைமுகமான அனுபவங்கள் தொடர்ந்தது.

தாவீதின் அனுபவங்களின் இருண்ட பகுதியை 2சாமு 11மற்றும் 12ம் அதிகாரங்கள் பதிவு செய்துள்ளது. இஸ்ரயேலர்கள் அம்மோனியர்களுக்கு விரோதமாக யுத்தம் நடத்துகையில், தாவீது யுத்தகளத்திற்கு செல்லாமல் எருசலேமில் தங்கிவிட்டார். இதுவே அவர் செய்த முதல் தவறாகும். "மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்துக்குப் புறப்படுங்காலம் வந்தபோது, ....தாவீதோ எருசலேமிலே இருந்துவிட்டான்." (11சாமு 11:1) முக்கியமாக அவர் தவறான இடத்திற்கு, சென்று தவறான நேரத்தில், தவறானதைக் கண்டார். அரமனை உப்பரிகையிலிருந்து பத்சேபாள் ஸ்நானம் பண்ணுவதை தாவீது கண்டார். உடனே அந்த இடத்திலிருந்து திரும்பியிருக்க வேண்டும். ஆனால் அவருடைய கண்கள் அதை தொடர்ந்து பார்க்க அனுமதித்தது. இது தாவீது செய்த இரண்டாவது தவறு. அப்போஸ்தலனாகிய யாக்கோபு பாவத்தின் விளைவுகளைப்பற்றி படிப்படியாக விவரிக்கிறார். "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்." (யாக் 1:14-15)

பாவத்தின் தொடர் சம்பவங்களைத் தகர்க்க ஒருவருடைய "தவறான விருப்பத்தை" உடனடியாக அவித்துப்போட வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார். சோதிக்கப்படுவது பாவம் அல்ல. உண்மையில், நம்மைப் போலவே இயேசுவும் சோதிக்கப்பட்டார். "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிரமால், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபி 4:15) சோதனைகளில் அகப்படும்போது வரும் அனுபவங்களின் வழியாக பாவம் புறகணிக்கப்படாமல், அது சோதிக்கப்படு பவர்களுக்குள் நுழைந்துவிடுகிறது. அதற்கு பின்வரும் ஆழமான யோசனைகள் தவறான சிந்தனைகளுக்கும், அதற்கு பின் தவறான கிரியைகளுக்கும் வழி நடத்தும். தாவீது இவ்விரண்டையும் மனப்பூர்வமாகச் செய்தார். பத்சேபாளை அரமனைக்கு அழைத்துவரும்படி ஆள் அனுப்பினார். அப்போது அந்த ஊழியக்காரன் -"....ஏத்தியனான உரியாவின் மனைவியுமாகிய பத்சேபாள்....." (11சாமு 11:3) என்று அவள் திருமணமான நிலையை தாவீதுக்கு அறிவித்தார். பாவத்தின் தொடர் செயல் ஒருமுறை துவங்கினால் அதை தடுத்து நிறுத்துவது மிகக்கடினம். தாவீது தன்னுடைய திட்டத்தை தீர்க்கமாக செயல்படத் துவங்கினார். "ஒரு பாவம் மற்றொரு பாவத்திற்கு வழிவகுக்கும்" என்ற கருத்து, தவறான முடிவுகள் எடுப்பதினால் வரும் பலனாக இருக்கிறது. இந்த அனுபவத்தில் தாவீது மற்றொரு தவறான முடிவை எடுத்தார்.

பத்சேபாள் அரமனைக்கு வந்தபோது தாவீது தவறு செய்தார். இப்படி தொடர்ந்து எடுக்கப்பட்ட தவறான முடிவுகள் பாவத்தின் உச்சக்கட்டத்தை எட்டியது. யுத்தக்களத்தில் இருக்கவேண்டிய தாவீது எருசலேமில் இருந்துவிட்டார். ஸ்நானம் செய்துகொண்டிருந்த பத்சேபாளை கண்டவுடன் அவளை அரமனைக்கு அழைத்து வரச் சொன்னார். அவருடைய ஊழியக்காரன் இந்த காரியங்களைத் தடுக்க முயற்சித்தப் போதிலும் அவர் மறுத்துவிட்டார். எல்லாம் கைமீறிப் போயின. அந்நேரத்தில் தாவீதுக்கு அநேக மனைவிகளும் மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் தாவீதின் வீட்டாராக இருந்தபடியால் அவரை ஒருவரும் குற்றம் சாட்டவில்லை. ஆனால் பத்சேபாள் உரியாவின் மனைவியாக இருந்தபடியால் பத்து கட்டளைகளில் உள்ள ஏழாவது கட்டளையை அவர் மீறினார்.

"அந்த ஸ்திரீ கர்ப்பம் தரித்து, தான் கர்ப்பவதியென்று தாவீதுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்பினாள்." (11சாமு 11:5) மீண்டுமாக, தாவீது முடிவெடுக்க வேண்டிய காலத்தில் இருந்தார். ஆனால் அவருடைய மோசமான தீர்ப்பு கட்டுக்கு மீறி செல்லத் துவங்கியது. தவறான செயல்கள் மோசமான முடிவுகளை எடுக்கசெய்யும், மேலும் அடிக்கடி தகாத காரியங்களைச் செய்வது பழகிப் போவதினால் அது மனதிற்கொத்த இனிமையான காரியமாக மாறிவிடுகிறது.

தாவீது "சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்திற்கு" (எபி 12:1) இரையானர். பாவமானது நம்முடைய மனசாட்சியை உணர்ச்சியற்ற நிலைக்கு மாற்றிவிடும். இந்நிலையில் நியாயமான காரணங்களை சிந்திப்பதையும் தவிர்த்து, மேலும் பாவங்கள்புரிய வழிவகுக்கும். அதற்கு பின் பாவம் செய்யக்கூடிய தொடர் செயல்கள் துவங்கி விட்டதையே நாம் அறியாமல் அவைகளைத் தொடர்ந்து செய்துக் கொண்டிருப்போம்.

## ஒரு பாவம் மற்றொரு பாவத்திற்கு வழி வகுக்கும்

இந்த பிரச்சனையில் தன்னுடைய பொறுப்புகளை உணர்ந்து செயல்படுவதற்குப் பதிலாக பத்சேபாள் வயிற்றில் உண்டான பிள்ளைக்கு உரியாவை தந்தையாக காட்டுவதற்கு திட்டமிட்டு, உரியாவை வீட்டிற்கு திரும்பிப்போக வரவழைத்தார். ஆனால் அந்த திட்டம் தோல்வி அடைந்தது. ஆகவே உரியாவை யுத்தத்தில் கொல்ல இரக்கமற்ற ஒரு திட்டத்தைத் தீட்டினார். தாவீதின் அந்த திட்டம் நிறைவேறியது. "பட்டணத்து மனுஷர் புறப்பட்டுவந்து யோவாபோடே யுத்தம்பண்ணுகையில்...... ஏத்தியனாகிய உரியாவும் செத்தான்." (11சாமு 11:17) பாவங்கள் இப்படிப்பட்ட காரியங்களையும் நிறைவேற்றும். அத்துமீறி துணிகரமாக செயல்படும்போது சுற்றியுள்ளவர்கள் அதிகமாக காயப்படுவதுண்டு. தவறான கிரியைகளை

நடப்பிப்பவர்கள் தங்களுடைய சுயநலத்தை எளிதில் வெளிப்படுத்துவார்கள்.

தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமான தாசனும், பராக்கிரமமும், தைரியமும் உள்ள ஒரு மனுஷன் (1சாமு 13:14, அப் 13:22) தன்னுடைய தனிப்பட்ட ஒழுக்கத்தில் இவ்வளவு மோசமாக எப்படி தவற முடிந்தது ? இதற்கான பதிலை நீதி 16:32ம் வசனத்தில் வாசிக்கலாம் - "பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன், பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்..." சொல்லர்த்தமான யுத்தகளத்தில் நாம் நியாயமாகப் போர்புரிவதைக் காட்டிலும், ஒருவருக்குள் நடக்கும் யுத்தத்தில் நியாயமான முறையில் செயல்பட்டு வெற்றி அடைவது மிகக்கடினமாம். உண்மையில் தனிப்பட்ட ஒழுக்கத்தை விட எந்த கிரியையும் கஷ்டமானதோ அல்லது மேன்மையானதோ இல்லை. வல்லமையான அரசாங்கங்கள் மற்றும் மிகச்சிறந்த தலைவர்கள், தங்களுடைய தொழிலில் மிகச் சிறந்தவர்களாக இருப்பினும், தங்களுடைய சுய கட்டுப்பாட்டின் காரியங்களில் மிக மோசமான தோல்வி அடைந்திருக்கிறார்கள். இதற்கான பல எடுத்துக் காட்டுகள் உண்டு.

பத்சேபாள் தன்னுடைய புருஷனுக்காக துக்கித்தப்பின், "அவனுக்கு (தாவீது) மனைவியாகி, அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்..." (11சாமு 11:27) அரமனையில் உள்ளவர்கள் இராஜாவின் காரியங்களை இரகசியமாக வைத்திருக்கலாம். ஆனால் தேவனுக்கு முன்பாக ஒன்றையும் மறைக்கமுடியாது. "தாவீது செய்த இந்த காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது."(11சாமு 11:27) தாவீதை உணர்த்தும்படி தீர்க்கதரிசியாகிய நாத்தான் அனுப்பப்பட்டார். அவருடைய பாவங்களை ஒரு எடுத்துக்காட்டின் மூலம் சுட்டிக்காட்டினார். அந்த எடுத்துக்காட்டை இராஜா புரிந்துக் கொள்ளாததினால், "நாத்தான் தாவீதை நோக்கி - நீயே அந்த மனுஷன்...... ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டபடியினால், பட்டயம் என்றென்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்" (11சாமு 12:7-10) என்று பதில் அளித்தார். அடுத்த வசனத்தில் "இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணுவேன்.." என்று நாத்தான் தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தைகளைக் கூறினார். இறுதியாக, "நான் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்" என்று தாவீது அறிக்கையிட்டார். தாவீதின் வாழ்க்கையில் இது குறிப்பிடும்படியான ஒரு சம்பவமாக இருந்தது. அவர் பத்சேபாளை குற்றம் சாட்டவும் இல்லை, தான் ஒரு இராஜாவாக இருப்பதை நினைவிலும் கொள்ளவில்லை. அவருடைய செய்கைக்கு உண்டான முழு பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டார். நாமும் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அகப்படும்போது தாவீதைப்போல முழுமையாக நம்முடைய குற்றங்களை ஏற்றுக்கொண்டால் மட்டுமே, இருதயத்தில் உண்மையாக சீர் திருந்த முடியும். நாம் தவறு செய்து விட்டோம் என்பதை முழுமையாகவும், மனப்பூர்வமாகவும், ஒப்புக் கொண்டால் மட்டுமே நாம் மனம் மாறுவதற்கு ஊக்குவிக்கப்படுவோம். துரதிஷ்டவசமாக நம்முடைய தவறுகளை அடையாளம் கண்டுபிடிக்க முடியாத ஒரு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகையால், அர்த்தமுள்ள மாற்றங்களையும், மனமாறுதல்களையும் நாம் தவிர்த்து விடுகிறோம். நாம் பாவம் செய்துவிட்டால், நாம் கட்டாயமாக நம்முடைய பாவச் செயலை தேவனுக்கு முன்பாக மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய செயலுக்காக அவருக்கு முன்பாக வருந்த வேண்டும். இவைகளை நாம் தட்டிகழிக்கக்கூடாது.

"நாத்தான் தாவீதை நோக்கி - நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார், ஆனாலும்....உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாகச் சாகும் என்று சொல்லி....." (11சாமு 12:13,14) அவருடைய குமாரன் மரித்துவிட்டான் அதுவே தாவீதின் இருதய வேதனைகளுக்கு துவக்கமாக இருந்தது. பத்சேபாள் பெற்ற சாலொமோனின் பிறப்பு உட்பட அவருடைய வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதங்கள் இருந்தபோதிலும் தாவீதின் இறுதி வருடங்கள் அதாவது அவருடைய மரணம் வரையில் அவருடைய வாழ்க்கை வருத்தமும் சஞ்சலமும் நிறைந்ததாக இருந்தது. (இரா 2:10)

மனம் வருந்துதலுக்கான தாவீதின் முக்கியமான ஜெபத்தை 51ம் சங்கீதத்தில் காணலாம். "தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்......" (சங் 51:1,2,10)

தாவீதின் துணிகரமான கொடூர செயல், நமக்கு மிக வித்தியாசமாகத் தோன்றும். ஆனால், தேவனுக்கு முன்பாக மிக மேன்மையான நிலையில், நல்ல கோட்பாடுகளுடன் இருப்பவர்கூட தவறலாம் என்பதற்கு இதை தவிர வேறு எந்த சம்பவத்திலும் நம்மால் புரிந்துக் கொள்ள இயலாது. 1கொரி 6:9-11 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் அநேகவிதமான முக்கிய பாவங்களை வரிசைப்படுத்துகிறார். மேலும் "நீங்களும் இப்படிப்பட்டவர்களாக இருந்தீர்கள்" என்றும் கூறுகிறார். இவைகளை சகோதரர்களுக்கு எழுதினார். ஒருவர் கடந்த காலத்தில் வெற்றிகரமாக பாவங்களை ஜெயித்திருந்தாலும், விட்டுவந்த பாவங்கள் நம்மை பின்தொடருகிறதா என்று மிக கவனத்தோடு ஒவ்வொரு கிறிஸ்தவனும் எச்சரிப்போடு கண்காணிக்கவேண்டும்.

தாவீதின் குழப்பமான வாழ்க்கையில் வந்த ஏற்ற, இறக்கம் மற்றும் மீட்பு, மிகுந்த நம்பிக்கைக்கும் காரணமாக இருக்கிறது. நாம் அனைவரும் பாவம் செய்கிறோம் ஆகவே நமக்கு மன்னிப்பும், சீர் பொருந்துதலும் அவசியமாக தேவைப்படுகிறது. நம்முடைய இருதயத்தில் நேர்மையான நோக்கத்துடன் பாவத்தை மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டால் மட்டுமே நமக்குள் உண்மையான மனந்திரும்புதல் ஏற்படும். அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் மன்னிப்பையும் சீர் பொருந்துதலையும் அளிப்பார். மகிழ்ச்சிக்கு இதுவே காரணமாக அமைகிறது.

ஆர்வமற்ற போர்வீரன்

# யோவாஸ்



தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் - 1யோவான் 5:4

Fred Binns

விசுவாசத்தை ஜெயம் கொள்கிறதினால் வரும் பலன்களைக் குறித்து இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு அநேக சந்தர்பங்களில் கூறியுள்ளார். இப்படிப்பட்ட விசுவாசம் இக்காலம் வரைக்கும் உள்ள பரிசுத்தவான்களை சரியாக வழிநடத்தியிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் எல்லா புத்தகங்களிலும் இப்படிப்பட்ட விசுவாசத்தில் வாழ்ந்த அநேக நீதிமான்களைப்பற்றி அநேக எடுத்துக் காட்டுகள் உண்டு. ஆயினும், இந்த ஹெரால்டு பிரதி, விசுவாச குறைவுள்ளவர்களால் கொடுக்கப்பட்ட எச்சரிப்புகள் அடங்கிய விசாலமான வசன பகுதிகளைக் காண்பிக்கிறது. இந்த கூடுதலான சாட்சி நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறது. தன்னுடைய சிருஷ்டிகரின் வாக்குறுதிகளுக்கு வித்தியாசமாக செயல்பட்ட ஏசா, தேவனுடைய சீரான வழிநடத்துதலை முற்றிலுமாக புறக்கணித்து, தன்னுடைய சொந்த வழிகளில் தேவனுடைய நோக்கத்தை திருப்திசெய்ய நினைத்த சவுல் மற்றும் இஸ்ரயேலின் இராஜாவாகிய யோவாஸின் அனுபவங்கள் நமக்கு கட்டளையான ஒரு பாடத்தைக் கற்பிக்கிறது. அவருடைய முன்னான அனுபவங்களும் அவருடைய தோல்வியும், நமக்கு பாடங்களைக் கற்பிக்கின்றன.

பழைய இஸ்ரயேல் மற்றும் முற்பிதாக்களின் அனைத்து எதிரிகளுக்கும் இக்காலத்து தேவனுடைய ஜனங்களின் எதிரிகளாகிய உலகம், மாம்சம், பிசாசுக்கு ஒப்பிடுவது அரிதாகவே தோன்றுகிறது. இதன் அடிப்படையில் பழைய ஏற்பாட்டு பதிவுகள், சுவிசேஷ யுகத்தில் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றக்கூடிய சீஷர்களுக்கு தவிர்க்க இயலாத உபகரணமாக இருப்பதை நிரூபிக்கிறது. இராஜாவாகிய யோவாஸ் தனக்கு தெய்வீக ஆலோசனை தேவை என்பதை உணர்ந்து, எலியாவின் ஆவியை இரட்டிப்பாகப் பெற்றிருந்த எலிசாவின் வீட்டிற்கு சென்றார். இதை அறிந்திருந்திருந்த யோவாஸ், எலியா எடுத்துக் கொள்ளப்பட்ட போது எலிசா சொன்ன அதே வார்த்தைகளை இவரும் சென்னார். "... என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரயேலுக்கு இரதமும் குதிரைவீரருமாயிருந்தவரே என்றான்." (11இரா 13:14, 11இரா 2:12 காண்க)

இப்படியிருக்க, யோவாஸ் எங்கு தவறு செய்தார்?இது சுருக்கமாக பதிவு செய்ய ப்பட்டிருக்கிறது. "அவன் நாட்களில் எலிசா மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான், அப்பொழுது இஸ்ரயேலின் ராஜாவாகிய யோவாஸ் அவனிடத்துக்குப்போய், அவன்மேல் விழுந்து, அழுது - என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரயேலுக்கு இரதமும் குதிரைவீரருமாயிருந்தவரே என்றான். எலிசா அவனைப் பார்த்து வில்லையும் அம்புகளையும் பிடியும் என்றான், அப்படியே வில்லையும் அம்புகளையும் பிடித்துக்கொண்டான். அப்பொழுது அவன் இஸ்ரயேலின் ராஜாவை நோக்கி - உம்முடைய கையை வில்லின்மேல் வையும் என்றான், அவன் தன் கையை வைத்தபோது, எலிசா தன் கைகளை ராஜாவுடைய கைகள்மேல் வைத்து - கிழக்கே இருக்கிற ஜன்னலைத் திறவும் என்றான், அவன் அதைத் திறந்தபோது, எலிசா - எய்யும் என்றான், இவன் எய்தபோது அவன் - அது கர்த்தருடைய ரட்சிப்பின் அம்பும், சீரியரினின்று விடுதலையாகும் ரட்சிப்பின் அம்புமானது, நீர் ஆப்பெக்கிலே சீரியரைத் தீர முறிய அடிப்பீர் என்றான். பின்பு அம்புகளைப் பிடியும் என்றான், அவைகளைப் பிடித்தான். அப்பொழுது அவன் இஸ்ரயேலின் ராஜாவை நோக்கி - தரையிலே அடியும் என்றான், அவன் மூன்றுதரம் அடித்து நின்றான். அப்பொழுது சீரியரைத் தீர முறிய அடிப்பீர், இப்பொழுதோ சீரியரை மூன்றுவிசை மாத்திரம் முறிய அடிப்பீர் என்றான். எலிசா மரணமடைந்தான், ..." (11இரா 13:14-20)

இந்த சரித்திர சுருக்கம் மிக எளிமையாக அநேக தொகுப்புகளை பேசுகிறது. விடாப்பிடியாக இந்நாள் வரைக்கும் இஸ்ரயேலர்கள் பிடித்திருக்கும் முக்கியமான பாவத்தைச் செய்ததற்காக இராஜாவாகிய யோவாஸ் மனம் வருந்தினார். அவர் தேவனுடைய

காரியங்களை விசுவாச கண்களினால் தீர்ப்புச் செய்யாமல், மாம்ச கண்களினால் தீர்ப்புச் செய்தார். கொடுக்கப்பட்ட அடையாளங்கள் தெளிவாக இருந்தது. தேவனுடைய அம்புகள் எப்போதும் "எதிரிகளின் இருதயத்தில் கூர்மையாக பாய்ந்தது." (சங் 45:5) ஆனால் இராஜாவின் கண்கள் தேவனுடைய வாக்குறுதிகளின் மேல் இராமல், முழுமையாக வலுவற்ற நிலையில், பாரம்பரிய முறையின் அடையாளங்களையும் செயலாற்ற முடியாமல் மரித்துக் கொண்டிருக்கும் எலிசாவின் மேல் இருந்தது. இந்த அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு எலிசாவின் கை கடைசியாக அவரைத் தொட்டது, ஆனால் எலிசாவின் மரித்துப்போன கையில் உள்ள குளிர்ச்சியை மட்டுமே யோவாஸால் உணரமுடிந்தது. மரித்துக்கொண்டிருக்கும் எலிசாவுக்கு இறுதியான கட்டளைகள் கொடுப்பதற்கு, இதை தவிர வேறு வழி தெரியவில்லை. காரியம் முத்திரிக்கப்பட்டது. அடையாளம் நன்மையாக இருந்தது - யோவாஸ் உண்மையில் சீரியர்களை மூன்று முறை வெற்றிகரமாக தோற்கடித்தார். ஆனால் தீர்க்கதரிசியின் வார்த்தைகளின் மேலுள்ள அவநம்பிக்கையினால் அவர் தோல்வியடைந்தார். மிக எளிதாக, அவரால் முடிந்தவரைக்கும் அம்புகளை தரையில் அடித்து சீரியரை முற்றிலுமாக முறியடித்திருக்கமுடியும்.

இராஜாவாகிய யோவாஸ் தவறிப்போன அடிப்படை காரணம் என்னவென்பதை நாம் முதலில் புரிந்துகொள்ளவேண்டும். இராஜா தன்னுடைய சொந்த அறிவினாலும், மாம்சகண்ணோக்கினாலும், முதன்மையாக பாவத்தில் விழுந்தார். தேவனுடைய வார்த்தைகளில் உள்ள வல்லமையை அவர் உணராமல், தூதுகொடுத்தவனின் பலவீனத்தை அவர் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் பிடித்திருந்த அம்புகள் தேவனுடைய வார்த்தைகளையும், உண்மையில் தெய்வீக வெற்றிக்கான வாக்குத்தத்தங்களும் என்பதை அறியாதிருந்தார். இதை சரியாக உணர்ந்திருந்தால், தன்னுடைய இருகரங்களினால், அவைகளை எடுத்து, தெய்வீக நோக்கம் பூர்த்தியாகுமட்டும் தரையில் அடித்திருப்பார். அந்த சம்பவத்தின் இறுதி பதிவு நமக்கு நினைப்பூட்டுகிறது போல, தேவனுடைய வல்லமை தீர்க்கதரிசியினிடம் இருக்கவில்லை அது தேவனுடைய வார்த்தையில் இருந்தது.- "அப்பொழுது அவர்கள், ஒரு மனுஷனை அடக்கம் பண்ணப்போகையில், அந்தத் தண்டைக் கண்டு, அந்த மனுஷனை எலிசாவின் கல்லறையில் போட்டார்கள். அந்த மனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலிசாவின் எலும்புகளின்மேல்பட்டபோது, அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான்." (11இரா 13:21)

ஒரு பிரேதம் எலிசாவின் எலும்புகளைத் தொட்ட போது அந்த எலும்புகளிலிருந்து வல்லமை புறப்பட்டு, அதற்கு உயிரைக் கொடுத்தது என்று ஒருவர் நம்பலாம், ஆனால் இப்படிப்பட்ட முடிவு, அதற்குள் ஆழமாக புதைந்திருக்கும் பாடங்களை நாம் புரிந்துக்கொள்ள அனுமதிக்காமல் நம்மை பழைய தவறுகளுக்கு வழிநடத்தி, மோசமான நிலையை அடையச் செய்யும். இரட்டிப்பான ஆவியோடு இந்த பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அநேக வருடங்களாக இந்த யுகத்தில் உள்ள பரிசுத்தவான்களின் நன்மைகளுக்காக இந்த பாடம் பாதுகாக்கப்பட்டுள்ளது. (ரோ 15:4)

எலியாவில் உள்ள ஆவியை காட்டிலும் இரட்டிப்பாக எலிசா பெற்றதினால் எலியாவைப்போல இரட்டிப்பான அற்புதங்களையும் நடப்பித்தார். (எலியா எட்டு அற்புதங்களைச் செய்தார், எலிசா பதினாறு அற்புதங்களைச் செய்தார்.) எலியா மற்றும் எலிசா, இருவரும் ஒவ்வொருவரை மரணத்திலிருந்து எழுப்பினார்கள். கல்லறையிலிருந்து இரண்டாவதாக, எழும்பக்கூடிய கடைசி சம்பவத்தில், "இரட்டிப்பு" என்ற காரியம் மீண்டும் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

இராஜாவாகிய யோவாஸ் தவறின காரியங்களில் உள்ள ஆழமான பாடத்திலிருந்து நாம் பயனடைய வேண்டும் என்றால், அந்த அம்புகளுக்குள் இருக்கும் தேவனுடைய வார்த்தைகளை நாம் கவனிக்கவேண்டும். எலியா மற்றும் எலிசாவின் வாழ்க்கையிலிருந்து, வெவ்வேறு பகுதிகளில் உள்ள விசுவாச வீட்டாருக்கு எவ்வளவு பயனுள்ள பாடங்கள் இருப்பினும், இன்று எலிசாவை காட்டிலும் மேலானவரும், ".. மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவராகிய..." நம்முடைய ஆண்டவருடைய பிரசன்னத்தில் இருக்கிறோம் என்பது உண்மையே. (கொலோ 1:18) இயேசுவே இரட்டிப்பான

ஆவியை உண்மையில் பெற்றவர். பரலோக வல்லமையை மட்டும் அல்ல புது சிருஷ்டியாகப் பிறந்து அளவற்ற வல்லமையையும் பெற்றிருக்கிறார்.

**நமக்குள்ள பாடங்கள்**

பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தை அம்புகளாக எய்யப்பட்டது. "அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்..... இதை அவர்கள் கேட்டப்பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து - சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்." (அப் 2:23,27) "உம்முடைய அம்புகள் கூர்மையானவைகள் ... இருதயத்திற்குள் பாயும்...." (சங் 45:5) மூவாயிரம் இருதயங்கள் ஒரே நாளில் கர்த்தரின் வசமாக திரும்பிக் கொண்டு வந்தது - இந்த அம்புகளே. (அப் 2:42)

இந்த யுகத்தின் சண்டைகளின் உச்சக்கட்டம் முடிவடையப் போகிறது. ஜெயங்கொண்டு இவைகளை முடிப்பதற்கான பொறுப்புகளை இந்த தலைமுறையில் பெறலாம். உலகம், மாம்சம், பிசாசு போன்ற எதிரிகள் இன்னும் நமக்கு முன் இருக்கிறார்கள். ஆகவே உறுதியோடு அவருடைய அம்புகளை எடுத்து, பலங்கொண்ட மட்டும் அடிப்போம்.

முதல் முறை - "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்." (யோவ 14:13)

இரண்டாவது முறை - " என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." (யோவ 14:14)

முன்றாவது முறை -"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கு, உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்." (யோவ 15:16)

இந்த கட்டத்தில் நம்முடைய கைகளைக் கட்டுப்படுத்தி வைப்போமா ? நம்முயை பிடியில் இரட்டிப்பான பங்கு கிடைக்க வாய்ப்பிருந்த போதிலும் நாம் எதுவும் செய்யாமல் நிற்போமா ?

நிச்சயமாக இல்லை !


நாம் நான்காவது முறையாக அடிப்போம் -" அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றும் கேட்கமாட்டீர்கள், மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.." (யோ 16:23)

ஐந்தாவது முறையாக - "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை, கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்." (யோவ 16:24)

மற்றும் ஆறாவது முறையாக - "அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். உங்ளுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்." ( யோவ 16 :26,27)

இதற்கு மேலே நம்முடைய கைகளை கட்டுப்படுத்துவோமா ? இல்லவே இல்லை, "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. " (ரோம 8:37)

சகலத்தையும் கொண்டிருந்த இராஜா



# உசியா

நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். - ரோமர் 12:16

Regis Liberda

மனித குணலட்சணங்களுக்குள் ஆர்வமிக்க ஒரு உள்நோக்கை உசியாவின் வாழ்க்கை, கொடுக்கிறது. இவைகளைப் பற்றிய காரிங்கள் IIஇரா 15:1-7 வசனங்களில் சுருக்கமாகவும், மற்ற விவரங்கள் IIநாளா 26ம் அதிகாரத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரயேலையும், யூதேயாவை ஆண்ட அநேக இராஜாக்கள் விக்கிரக ஆராதனைக்காராக இருந்தார்கள். வெகு சிலரே இந்த பாவத்திற்கு விலகியிருந்தார்கள். அந்த நல்ல இராஜாக்களில் உசியாவும் ஒருவர்.

ஆசாரியனாகிய யோய்தாவினால் ஏழு வயதில் முடிசூட்டப்பட்டு தன்னுடைய இராஜ்யபாரத்தைத் துவங்கின உசியா இராஜா யூதா இராஜாவாகிய யோவாசின் பேரன். யோய்தா உயிரோடிருந்த வரைக்கும் யோவாஸ் ஒரு நல்ல இராஜாவாக ஆட்சி புரிந்தார். ஆனால் யோய்தா மரணம் அடைந்தபின் அவன் விக்கிரக ஆராதனையை தழுவி, கர்த்தரைவிட்டு வழி விலகிப் போனான். யோய்தாவின் குமாரனாகிய சகரியாவையும் ஆலயத்தில் கொன்றுப் போட்டான். யோவாஸின் குமாரனாகிய அமத்சியாவும் தகப்பனைப் போலவே இருந்தான். துவக்கத்தில் அவனும் தேவனுக்கு பயந்திருந்தான். மிக அற்புதமான முறையில் யுத்தத்தில் வெற்றி வாங்கிக் கொடுத்த தேவனுக்குக் கீழ்ப்படிந்தான். ஆனால் அதற்கு பின் அவனுடைய வாழ்க்கை திசை திரும்பியது. தேவன் அவனை புறக்கணித்தார்.

**உசியாவின் செல்வாக்கு**

தன்னுடைய தகப்பன் மற்றும் தாத்தாவின் வாழ்க்கையை கண்ட உசியா இராஜா ஒரு நல்ல மனுஷனாக வாழ்ந்ததைக் குறித்து நாம் விளக்கம் அளிக்க முடியுமா ? நிச்சயமாக இல்லை. ஏனெனில், எசேக்கியாவைப் போல தேவனுக்குப் பயந்த இராஜாக்களுக்கு துன்மார்க்கமான தந்தைகள் இருந்தார்களே.

ஒரு மனுஷனுடைய செயல்பாடுகள், அதிகபட்சம் அவன் பெற்ற கல்வி அறிவையும், பண்புதிறனையும் சார்ந்திருக்கும். மேலும் பெறக்கூடிய நல்ல அனுபவங்கள் மற்றும் தீமையான அனுபவங்களின் வழியாகவும் பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். உசியா இராஜாவை பொருத்தவரைக்கும். "அவன் தன் தகப்பனாகிய அமத்சியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதை செய்து, தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே தேவனைத் தேட மனதிணங்கியிருந்தான், அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்தார். " (IIநாளா 26:4,5)

துரதிஷ்டவசமாக, இந்த சகரியாவைப்பற்றி நமக்கு எந்த விதமான காரியமும் கொடுக்கப்படவில்லை. ஆனால், ஒருவேளை இவர் உசியா ராஜாவுக்கு ஆலோசனைக்காராக இருந்திருக்க வேண்டும். அல்லது பிரதான ஆசாரியனாகவும் இருந்திருக்கலாம். தேவனுடைய தரிசனங்களை சகரியா தெளிவாகப் புரிந்திருந்தால் நிச்சயமாக இராஜாவுக்கு நல்ல ஆலோசனைகளைக் கொடுத்திருப்பார்.

உசியா இராஜா தொடர்ந்து அடைந்த வெற்றிகளைப்பற்றி நாளாகம புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு நல்ல இராஜாவுக்கு தேவைப்பட்ட அனைத்தையும் பெற்று, சிறப்புமிக்கவராக ஆட்சி புரிந்தார். யூதாவின் எதிராளிகளோடு எதிர்த்து போர்புரிவதற்குத் தகுந்த விதத்தில் நவீன முறையில் தன்னுடைய தரைப்படையை அமைத்திருந்தார். தன்னுடைய போர் சேவகர்களைப் பிரித்து அனுப்பினார். (307,500வீரர்கள்) (வசனம் 13). இப்படியாக பிரிந்து போரிட்டால் யுத்தத்தில் எளிதில் வெற்றி பெற முடியும் என்று திட்டமிட்டார். ஒவ்வொரு போர் வீரனும் சர்வாயுதங்களைத் தரித்திருந்தார்கள். பொதுவாக, எல்லாவற்றிலும் அவருடைய இராஜயம் சுபிக்ஷமாக இருந்தது.

அவர் யூதா பட்டணங்களைச் சுற்றி கோட்டைகளைக் கட்டினார். விசேஷமாக எருசலேமில் இரண்டு புதிய கோபுரங்களைக் கட்டினார். யுத்தத்திற்குரிய நவீன இயந்திரங்களைக் கண்டுபிடிக்க ஊக்குவித்தார். "கோபுரங்கள்மேலும் அலங்கக்கோடிகள் மேலும் நின்று அம்புகளையும் பெரிய கற்களையும் பிரயோகிக்கிறதற்கு நிபுணரான தொழிலாளிகள் கற்பித்த எந்திரங்களையும் அவன் எருசலேமில் உண்டாக்கினான், அப்படியே அவன் கீர்த்தி வெகுதூரம் பரம்பிற்று, அவன் பலப்படுமட்டும் ஆச்சரியமாய் அவனுக்கு அநுகூலமுண்டாயிற்று." ( IIநாளா 26:15)

அவருடைய முன்னேற்பாட்டின் பலனாக எல்லா சத்துருக்களையும் அழித்து, அவர்களுடைய அரணகளை நிர்மூலமாக்கி வெற்றி அடைந்தார். அவருடைய புகழ் எகிப்து வரைக்கும் பரவியது. அம்மோனியர்கள் அவருக்குப் பரிசளித்தனர். (வசனம் -8)

கால் நடைகள் மற்றும் விவசாயம் ஆகிய இரண்டு இயற்கை சொத்துக்களை அதிகமாகப் பெருக்கி. தன்னுடைய தேசத்தின் பொருளாதாரத்தை அதிகரித்துக் கொண்டார். "அவனுக்குப் பள்ளத்தாக்கிலும் சமபூமியிலும் அநேகம் ஆடுமாடுகளும். மலைகளிலேயும் வயல்வெளியிலேயும் பயிர்குடிகளும். திராட்சத்தோட்டக்காரரும் உண்டாயிருந்தபடியினால்.

அவன் வனாந்தரத்திலே கோபுரங்களைக் கட்டி, அநேக துரவுகளை வெட்டினான். அவன் வெள்ளாண்மைப் பிரியனாயிருந்தான்" (11நாளா 26:10) உசியா ஒரு மிக சிறப்பான இராஜாவாக ஆட்சி செய்து வந்தார். அவர் ஒரு நல்ல போர்வீரனாக மட்டும் அல்ல, ஜனங்களின் நலனைக் கருதி, புதுமையான யோசனைகளுக்கு வழிவகுத்தார். தேவன் அவருக்குள் வாசமாயிருந்ததினால்,அவர் செய்த சகல காரியத்திலும் முன்னேறினார்.

**உசியாவின் பாவம்**

அவருடைய அற்புதமான சாதனைகளை வாசித்தறிந்தப்பின் "அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமான மீறுதல் செய்து, தூபபீடத்தின்மேல் தூபங்காட்டக் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான். ஆசாரியனாகிய அசரியாவும், அவனோடேகூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பதுபேரும், அவன் பிறகே உட்பிரவேசித்து, ஆசாரியனாகிய அசரியாவும், அவனோடேகூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பதுபேரும், அவன் பிறகே உட்பிரவேசித்து, ராஜாவாகிய உசியாவோட எதிர்த்துநின்று உசியாவே, கர்த்தருக்கு தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்தத்தல்ல, தூபங்காட்டுகிறது பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே அடுக்கும். பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியே போம், மீறுதல் செய்தீர். இது தேவனாகிய கர்த்தராலே உமக்கு மேன்மையாக லபியாது என்றார்கள். அப்பொழுது உசியா கோபங்கொண்டான், அவன் தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து, ஆசாரியரோடே கோபமாய்ப் பேசுகிறபோது, ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன்நிற்கிற அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று. பிரதான ஆசாரியனாகிய அசரியாவும் சகல ஆசாரியரும் அவனைப் பார்க்கும்போது, இதோ, அவன் தன் நெற்றியிலே குஷ்டரோகம் பிடித்தவனென்று கண்டு, அவனைத் தீவிரமாய் அங்கேயிருந்த வெளிப்படப்பண்ணினார்கள். கர்த்தர் தன்னை அடித்ததினால் அவன் தானும் வெளியே போகத் தீவிரப்பட்டான்." (11நாளா 26:16-20) என்ற இந்த வசனங்களை வாசிப்பதறகு ஆச்சரியமாக இருக்கிறது.

உசியாவின் பாவங்கள் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. அவருடைய பாவத்தையும், தண்டனையையும் மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்கையில், யூதாவையும் இஸ்ரயேலையும் ஆண்ட 39 இராஜாக்களில் ஏழு பேர் மட்டுமே தேவனுடைய பார்வையில் நீதியாக வாழ்ந்தனர். சில மோசமான இராஜாக்கள் நீண்ட காலம் ஆட்சி செய்தனர். ஆனாலும் அவர்களுக்கு எந்தவிதமான தண்டனையும் கிடைக்கவில்லை !

தேவன் கட்டளையிட்டபடி சவுல் அனைத்து கால்நடைகளையும் கொல்லாததினால் (1சாமு 15:9) அவர் இராஜாவாக இராதபடிக்கு தள்ளப்பட்டார். தாவீது உரியாவை கொன்றதினால், உரியாவின் மனைவியினிடத்தில் அவர் பெற்ற முதல் குமாரன் மரித்துபோனான். அதற்குபின் இஸ்ரயேலரை இலக்கம் பார்த்ததினால் எழுபதாயிரம் பேர்கள் வாதையினால் அழிந்தார்கள். சாலோமோன் தன்னுடைய மனைவிகளின் சொல்கேட்டு விக்கிரகாராதனைக்கு சாய்ந்துபோனார். (1இரா 11:9-13) அவருடைய மரணத்திற்குபின் தேசம் பங்கிடப்பட்டது.

அதேபோல உசியா ஆலயத்தில் தூபபீடத்தில் தூபம் காட்டினார். உடனடியாக குஷ்டம் அவரைப் பிடித்தது. அவர் விக்கிரகாராதனையோ, கொலையோ செய்யவில்லையே. உண்மையில் அவர் தேவனைக் கனப்படுத்த விரும்பினார். ஆனால் பெருமை என்னும் பாவம் அவரை ஊக்குவித்ததால், முறைபடி ஆசாரியர்கள் செய்யவேண்டிய காரியத்தை அங்கீகரிப்பைப் பெறாமல் செய்தார்.

தேவன் தனக்கென்று ஒரு விசேஷத்த ஊழியக்கார வகுப்பை வைத்திருந்தார் - லேவி கோத்திரம். தேவனுடைய ஆலயத்தில் பலிசெலுத்தவும் தூபம் காட்டவும் ஆசாரியர்கள் அந்த கோத்திரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த முறைகள் ஏற்படுத்தினதற்கு நீண்ட காலத்திற்குப்பின் இராஜாக்களின் காலம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆகவே ஒரு இராஜா இஸ்ரயேல் ஜனங்களின் மேல் ஆளுகை செலுத்தினாலும், அவன் தேவனுக்கும் ஜனங்களுக்கும் இடையில் மத்தியஸ்தனாக முடியாது. இந்த ஒரு அதிகாரத்தை இராஜா பெறவில்லை, அந்த அதிகாரத்தை உசியா தன் கையில் எடுத்துக் கொண்டார்.

ஒருவர் மகிழ்ச்சியாக இருப்பதற்கு தேவையான சகலத்தையும் பெற்றிருந்த போதிலும் இன்னும் புதிதான, காரியங்களை அதிகமாக வாஞ்சித்து, இதை பெற்று விட்டால் சகலத்தையும் உண்மையில் பெற்று விட்டோம் என்று நினைப்பவர்கள் பொதுவாக உசியாவின் பாவங்களை அனுபவிப்பார்கள்.

தன்னுடைய ஜீவியத்திற்கு தேவையான பாதுகாப்பு, சிநேகிதர்களின் நேசம், குடும்பத்தாரின் அன்பு உள்பட தேவையான அனைத்தையும் ஒருவர் பெற்றிருந்தால் அவர் நிச்சயமாக மகிழ்ச்சியாக இருப்பார். ஆனால் சிலருக்கு இது போதாது. மற்றர்வர்களின் மதிப்பை, அதிகாரமாகப் பெற்றுக்கொண்டு மிகப்பெரிய காரியங்களை அடைவதன் அடிப்படையில் அவர்களின் சந்தோஷம் இருக்கலாம். ஒரு சிறப்பான மேலாளர் ஒரு புத்தகம் எழுதவேண்டும் என்று விரும்பலாம். அவரிடம் பணம் இல்லாததினால் அவரால் அதை அச்சடிக்க முடியவில்லை. இந்த உலகத்தில் உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஒரு மாஜி தலைவர் சர்வதேச அளவில் ஒரு கூட்டணியை ஸ்தாபிக்கலாம்.

சில அரிதான சந்தர்ப்பங்களில் கிளர்ச்சியூட்டும் தவறானக் காரியங்களாக இருந்தாலும், அதை செய்வதற்கு சிலர் முடிவெடுப்பார்கள். தண்டிக்கப்படாத அளவுக்கு எந்த தப்பையும் தங்கள் விருப்பபடி செய்யலாம் என்பதை சிந்திப்பதற்கான வல்லமையை இது தரும். சில வல்லமையுள்ள அரசியல்வாதிகள் இப்படிப்பட்ட நடத்தைகளை வெளிப்படுத்துகிறார்கள்.

அமெரிக்காவில், இப்படிப்பட்ட நடத்தை உள்ளவர்கள் பெரும்பாலும் தங்களுடைய அரசியல் பயணத்தை முடித்திருக்கிறார்கள். அவர்களைக் குஷ்டரோகம் பிடிக்காவிட்டாலும், அதுப்போன்ற பாதிப்புகளை அடைந்து விடுகிறார்கள்.

உசியாவுக்கு அதே காரியமாக ஏற்பட்டது. அவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததினால் அனைத்திலும் வெற்றி பெற்றார். ஆனால் அவர் இன்னும் அதிகமாக வாஞ்சித்தார். அவருடைய ஆளுகையில் சிகரத்தை அடைந்தார். எந்த ஒரு சவாலும் மீதியிருக்கவில்லை. அவர் அடைய நினைத்த அனைத்து இலக்குகளையும் அடைந்தார். அவர் ஒரு சிறந்த இராஜாவாக அனைவர் நினைவிலும் இருக்க விரும்பினார். மத அதிகாரத்தை முழுமையாக பெற்றவர்கள் - ஆசாரியன் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆயினும், அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி, இராஜாவாகிய தன்னுடைய அதிகாரத்தை முழுமையாக செயலாற்ற வேண்டும் என்று அவர் யோசித்ததினால் சோதனைக்கு உட்பட்டார். இந்நாள் வரைக்கும் அவருடைய வாழ்க்கையில் வழிபட்டுவந்த தேவனை மற்ற இராஜாக்களைக் காட்டிலும் அதிகமாக, கனப்படுத்த வேண்டும் என்று நினைத்த போது அந்த சோதனை இன்னும் பலமாக்கப்பட்டது. மேலும் ஆசாரியர்கள் அவருடைய பிரஜைகளாக இருந்ததினால், அவர்கள் அவருக்கு கீழ்ப்படிய வேண்டியதாக இருந்தது. இப்படிப்பட்ட பகுத்தறியப்பட்ட பெருமையினாலே பாவம் வேகமாக உட்புகுந்தது.

**நமக்குள்ள பாடம்**

உசியாவின் பாவங்களைப் பார்க்கும்போது, நாம் இப்படிப்பட்ட சந்தர்பங்களை எளிதில் கற்பனை செய்து பார்க்கலாம். உசியாவின் பாவம், ஒழுக்கக்கேடுள்ளதென்றும் அல்லது உலகம் சொல்லுகிற விதமாக ஒரு மிகப்பெரிய குற்றம் என்றும் சொல்லமுடியாது. தேவனால் ஒரு சிறந்த பதவியைப் பெற்றவரும், தேவனால் அளவுக்கு அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டவரும், தேவனைத் தொடர்ந்து ஆராதித்து வந்த உசியா இதை செய்தார். நன்மையான நோக்கம் இருதயத்தில் இருந்தால், எதை செய்தாலும் தப்பில்லை என்று அவர் எண்ணியது தவறாயிற்று.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கும் ஒரு கிறிஸ்தவன் தன்னுயை அனைத்து தேவைகளும் பூர்த்தியடையக்கூடிய நிலையில் இருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் நல்ல வேலை, நல்ல குடும்பம், வீடுகளைப் பெற்றிருக்கலாம். மேலும் கிறிஸ்துவ அமைப்பில் அதிகமாக உதவிகள் செய்பவர் என்று மற்றவர்களால் புகழப்படக்கூடியவராகவும் இருக்கலாம். இப்படிப்பட்ட சாதகமான நிலையை மகிழ்ச்சியோடு வாழ்ந்து, கடுமையான பிரச்சனைகள் ஏதும் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருப்பவர்கள் உசியாவின் நிலைக்கு தள்ளப்படலாம். இவர்கள் மிகுந்த அபாயத்தில் இருப்பவர்கள். மற்றவர்களைக் காட்டிலும் மிகப்பெரிய நிலையில், அதிகமாகச் செய்யவேண்டும் என்ற சோதனைக்குள் எளிதில் அகப்படுவது மிகவும் அபாயமானது. இப்படியாக வளர்ச்சி அடையக்கூடிய பெருமை, மற்றவர்களை தனக்குக் கீழ்ப்படுத்த முயற்சிக்கும் குணங்கள், இறுதியில் மற்றவர்களின் சிந்தனைகளையும் யோசனைகளையும் கேட்பதற்குக்கூட மறுத்துவிடும். எவ்வளவு செலவானாலும் கவலையில்லை, மற்றவர்களுக்கு முன் ஒரு மிகப்பெரிய தயாள பிரபுவாகவோ, நல்ல பாடகராகவோ, நல்ல போதகராகவோ, சிறப்பான பேச்சாளராகவோ காட்சி அளிப்பதற்கு உறுதியான விருப்பம் கொண்டவர்கள் சாதுரியமான சோதனையில் அகப்படுகிறார்கள். தன்னுடைய சுய-மகிமையையும், பிரதாபத்தையும் இருதயத்தின் நோக்கமாக கொண்டிருப்பவர்கள் இப்படிப்பட்ட இலக்குகளை அடைவது மனிஷருக்கு முன் பெருமையாக இருக்கலாம். ஆனால் தேவன் இதை ஒருபோதும் மெச்சிக்கொள்ளமாட்டார்.

ஊசியாவைக் காட்டிலும் இஸ்ரயேல் மற்றும் யூத இராஜாக்கள் அதிகமாகப் பாவம் செய்திருந்தார்கள். ஆயினும் அவர்களுடைய எதிரிகளால் ஒடுக்கப்பட்டதை தவிர அவர்கள் எந்தவிதமான விசேஷத்த தண்டனையும் பெற்றதாக வேதாகமம் குறிப்பிடவில்லை. ஆனால் முன்னதாக உசியாவை ஆசீர்வதித்திருந்தாலும், இறுதியில் தேவன் உசியாவை இழிவுபடுத்தி தண்டித்தார். உசியா திடிர் என்று பாவம் செய்தாரா ? அவருக்கு கொடுக்கப்பட்ட அந்த தண்டனை நியாமானதா ? ஆம் தேவனோடு மிக நெருக்கமாக வாழ்ந்த உசியா, எல்லாவற்றையும் நன்கு அறிந்திருந்தபடியால், அவர் பெற்ற தீர்ப்பு நியாயமானதாக இருந்தது.

நமக்கு மற்றும் ஒரு பாடம் உள்ளது. நாம் இப்போது இராஜாக்கள் அல்ல, ஆனால் நாம் அனைவரும் தேவனை அறிந்தவர்கள். அவருடைய அன்பு மற்றும் மனுக்குலத்தை மீட்க அவர் வகுத்த அற்புதமான திட்டங்கள், அனைத்தையும் அறிந்திருக்கிறோம். நமக்கு இனி ஒன்றும் தேவை இல்லை. நாம் இனி வாழக்கூடிய சொற்ப காலத்தில் தேவனுடைய சித்தத்தை மட்டுமே நம்மால் முடிந்த வரைக்கும் செய்யவேண்டும்.

ஆகவே மனுஷருக்கு முன் நம்முடைய நாமத்தை அல்ல பரலோக பிதாவின் நாமத்தையே பறைசாற்ற நம்முடைய முழு பலத்தையும் பயன்படுத்துவோம். அவர் நம்முடைய பக்தி வைராக்கியத்தை மட்டும் அல்ல நம்முடைய தாழ்மையையும் கண்ணோக்குபவராக இருக்கிறார். ஏனெனில் - "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்......" (1பேது 5 :5) என்று பேதுரு கூறுகிறார்.

உசியாவின் பாவத்தை நம்முடைய வாழ்க்கையில் தவிர்ப்பதே நமக்குள்ள தாழ்மையை வளர்க்கக் கூடிய சிறந்த வழியாகும்.

## தீர்க்கதரிசனத்தில் இன்று

# குடியேறுதலைப் பற்றிய செய்திகள்

*பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் பாபேல் எண்ணப்பட்டது, கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார் - ஆதி 11:9*

வெளி நாட்டினர் குடியேறுவதை அமெரிக்கா வரவேற்றாலும், அதினால்வரும் பிரச்சனைகளை அதனால், சமாளிக்க முடியவில்லை. 1965 மற்றும் 1990ல் போடப்பட்ட குடியேறுதலைப்பற்றிய பாராளுமன்றத்தின் சட்டங்கள், குடியேறுபவர்களை ஊக்குவித்தது. ஆனால் அந்த அரசாங்கத்திற்கும், உள்நாட்டு அரசாங்கத்திற்கும் பிரச்சனைகள் ஏற்பட்டது. இதன் விளைவாக அரசாங்கத்தின் நன்மைக்காகவும், ஊழியத்திற்காகவும் மெக்சிக்கோ எல்லைகளை அடைந்து, குடிபெயர்ந்து போகும் ஜனங்களை தடுப்பது சம்மந்தமான சட்டங்கள் போடப்பட்டது. முறைக்கேடாக குடியேறுபவர்களை எதிர்த்து அரிஸோனியாவின் போர் நடவடிக்கைகள், பிரச்சாரம் செய்தனர். இதையொட்டி அநேக விவாதங்கள் எழும்பியது. அணு ஆயுதங்களை ஏந்திய, ஈரானின் அபாயங்களைக்குறித்து சம்பாஷிக்கும்போது, அரிஜோனா சட்டத்தைப்பற்றிய புகாருகளைத் தள்ளிவிடும்படி ஜீன் மாதம் ஹிலாரி கிளிண்டனின் காரியதரிசி கட்டாயப்படுத்தப்பட்டார்.

குடியேற்பு பற்றி படித்தவர்கள், சரியான அணுகு முறையில் இந்நாளுக்குரிய வாதங்களை நடத்துகிறார்கள். குடியேற்பு பிரச்சனைகள் -"அரசியல், சமுதாயம், பொருளாதாரம், பழக்கவழக்கங்களில்" - அனைத்திலும் எழும்புகிறது என்று மெத்தடிஸ்ட் பல்கலைகழகத்தைச் சேர்ந்த ஒரு அரசியல் விஞ்ஞானி, ஜேமஸ் எப் ஹொலி பில்டு அறிவித்தார். பியூ ஆராய்ச்சியாளர்களின்படி, சமுதாயத்தில் முறைக்கேடாக குடியேறுபவர்களை ஒட்டுமொத்தமாக தடுக்கும்படியாக 68% அமெரிக்கவாசிகள் குடியேறுபவர்களின் சட்டங்களின் மாற்றத்தை வரவேற்கிறார்கள். 46% ஜனங்கள் முறைக்கேடாக குடியேறினவர்களின் பிள்ளைகளுக்குக் குடிஉரிமையைத்தானாக இரத்தாகும்படிக்குச் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று விரும்பினார்கள்.

### குடியேறுவதன் முக்கியத்துவம்

உலகம் விவாசயத்திலிருந்து, இயந்திர தொழிலுக்கு முக்கியத்துவத்தைக்கொடுத்து, உலகளவில் வணிகத்தையும், வியாபாரத்தையும், முதலீடுகளையும் விரிவாக்கி, அந்த உற்பத்திப்பொருட்களும் எல்லா நாடுகளுக்கும் எளிதாகச் செல்வதற்கு எல்லைகளையும் திறந்திருக்கிறது. ஒவ்வொரு தொழிலாளியும், சிறந்த வேலைகளுக்கு மிகுந்த கூலியைப் பெறுவதற்கு ஒவ்வொரு நாடாக பயணிக்கிறார்கள். உலகளவில் பொருளாதாரம், குடியேற்றத்தை அதிகரித்தது. 20 வருடங்களுக்குள் 37% குடியேற்புகள் (குடியேற்றங்கள்) அதிகரித்திருப்பதாகவும், அதோடு, உலக ஜனத்தொகையில் சுமார் 3% ஜனங்கள் ஒரு தேசத்திலிருந்து மற்ற தேசங்களுக்கு குடியேறியிருப்பதாக ஐ நா (நாடுகள்) மதிப்பிடுகிறது. மேலும் 700 மில்லியன் மனிதர்கள், வாய்ப்புகள் கிடைத்தால் வேறு தேசத்திற்குக் குடியேற விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று காலக்கண்ணோட்டம் குறிப்பிடுகிறது.

குடியேறுவதன் மூலம் இஸ்ரயேல் தேசம் அதிகமாக ஆதாயம் பெறுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் யூதர்கள் பாலஸ்தீனாவில் குடியேறுவதை தியோடர் ஹர்சல் வரவேற்றார் என்று Der Judenstaat என்ற பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டது. அன்றைய தினத்திலிருந்து உலகத்தின் பல இடங்களிலிருந்து சென்ற யூதர்களின் எண்ணிக்கை 25,000 பேர்களிலிருந்து அதிகரித்துக்கொண்டு 6மில்லியனாக உயர்ந்திருக்கிறது.

சில ஜனங்கள், விசேஷமாக யூத பரம்பரையில் உள்ளவர்கள், உபத்திரவங்களுக்குத் தப்பித்துக்கொள்வதற்கு கட்டாயமாக இடம் மாறினார்கள். மற்றவர்கள் மனமுவந்து குடியேறினர். சில நாடுகளில், இப்படியாக குடியேறினவர்கள், மலிவான தொழிலாளிகளாக பயன்படுத்தப்படுகிறார்கள். மற்ற நாடுகளில் இவர்கள் பெற்றிருந்த அறிவுத்திறனால் உபத்திரவப்பட்டார்கள். சமீபத்தில் முறைக்கேடான குடியேற்றத்தைப்பற்றிய விவாதம் நடந்தபோது, - சட்டத்தைக்காத்து, நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குவதில் முக்கியப் பங்குவகித்த பெரும்பாலான குடியேறினஜனங்களுக்கு, எதிரான ஒரு உணர்வு எழும்பியது.

பொதுவாகத் தங்களுடைய சொந்த தேசத்திலிருந்து அகதிகளாக மற்ற தேசங்களுக்குக் குடியேறுபவர்கள் அநேகர் மரித்து விடுகிறார்கள். மற்ற தேசங்களுக்குச் செல்வது சட்டத்திற்கு விரோதமான தவறு என்று உணரும்படியாக உணர்ச்சிப்பூர்வமான தலைப்புச் செய்திகளை விட்டுச்செல்கிறார்கள்.

## அனைத்தையும் முடிவுக்கு கொண்டுவரும் தேவனுடைய இராஜ்யம்

ஜலப்பிரளயத்திற்குப்பின், "தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து - நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்." (ஆதி 9:1) என்று கட்டளையிட்டார். மனுக்குலம் பூமியெங்கும்

பரவி அதை ஆண்டுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஜலப்பிரளயத்திற்குப்பின் பூமியில் உள்ள ஜனக்கூட்டம் கிழக்கு திசையை நோக்கி குடிபெயர்ந்ததாக வேதாகமம் விவரிக்கிறது. "ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணுகையில், சிநேயார் தேசத்திலே சமபூமியைக்கண்டு, அங்கே குடியிருந்தார்கள்." (ஆதி 11:2) பிரிந்து வாழ்வதற்கான கட்டளைகளைப் பெற்ற பின்னும் மனுக்குலம் ஒருமித்து வாழத் துவங்கியது. இவர்கள் குறைவான எண்ணிக்கையில் இருந்ததினால் ஒருமித்து வாழ்ந்தார்கள். அவர்கள் இணைந்து அந்த கோபுரத்தைக் கட்டுவது எளிதாகத் தோன்றியது. "அப்பொழுது கர்த்தர் - இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள், அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது. அவர்கள் இதைச் செய்யத்தொடங்கினார்கள், இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள். நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுகிறதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார். அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள்." (ஆதி 11:6-8)

மனுக்குலம் சிதறி வாழத்துவங்கியதால் - பிரிவுகளும் சுயநலங்களும், சுதந்திரங்களும், வகுப்புகளும் ஜாதிகளும் பிரிந்தன. இவைகள் சண்டைகளைப் பிறப்பித்து யுத்தங்களில் முடிவடைந்தது. ஆயினும் இதன்விளைவாக பூமியெங்கும் மனுக்குலம் பரவி, நிலங்களைப் பண்படுத்தினார்கள்.

இன்றையக்காலத்தில் ஜாதிகளின் பிரிவுகளைத் தகர்த்து, தவறான அபிப்பிராயத்தை விலக்கி, ஜனங்கள் ஒன்றாய்ச் சேர்ந்துவாழ விரும்புகிறார்கள். துவக்கத்தில் எந்தத்தவறான அபிப்பிராயமும் இல்லாமல், எல்லா தேசத்தின் ஜனங்களும் ஒன்றோடொன்றாகக் கலந்துவாழ விரும்பினார்கள். ஆனால், மெதுவாக காலம் செல்லச்செல்ல கருத்து வேறுபாடுகள் வந்துவிடுகிறது. ஒரு தேசம் அல்லது நிர்வாகம் தோல்வி அடைந்தால், அந்த தேசத்தை மட்டும் பாதிக்காமல் அதை தொடர்புள்ள தேசங்களும் பாதிப்புக்கு உள்ளாகிறது. ப்லு, எய்ட்ஸ் மற்றும் பல தொற்று நோய்கள் - அது உற்பத்தியான தேசத்திலிருந்து பல நாடுகளுக்கு பரவி விடுகிறது. இப்படியாக கலந்து வாழ்வதினால், உலக அளவில் இருக்கவேண்டிய கூட்டுறவு மிகவும் அவசியம் என்று நிரூபிக்கப்படுகிறது. இந்த நூற்றாண்டில் உலக அளவில் உள்ள உடல் நல ஆரோக்கியம், அனைத்து நாடுகளும் பகிர்ந்து கொள்ளவேண்டிய பொறுப்புகளில் உள்ளார்கள். இதில் தேவையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்குண்டானக் கூட்டமைப்புகளும் சரியான வழிமுறையில் செயல்படுத்தப்படுகிறது.

ஆகவே நம்முடைய காலத்தில் மனுக்குலத்தின் விருப்பபடி அனைவரையும் இணைக்க வேண்டிய நோக்கம் பரவியிருக்கிறது. அதிகமான சுயநலம் இருந்தபோதிலும் தேவன் இந்த காரியங்களைத் தன்னுடைய இராஜ்ய ஸ்தாபனத்தின் ஆயத்தத்திற்காக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். மிகக் கடுமையாகப் போராடி, உபத்திரவங்கள் மத்தியிலிருந்துத் தப்பித்துக் கொள்ளவும், அதற்குபின் வேறு நல்ல சூழ்நிலையைத் தேடவும், கல்லறைக்குச் சென்றவர்கள் உயிர்த்தெழுதலின்போது அவர்கள் எதிர்பார்த்ததைவிட மிக நேர்த்தியான சூழ்நிலையில் எழும்புவார்கள். (ஏசா 35:8-10) பெர்லின், சுவர் ஏற முயற்சித்தப்போது கொல்லப்பட்டவர்கள், அதேபோல, பாலைவனத்தைக் கடக்கும்போது மரித்துப்போனவர்கள், அரசியலுக்குப் பதிலாக தேவனுடைய சட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கும், தேவனுடைய இராஜ்யத்தில் எழுந்து "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும். எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்" (ஏசா 2:2) என்பார்கள். மனிதர்கள் தங்களுடைய இனம், நிறம், ஜாதி, பிரிவுகளின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படமாட்டார்கள். "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." (செப்பனியா 3:9)

அப்போது என்ன நடக்கும் ? முழு மனுக்குலமும் ஒரே குடும்பமாக இருக்கும், ஒரே நோக்கத்துடனும், காரணத்தோடும் தேவனைத் துதித்துப் போற்றி, அவரைத் தொழுதுகொண்டு பணிசெய்யவிரும்புவார்கள் !

**வேத மாணவ ஐக்கிய சபை,**

**சங்கிலியாண்டபுரம் கிளை, திருச்சி.**

**Cell : 9244611241, 9688975724**